வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

மில்க்வைற் நீலசோப்




பிரகாசமாய் சலவை செய்கிறது

மில்க்வைற் சோப் தொழிற்சாலை யாழ்ப்பாணம்

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

புத்தகம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 1993 ஆவணி திங்கள் 10-ம் நாள் (26—8—1962) ஞாயிற்றுக்கிழமை ரபி. அவ் 24 | இதழ் 13

# சரித்திரப் புகழ்பெற்ற மன்னார் மாநாடு

## சைக்கிள் ஊர்வலம்




மன்னார் மகாநாட்டுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் சைக்கிள் ஊர்வலத்தின் பாதைகள் இங்கு தரப்பட்டுள்ளன.

## தமிழ் பேசும் இனம் ஒன்று பட்டு ஓரணியில் திரளுகிறது

### வருக! வருகவென அழைக்கின்றார் தமிழரசுத் தந்தை

வடக்கும் கிழக்கும் மட்டுமல்லாமல், மலைநாட்டு மக்களும் பங்குகொள்ள விருக்கின்ற இம்முறை மன்னார் மகாநாடு சகல துறைகளிலும் சிறப்புடையதாக விருக்கும். மகாநாட்டுக்கு வரும் உறுப்பினர்களையும், ஆதரவாளர்களையும் வரவேற்று உபசரிக்க மன்னார் மக்கள் தயாராகின்றனர். தமிழ் பேசும் மக்கள் அனைவரும் இம் மகாநாட்டில் தவறாது பங்குபற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன. இவ்வாறு தமிழரசுத் தந்தை திரு சா. ஜே. வே. செல்வநாயகம் ஒரு கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆகஸ்ட் மாதம் 31ம் திகதியும் செப்டம்பர் 1, 2ம் திகதிகளிலும் மன்னாரில் நடைபெறவிருக்கும் தமிழரசுக் கட்சி எட்டாவது தேசிய மகாநாடு அதிமுக்கியம் வாய்ந்ததாகும். மன்னாரில் நடைபெறும் தமிழரசுக் கட்சியின் முதல் மகாநாடு ஆகும். மன்னாரில் நடைபெறும் அரசியல் மாநாடும் இதுவேயாகும். மன்னாரில் இதுவரை எந்த அரசியற் கட்சியும் மகாநாடு கூட்டியது கிடையாது. சரித்திர வரலாற்றுப் பெருமைமிக்க இம்மகாநாட்டுக்கு தமிழ் பேசும் மக்கள் பல்லாயிரக் கணக்கில் திரண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

மன்னார் பகுதியில் மக்கள் தொகையினர் மிகக்குறைவு. ஆகவே, அங்கு நடைபெறவிருக்கின்ற மகாநாட்டிற்கு ஆதரவாளர்கள் அதிகமாக வரவேண்டும் என்றும் மன்னார் மக்கள் விரும்புகின்றனர். மகாநாட்டுக்குச் செல்லவிருக்கும் ஆதரவாளர்களையும், உறுப்பினர்களையும் தகுந்த முறையில் வரவேற்று உபசரிக்க மன்னார் மக்கள் வேண்டிய ஆயத்தங்களைச் செய்து வருகின்றனர்.

இதுகாலவரை வடக்கும் கிழக்கும் மட்டுமே இணைந்து தமிழ் முழக்கம் செய்தன. இம்முறை மலைநாடும் வடகிழக்குடன் சேர்ந்துகொள்ளும் என்பதற்கு அடையாளமாக இம்முறை மலைவாழ் தமிழ் மக்களும் மகாநாட்டுக்குத் திரண்டு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே இலங்கைவாழ் தமிழ்பேசும் இனம் ஒன்றுபட்டு நடாத்த இருக்கும் மன்னார் மகாநாட்டிற்கு தமிழ்பேசும் மக்கள் அனைவரும் திரண்டுவர வேண்டுமென்று கோருகிறோம்.

## தமிழ்ப் பகுதிகளில் நிலம் வழங்குதல்

தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதிகளில் உள்ள முடிக்குரிய பூமியில் பெரும் பாகத்தை பொதுமக்களுக்கு வினியோகிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. தனிப்பட்டவர்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வழங்கப்படவுள்ளன. இப்பூமியை தமிழ்ப் பேசும் மக்கள் நன்கு பயன்படுத்தியாக வேண்டும்.

வரண்ட நிலப் பகுதிகளான யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், வவுனியா, அம்பாறை ஆகிய இடங்களில் உள்ள பெருந்தொகையான முடிக்குரிய பூமியை காணிக் கச்சேரி மூலம் பொது மக்களுக்கோ அல்லது கூட்டுறவுச் சங்கங்களுக்கோ வினியோகிக்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. வினியோகிக்கப்படும் பூமி நெல், புகையிலை, வெங்காயம், முந்திரிச் செய்கை, பழவகை மரங்கள், பலவித தானியங்கள் ஆகிய உற்பத்தி செய்யக் கூடிய வசதியுள்ளது. மந்தை வளர்ப்புக்கும் பூமிகள் கொடுக்கப்படவுள்ளன.

தனித் தனியாகவோ அல்லது கூட்டாகவோ சேர்ந்து இப்பூமிகளுக்கு விண்ணப்பிக்கலாம். தனி நபர்களுடைய விண்ணப்பங்களைப் பார்க்கிலும் ஐந்து பேருக்குமேல் சேர்ந்து கூட்டாக விண்ணப்பித்தால், பூமி இலகுவாகக் கிடைக்கும் என்று அறியப்படுகிறது.

பூமி பெற விரும்புவோர் செப்டம்பர் மாதம் 14ம் திகதிக்கு முன்னர் காணி அதிகாரிக்கு விண்ணப்பித்தல் வேண்டும். இதன் பூரா விபரங்களையும் ஆகஸ்ட் 17ல் வெளியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை 496ம் பக்கத்தில் பார்க்கலாம்.

இந்தப் பொன்னான சந்தர்ப்பத்தை, தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதிகளின் முன்னேற்றத்தில் நாட்டமுள்ள சகலரும் பயன்படுத்திக் கொள்ளுவார்களென எதிர்பார்க்கிறோம்.

## தமிழ் மண்ணில் அடுத்து வரும் பௌத்தக் குடியேற்றம்

வடமத்திய, கிழ் மாகாணங்களிலே உள்ள பௌத்த ஆலயங்களைச் சுற்றி பௌத்தக் குடியேற்றங்களை ஏற்படுத்த வேண்டுமென்று ஒரு கிளர்ச்சி தோன்றியுள்ளது. தமிழ் மண்ணிலே முதலில் சிங்களவர் குடியேற்றம், இப்பொழுது சிங்கள பௌத்தர்கள் குடியேற்றம்.

இவ்விரு மாகாணங்களிலே பௌத்தர்கள் ஒரு சிலரே வசிக்கின்றனரென்றும், அங்கே பௌத்த ஆலயங்களிலுள்ள பிக்குகளுக்குப் போதிய பாதுகாப்பு கிடையாதென்றும், ஆகவே அந்த ஆலயங்களைச் சுற்றி சிங்கள பௌத்தர்களைக் குடியேற்ற வேண்டுமென்றும் அந்தக் கிளர்ச்சிக்காரர்கள் கூறுகின்றனர்.

சேருவாவில, திரியாயென்னும் இடங்களில் பௌத்தக் குடியேற்றங்களை ஏற்படுத்துமாறு அரசாங்கத்திடம் அவர்கள் கோரியுள்ளனர். தீகவாபிய விகாரையைச் சுற்றியுள்ள காணிகளை முஸ்லிம்களுக்குக் கொடுக்கப் போவதாகக் கேள்வியென்றும் அம்மாதிரி இரவில் விழுந்த குழியில் பகலில் விழக்கூடாதென்றும் அவர்கள் அரசாங்கத்தை எச்சரித்துள்ளனர்.

சகலவித மூலநோய் நிவாரணி

ரிச்லெட்ஸ் ப்ளட் பியூரிபயர்

RICHELET'S BLOOD PURIFIER

இரத்த சுத்தி செய்து




- மூலம்
- வாதம்
- படை (ECZEMA)
- மாத விடாய்

கோளாறுகள்



முதலானவைகளைக் குணப்படுத்துவதில் நிகரற்ற சஞ்சீவி இது. ஒரு போத்தல் முடிந்ததுமே மேலும் சாப்பிட்டு பூரண பலனை அடையவேண்டும் என்ற ஆசையும் நம்பிக்கையும் தானாகவே ஏற்படும்.

எங்கும் கிடைக்கும்.

வெஸ்டன் ஏஜன்சீஸ்,

63, பேங்ஷால் வீதி, கொழும்பு.

(போன்: 2885)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வளர்த்த முஸ்லிம் புலவர்கள் (8)

## அருட்கவி அப்துல்காதிறு புலவர்

அன்று கண்டிநகர் முஸ்லிம்களிடையே ஓர் பரபரப்பு. இலங்கையின் பல்வேறு பாகங்களிலிருந்தும் கலை ஆர்வமிக்கோர் பலர் கண்டியிலே வந்து குழுமி விட்டார்கள். இதற்குக் காரணம் அப்துல் காதிர் புலவர் ''தீபசித்தி'' என்னும் அவதானம் பண்ண முன் வந்ததே. குறிப்பிட்ட நேரம் வந்தது. புலவர் அவதான பீடத்தில் வந்தமர்ந்தார். நிறைய எண்ணெய் ஊற்றப்பட்டு எரிவாய் தோறும் திரிகள் போடப்பட்ட பெரிய குத்துவிளக்கொன்று மேடையிலே வைக்கப்பட்டது. அப்போது புலவர் மேற்குத் திசையை நோக்கியவாறு சிறிது நேரம் மௌனத்தில் மூழ்கினார்.

புலவர் என்ன செய்யப் போகிறாரோ என்ற எண்ண அலைகள் ஆங்கு வீற்றிருந்த மக்களின் உள்ளக் கடலில் முட்டி மோதித் தெறின. புலவரின் மௌனம் கலைந்தது: விளக்கிருந்த திசையை நோக்கினார்: 'மெஞ்ஞான நாயகா இறசூலே' என்ற வார்த்தைகளை மூன்றுமுறை உச்சரித்தார். பின் புலவரின் வாயிலிருந்து பின்வரும் வெண்பா உதிர்ந்தது:

''எரிவாய் விரிந்தெழுந்து
எண்ணெய்மேல் தோய்ந்து
கரிவாய் இருள்போக்கக் காட்ட
—அரியணையின
தூண்டா விளக்கே சுடர்விட்டு
நீயென்முன்
சண்டிங் கெழுந்து எரி''

இப்பாடலின் இறுதியடியிலுள்ள 'எரி' என்ற வார்த்தை புலவரின் வாயிலிருந்து வெளிவந்த மறுகணம் விளக்கின் திரிகள் சுடர்விட்டுப் பிரகாசிக்கத் தொடங்கின.

### வியத்தகு நிகழ்ச்சிகள்

இதுகண்ட மக்கள் வியப்புற்றுப் போயினர். இவரென்ன பேசுந் தெய்வமோ என்று மலைத்தார்கள். அப்போது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை என்பவர் புலவரை நோக்கி ''சக்தி பெரிதா சிவம் பெரிதா'' என்றொரு வினாவை விசினார். உடனே புலவர் ''உமது கேள்வி வித்து முந்தியதா, செடி முந்தியதா'' என்ற வினாவை யொக்குமென்று கூறிவிட்டு சக்தி எண்ணெய் போன்றதென்றும் சிவம் ஒளி போன்றதென்றும் கூறினார்.

இன்னொருவரெழுந்து திருக்குறளின் இருபத்தெட்டாம் பாடலைப் போன்று தொல்காப்பியத்திலிருந்து ஒரு விளக்கந்தாருங்களென்றார். உடனே புலவரின் வாயிலிருந்து:

''நிறைமொழி மாந்தர் ஆணை
யிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர
மென்ப''

என்ற சூத்திரம் படாரென வெளிவந்தது. இதற்குள் இன்னொருவர் தனது வலக்கையை மூடியவாறு தன் கைக்குள் இருப்பதென்ன என்று கேட்டார். உடனே புலவர் தங்கப் பவுணென்றிருப்பதாகக்கூறினார். அவர் கையை விரித்ததும் தங்கப் பவுண் பளிச்சிட்டது.

கமலவல்லி என்ற பெண், புலவரை நோக்கித் திருக்குறளில் கூறப்படும் பெரியவைகளுள் உவமை நயங்களாக மூன்று பெரியவைகளைப் பகருங்களென்றாள். உடனே புலவர்:

''காலத்திநாற் செய்த நன்றி
சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது''
''பயன்தூக்கார் செய் உதவி
நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது''
''நிலையில் திரியா தடங்கியான்
தோற்றம்
மலையினும் மாணப் பெரிது''

என்ற குறட்களைப் பாடினார். இம்மூன்றினுள் பெரிது எதுவென அப்பெண் கேட்க; தனித்தனி கடலும், மலையும் பெரிது எனினும் அவை உலகினுளடங்கி விடுவதால் உலகமே பெரிது என்றார் புலவர். உடனே அம்மாது எல்லாவற்றிலும் நீங்கள் பெரிது என்று கூறினாள்.

அப்போது எரிந்து கொண்டிருக்கும் விளக்கை அணைத்துக் காட்டுங்களென்றார் ஒருவர். உடனே புலவர்:

''தூண்டாமணிவிளக்கே துகள்
போக்கும் தூயொளியே
காண்டற் கரியதோர் காட்சியே
வேண்டி
எரியவுனை வைத்ததுபோல்
எல்லோரும் பார்க்க
அரியணையில் நீ நின்றணை''

என்ற பாடலைப் பாடியது தான் தாமதம் விளக்குத் திடீரென அணைந்தது.

ஈற்றில் அவையின்கண் வீற்றிருந்த பொன்னம்பலக் கவிராயர் எழுந்து:

''எல்லா அதிசயத்தும் ஈது
மிகப் பெரிதாம்
வல்லான் மெய்ஞ்ஞானியப்
துல்காதிர்—பல்லோர்முன்
பாட்டால் விளக்கெரித்துப்
பாட்டதனு லேயணைத்துக்
காட்டிவிட்ட இக்காட்சி காண்''

என்ற பாவைப் பாடி, புலவரைப் பாராட்டினார். இவ்வாறு அவதானம் எட்டுணை இடுக்கணுமின்றி வெற்றி மேல் வெற்றியாக முடிவுற்றது. அவதான அவையில் இடம் பெற்றிருந்த மக்கள் ஏதோ ஒரு புதுமையுலகில் வாழ்பவர்போலக் காணப்பட்டனர்.

### இவரது கவிதா சக்தி

இத்தகைய அவதானம் பண்ணி அரும்புகழீட்டிய புலவர் பெருந்தகைதான் நமது அப்துல் காதிறு புலவர். இவர் 1866-ம் ஆண்டு தெல்தோட்டையை அடுத்துள்ள போப்பிட்டி என்னும் சிற்றூரில் அல்லாபிச்சை என்பவருக்கும், ஹவ்வா உம்மா எனும் மாதுக்கும் மகனாகப் பிறந்தார். கண்டி டிறினிட்டி கல்லூரியில் கல்வி கற்றார். இளமையிலே கவிபாடும் வன்மை பெற்ற இவர் தனது பதினைந்து வயதில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வெண்பாப் போட்டியில பங்கெடுத்துப் பரிசு பெற்றதோடு, யாழ்ப்பாணத் தமிழ்ப் புலவர்களால் ''ஞான வெண்பாப் புலிப்பாவலர்'' எனும் சிறப்புப் பெயரும் சூட்டப் பெற்றார்.

**யூ. எல். தாவூத்**

இப்புலவரின் கவிதா சக்தியைப் பாராட்டிப் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல சிறப்புப் பெயர்கள் புலவருக்குச் சூட்டப்பட்டன. அவை, வித்துவ சிரோன் மணி, கவிராஜ சேகரம், பிரபந்த ரத்னாகரம், சமூக வித்துவான் (இது கொழும்பு முஸ்லிம்களால் சூட்டப் பெற்றது), கவிவாணன், மெஞ்ஞான அருள்வாக்கி, வித்துவ தீபம் (இது யாழ் நகர் அசனார் லெவ்வைப் புலவரால் சூட்டபபட்டது), காந்தக் கவிராயர் என்பனவாகும்.

### இலக்கியச் சமைப்புக்கள்

இவர் சிறிதும், பெரிதுமாக முப்பது இலக்கியச் சமைப்புக்களைப் புனைந்து தமிழன்னைக்குச் சூட்டியிருக்கிறார். இஸ்லாமிய கொள்கை மணம் வீசும், உயிர்த் துடிப்புள்ள அந் நல்லிலக்கியங்களின் நாமங்களாவன: சந்ததத் திருப்புகழ், திருமதீனத்து மாலை, ஞானப் பிரகாச மாலை, சரமகவிக் கொத்து, பிரான் மலைப் பதிகம், நவமணித் தீபம், கண்டிக் கலம்பகம், ஞானமணித் திரட்டு, பிரபந்தப் புஞ்சம், சித்திர கவிப் புஞ்சம், பலவண்ணத் திரட்டு, தேவாரப் பதிகம், பதாயிருப் பதிகம், கண்டி சிகாபுதீன் வலியுல்லாப் பதிகம், சலவாத்துப் பதிகம், காரணப் பிள்ளைத் தமிழ், மெஞ்ஞானக்கோவை முதலியன.

இப்புலவரிடம் ஒருவர் வந்து ஊசியொன்றை ரப்பரில் குத்தி வாயினுள் வைத்துக்கொண்டு, உதட்டில் ஊசிபடாத முறையில் பாடக்கூடிய ப், ம் முதலிய எழுத்துக்கள் வராத பாடலொன்று பாடுமாறு கேட்டார். புலவர் அவ்விடத்திலேயே வைத்து:

''அக்கார் நெடியகடல்
ஆடையணி அகிலத்
[illegible]
அறனீய நன்னயிர் ஆஞ்சல
சத்தானே
இறந்தானே என் நெஞ்
சிலிறை''

என்ற வெண்பாவைப் பாடி முடித்தார்.

### அற்புத சாதனைகள்

ஒருநாள் புலவர் கண்டிப் பள்ளிவாசலில் மதிய நேரத் தொழுகையை முடித்து விட்டு வெளியேறியபோது; யாகூப் என்பவர் புலவரை அணுகி அன்று தன் வீட்டில் மதிய உணவருந்த வருமாறு அழைத்தார். புலவரும் இணங்கினார். புலவர் தன்னோடு பள்ளிவாசலிலிருந்து எட்டுப் பேரையும் அழைத்துக் கொண்டு போனார். இதைக்கண்ட யாகூப் திகைத்து விட்டார். காரணம் புலவருக்கு மட்டுமே அங்கு உணவு சமைக்கப் பட்டிருந்தது. யாகூப் இவ்வாறு கதிகலங்கிக் கொண்டிருக்க புலவர் உணவைக் கொண்டு வருமாறு கூறினார். உடனே யாகூப் நடப்பது நடக்கட்டும் என நினைத்து அங்கிருந்த சோறு, கறி முழுவதையும் கொண்டு போய் புலவர் முன் படைத்தார். புலவரும் ஏனையோரும் உண்ணத் தொடங்கினர். வயிறார, பசிதீர உண்டனர். இதை யாகூப் வாய் பிதுங்க விழி பிதுங்கக் கவனித்துக்கொண்டிருந்தார். ஒன்பது பேரும் வயிறு புடைக்க உண்டார்கள். இன்னும் மூவர் உண்ணப் போதுமான உணவு எஞ்சியிருந்தது. இதைக் கண்ணுற்ற யாகூப் பெரிதும் வியப்படைந்தார். இவ்வற்புத நிகழ்ச்சியை ஊரெங்கும் பரப்பி விட்டார்.

ஒருமுறை இப்புலவரும், இவரது மச்சான் முறையான கஸ்தூரி ஆலிம்சா என்பவரும் எங்கோ நடந்து திரும்பிக் கொண்டிருந்தனர் அப்போது கண்டியை அண்டியுள்ள பட்டியகாமம் ஊர் வாசியொருவரிடத்தில் இளநீர் தருமாறு கேட்டார் புலவர். அவரும் தருவதாகக் கூறி தன் தோட்டத்தினுள் அழைத்துச் சென்றார். பின் புலவரை ஏமாற்ற எண்ணியோ என்னமோ இளநீர் இல்லையென்று கூறி விட்டார். உடனே புலவர்:

'சாச்சப்பா! என்னை ஏச்சப்பா
இளநீர் போச்சப்பா குரும்பை
காச்சப்பா'

என்று பாடிவிட்டு வந்து விட்டார். அன்று முதல் அத் தென்னை மரங்கள் காய்ப்பதே இல்லையாம்.

### சிறப்பு மிக்க சிருஷ்டி

அப்துல் காதிறு புலவரின் இலக்கியச் சிருஷ்டிகளுள் 'சந்ததத் திருப்புகழ்' பெருஞ் சிறப்புடையது. காசிம் புலவரின் திருப்புகழை ஒட்ட

(7-ம் பக்கம் பார்க்க)

## சங்கப் பலகை

### இரத்தச் சுவடு

ஆசிரியர்:— கே. எஸ். ஏ. கபூர், எருக்கலம்பிட்டி.

கிடைக்குமிடம்:— அன்பு வெளியீடு, 9/1 அரசடி ஒழுங்கை. யாழ்ப்பாணம்.

விலை:—75 சதம்.

ஈழத் தமிழ் பேசும் மக்களுக்கு ஏகாதிபத்திய மனப்பான்மை கொண்ட சிங்கள அரசு அடுக்கடுக்காக இழைத்து வரும் இன்னல்களையும், அதிலிருந்து விடுபட தமிழ் பேசும் மக்கள் இதுவரை செய்த தியாகத்தையும், சிந்திய செங்குருதியையும் வரலாற்று அடிப்படையில் வேண்டிய புள்ளி விபரங்களுடன் தெளிவு படுத்துகிறார் இந்நூலின் ஆசிரியர்.

திரு. பண்டாரநாயக்காவின் ஆட்சியில் ஆரம்பித்து, திருமதி பண்டாரநாயக்காவின் ஆட்சியின் ஆரம்ப காலவரையிலுள்ள இடைக்கால வரலாற்றை, வரலாற்று ஆசிரியர்களே ஆச்சரியப்படக் கூடிய முறையில் அமைத்துள்ளார் அவர்.

இந் நாட்டிற்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்த இனம், இன்று சுதந்திரம் அற்றவர்களாக வாழும் நிலையை ஆசிரியர் தனக்கே உரிய நடையில் கூறும் பொழுது படிப்பவர் உள்ளம் துடிக்கிறது. எனவேதான் போலும் முகவுரை வழங்கிய திருமலைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு என். ஆர். இராஜவரோதயம் அவர்களும் ''உள்ளம் தன் வலிமை இழக்கும் போது உரிமை நிற்பதில்லை. தன்மான உணர்வை மறந்தவர்கள் வாழ்ந்ததில்லை, சுதந்திரத்தை தியாகத்தின் மூலம் அடைந்தவர்கள் வீழ்ந்ததில்லை; உரிமையை மதித்தவரை உலகம் மதிக்கிறது'' என்று கூறியுள்ளார்.

அரச போகத்தைத் துறந்த புத்தரின் வாரிசுகளாக விளங்கும் புத்த குருமாரின் அரசியல் ஆர்வத்தையும் அவர்களின் இனவெறிக் கொள்கையையும் வேண்டிய இடங்களில் ஆசிரியர் கண்டிக்கத் தவறவில்லை.

ஆசிரியரின் இன உணர்வும், அடங்காத தமிழ் ஆர்வமும் நூல் முழுவதும் இழையோடியுள்ளது. ''சுதந்திர வீரன் தன் மார்பிலே பல குண்டுகளை ஏந்தினாலும் அவனது உரிமைத் தாகம் தீராது'', என்பது ஒன்றே போதும் அன்னாரின் சுதந்திர தாகத்தை எடுத்துக்காட்ட.

முஸ்லிம் சமூகம் முழுவதும் ஆசிரியரின் மொழி யார்வத்தைக் கண்டு பெருமைப்பட வேண்டும்.

இந் நூல் தமிழ் பேசும் ஒவ்வொரு மகனின் கையிலும் இருக்க வேண்டியது அவசியம்.

சில இடங்களில் எழுத்துப் பிழைகள் காணக் கிடக்கின்றன: இரண்டாம் பதிப்பில் அக்குறை நீக்கப்படும் என்று நம்புகிறோம்.

நூன்முகம் வழங்கிய புதுமைலோலன் கூறியது போல ''...உறங்கொண்ட நெஞ்சினருக்கு எழுச்சியை இன்னும் கூட்டும் நூல் இரத்தச் சுவடு''

—சங்கர்.

### கலைச் செல்வி-

விசேட மலர்.

பாலன் வெளியீடு.

செட்டி குளம்.

விலை:– 50 சதம்.

இம் மாதச் செல்வி கலைவிழா விசேட மலராக அதிக பக்கங்களுடன் வெளி வந்துள்ளாள். மலரில் தமிழரசுத் தந்தை, வவுனியாப் பிரதிநிதி, மற்றும் வவுனியாப் பட்டினசபைத் தலைவர், ஆசிய சங்கத் தலைவர், காரியாதிகாரி முதலியோரின் வாழ்த்துச் செய்திகள் அடங்கியுள்ளன.

தமிழரசுத் தந்தை தனது செய்தியில் வவுனியாப் பகுதியில் தமிழ் மக்கள் குடியேற வேண்டியதன் அவசியத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

(15-ம் பக்கம் பார்க்க)

## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும், மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சில்காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் ''ஆனந்தா தைலத்தை''த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான் அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

**ஆனந்தா வைத்தியசாலை,**

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




''தேவா'', எம்பிலிப்பிட்டியா.

கே: ஒரு முறை சிறு கதைப் பகுதியில் வெளி வந்த 'நல்லதும் கெட்டதும்'' என்ற கதை உண்மையில் நடந்ததாகவும் இருக்கலாமல்லவா?

ப: சுதந்திரன் சிறுகதைப் பகுதியில் கற்பனைக் கதைகள் மட்டுமே வெளியிடப் படும்.

ஃ

மு. சுப்பிரமணியம்,
மாவிட்டபுரம்.

கே: திரு. பிலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா கூறுவதையே பிரதம மந்திரியும் கூறுகிறரே ஏன்?

ப: இருவரும் ஒரு குடும்பம்—ஒரு கட்சி—ஓர் அரசாங்கம்.

ஃ

இ. பேரின்பநாயகம்,
களுவாஞ்சிக்குடி.

கே: தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கு உயிரூட்ட முயற்சி செய்யப்படும் இவ்வேளையில் அந்த முயற்சியில் உடுப்பிட்டிப் பிரதிநிதி கலந்து கொள்ளவில்லையாம். காரணமென்ன?

ப: செத்த கட்சி செத்ததுதான். செத்தவனுக்கு உயிரூட்டுவது சாத்தியமில்லை என்று அவர் கருதுகிறார் போலும்!

ஃ

த. சோமசுந்தரம்,
பளை.

கே: தரம் கெட்ட ஒரு மஞ்சள் பத்திரிகை எல்லா மதத்தையும் தூற்றுகிறதே! அதற்கு என்ன செய்யலாம்?

ப: மஞ்சளுக்குள் மறைந்திருக்கும் சிகப்பு வர்ணத்தை அம்பலப்படுத்தும்.

ஃ

தமிழரசன், ஒட்டன்.

கே: சுதந்திரன் மாநாட்டு மலரில் கண்ணுடி போட்டு வைத்திருக்க கூடிய தமிழரசுக் கட்சி அமரர்களின் படங்களையும் வெளியிட்டால் என்ன? அதனுல் அந்த அமரர்களின் வீர உணர்ச்சி மக்களுக்கும் ஏற்படுமல்லவா?

ப: மலரின் அட்டையை மூவர்ணப் படமொன்று அலங்கரிக்கிறது. அதில் அமரர்களும் இடம் பெறுகின்றனர்.

ஃ

செல்வி. எட்வேட், அம்பாறை.

கே: சில வாலிபர்கள் நெற்றியில் திலகம் போன்று பச்சை குத்துவதின் மர்மமென்ன?

ப: உறுதியான உள்ளம் கொண்டவர்கள் ஆண்கள் என்பதை எடுத்துக் காட்டவே நிரந்தரமான திலகமிட்டுக் கொள்கிறார்கள். பெண்கள் நெற்றியிலிடும் திலகமோ அடிக்கடி அழிந்து போகிறது. அவர்களது உள்ளமும் அப்படித்தானே.

ஃ

எம். சதாசிவம், கோட்டகலை.

கே: வீரபாண்டியன் படத்தில் வரும் தொண்டமானுக்கும். இ. தொ. கா. தொண்டமானுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: அது போலித் தொண்டமான்—இது உண்மைத் தொண்டமான்.

ஃ

வி. எஸ், வேலு, லிபுக்கெல்லே.

தோட்டப் பாடசாலைகளில் சிங்களம் போதிப்பதை வரவேற்றால் நன்மையுண்டு என்று இ. தொ. கா. வில் சிலர் கூறுகிறார்கள். நன்மை கிடைக்குமா?

ப: நன்மை கிடைக்கும். இ. தொ. கா. வுக்கு குறைந்த பட்சம் ஒரு நியமன எம். பி. பதவியாவது கிடைக்குமல்லவா?

ஃ

செல்வி மலர் சோமசுந்தரம்,
யாழ்ப்பாணம்.

கே: பெண்களின் உயரம் எத்தனை அடியிருந்தால் அழகாயிருக்கும்?

ப, ஆண்களை விட உயரம் அரை அடி குறைவாயிருந்தால் அழகாயிருக்கும்.

த. வில்வரட், மன்னர்.

கே: காங்கேசன்துறைத் தொகுதியில் முன்பு போட்டியிட்ட திரு. நடேசபிள்ளை தற்போது என்ன செய்துகொண்டிருக்கிறர்?

ப: இந்து கலாசாரத்தை வளர்த்துக் கொண்டிருப்பதாகக் கேள்வி. தன்னை உபவேந்தராகக் கொண்ட இந்து கலாசாரப் பல்கலைக் கழகமொன்றை நிறுவுமாறு அரசாங்கத்துக்கு மனுப் போட்டிருக்கிறரென்று நம்பகமான வட்டாரங்களில் பேச்சு அடிபடுவதாகக் கூறப்படுகிறது.

ஃ

வெள்ளாளன் வினை விக்டர்,
இறக்குவானை.

தி. மு. க. வின் முன்னணித் தலைவர்களெல்லாம் சிறையிலிருக்கும் போது திருச்செங்கோட்டில் அல்லும் பகலும் அயராது உழைத்து தி. மு. க. வுக்கு வெற்றியீட்டித் தந்த மக்கள் திலகம் எம். ஜி. ஆர். அவர்களை தென்னக மக்கள் எப்படிப் பாராட்டலாம்?

''அரசியல் நட்சத்திரம்'' என்று பாராட்டலாம்.

ஃ

மு. கருணநிதி, ஏழாலை மேற்கு.

கே: கல்வி மந்திரி இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறர்?

ப: தன்னிடமிருந்த இலாகாக்களில் ஒன்று பறிபோனதால் மிகவும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். எஞ்சிய இலாகாவும் பறிபோய் விடுமோ என்ற நிலைமை ஏற்பட்டிருப்பதால் இப்பொழுது ஏங்கிக் கொண்டிருக்கிறராம்.

ஃ

அ. கமுறுதீன், கிண்ணியா.

கே: கோள்விகள் பல நினைத்தேன். ஆனல் தக்க கோள்வி எதுவும் புலப்படவில்லை. என்ன செய்யலாம்!

ப: கோள்வி இல்லை ஐயா, கேள்வி.

ஃ

செல்வி ஆனந்த, சாவகச்சேரி.

கே: என் சினேகிதி ஒருத்தி கல்யாணமாகாதவள். ஆனல் தான் விதவை என்கிறள். இதன் மர்மம் என்ன?

ப: கல்யாணம் செய்யாமல் செய்திருக்கக் கூடும்.

ஃ

''கேக்கே'', அட்டன்.

கே: திரு. தொண்டமானுக்கு ஒரு பட்டமளிக்குமாறு அரசாங்கம் உம்மைக் கேட்டுக் கொண்டால்?

ப: ''தொண்டமான்'' என்ற பட்டத்தை வழங்குமாறு யோசனை கூறுவேன்.

ஃ

கு. நவரத்தினராஜா,
பருத்தித்துறை.

கே: தற்பொழுதுள்ள தமிழ்த் தலைவர்களையெல்லாம் ஒன்று சேர்த்து ஓர் பாராளுமன்றம் அமைக்கும்படி கூறினல் எப்படி அமைப்பீர்கள்?

ப: அது என் பொறுப்பல்ல, அரசியல் நிர்ணய சபையொன்றல்லவா அமைக்கத் தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்!

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

''வைகைப்பூர்கரன்'', கண்டி.

கே: கனம் எம். எஸ். காரியப்பர் அவர்கள் இரத்தினபுரியில் ஒரு கூட்டத்தில் பேசும் போது அரேபியாவில் முஸ்லிம்கள் சிங்கத்தை வழிபட்டதாகவும் அதனுலேயேதான் இலங்கைத் தேசியக் கொடியில் சிங்கத்தைப் பொறிப்பதற்குத்தாம் ஆதரவளித்ததாகவும்கூறியிருக்கிறரே. இது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: அவர், தான் சிங்களக் கொடியை ஆதரித்ததற்கு ஒரு காரணம் கூறியிருக்கிறர். அவ்வளவுதான். முஸ்லிம்கள் இறைவனைத் தவிர வேறுயாரையும் வணங்குவதில்லை.

ஃ

ஞா. பிரான்ஸிஸ், அச்சுவேலி.

கே: சில பெண்களின் சட்டையின் கழுத்து வர வர கீழே இறங்கி இறங்கிப் போவதேன்?

ப: ஆண்களின் பார்வை என்ற தென்றலில் மார்பகம் குளுமை பெறுவதற்காக.

ஃ

தம்பலவத்தை ரங்கன்,
முவங்கலை.

கே: விவாகமே செய்யாத விஞயகருக்கு விவாக வைபவங்களில் முக்கிய இடமளிப்பதேன்?


ப: விவாகம் செய்து கொள்ளப்போகும் மணமகனும் மணமகளும் விஞயகரைப் போல இதற்கு முன்பு விவாகம் செய்யாதவர்களாதலின் அவர்களின் மணவிழாவில் அவருக்கு முக்கிய இடம் கிடைக்கிறது.

ஃ

எம். எஸ். கசின், பளை.

கே: ஓய் குயுக்குயாரே, நீர் பொலிபோல் குடித்துப் பார்த்திரா?

ப: நான் இன்னும் காதலில் தோல்வியடையவில்லையே!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நாடற்றவர்' பிரச்சினை பற்றி இலங்கை அரசின் அக்கறை

## 1954-ல் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தமா இதற்குக் காரணம்?

### சென்னை 'ஹிந்து'வின் கருத்து

**இலங்கையிலுள்ள நாடற்றவர்களின் எதிர்காலம் பற்றி இலங்கை அரசாங்கம் காட்டும் அக்கறைக்குக் காரணம், 1954ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் முக்கிய முடிவுகளில் ஒன்றே. அந்த முடிவின்படி, இலங்கைப் பிரஜாவுரிமை கோரி நிராகரிக்கப்பட்டவர்கள், இந்தியா செல்லும்படி போதிய சலுகைகள் கொடுத்துத் தூண்டப்பட்ட போதிலும், செல்ல விரும்பாவிடில், பத்து வருடங்களுக்குப் பின்னர், அவர்கள் இலங்கைப் பிரஜாவுரிமை பெறுவார்கள் என ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று சென்னையிலிருந்து வெளியாகும் பிரபல ஆங்கிலப் பத்திரிகையான "ஹிந்து" கடந்த மாதம் 28ந் தேதி "இலங்கையின் நாடற்றவர்கள்" என்று மகுடமிட்டு எழுதியுள்ள தலையங்கத்தில் கூறுகிறது!**

இந்த நிலையிலுள்ள மக்கள் தொகையினர் இப்பத்து வருடங்களுக்குப் பின்னர் வெகு குறைவாகவே இருக்குமென்றுதான் இந்தியா நம்பியது. ஆனால், 1954 ஒப்பந்தத்தின் மீது எழுதப்பட்ட மை கூடச் சரியாகக் காயவில்லை, அதற்குள், அந்த ஒப்பந்தத்தையே சாட்டாக வைத்துக் கொண்டு, இலங்கை அரசாங்கம் இந்தியர்களின் இலங்கைப் பிரஜாவுரிமை விண்ணப்பங்களை நிராகரிக்கத் தொடங்கியதுடன், அப்படி நிராகரிக்கப்பட்டோரை இந்தியப் பிரஜாவுரிமை கோரும்படி நிர்ப்பந்தம் செய்யவும் தொடங்கியது. ஆனால், இந்த நடவடிக்கை தோல்வியடையவே, முடிவில் இலங்கையில் 150,000 பேர் பிரஜாவுரிமை பெற்றனர். எஞ்சிய 800,000 பிரஜாவுரிமை மறுக்கப்பட்ட, ஆனாலும் இந்தியா செல்ல விருப்பமில்லாமல் இலங்கையையே தாயகமாகக் கொண்டவராக இருக்கின்றனர்.

தங்களுக்கு என்றாவது ஒரு நாள் நீதி கிடைக்கும் என்ற எண்ணத்துடன், இவ்வளவு பேர் 'நாடற்றவர்' இருப்பதென்று இலங்கை எதிர்பார்க்காமலிருந்திருக்கலாம். 1954ஆம் ஆண்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இன்று எட்டு வருடங்களாகிவிட்டன என்றாலும், நாடற்றவர்கள் தொகை குறைவதாகக் காணவில்லை. இயற்கை நியதியைப் பின்பற்றி இன்னும் அதிகரித்துள்ளதென்றே கூற வேண்டும். இதன் பயனாக இலங்கை அரசாங்கம் மீண்டும் நாடற்றவர்களை இந்தியா செல்லும்படி 'தூண்டுதல்கள்' அளிக்க முன்வந்துள்ளது.

இந்தத் 'தூண்டுதல்' திட்டமும் இன்னும் இரண்டு வருடங்களில் சரிவரவில்லையெனில், நாடற்றவர்கள் எல்லோருக்கும் இலங்கைப் பிரஜாவுரிமை அளித்து, இலங்கை மக்களின் ஒரு பகுதியினர்க்கு நெடுங்காலமாக இழைக்கப்பட்டுவரும் அநீதிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய பொறுப்பு இலங்கை அரசாங்கத்தைச் சார்ந்ததாகும்.

1954 ஆம் ஆண்டில், ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதும் நடைபெற்ற பேட்டியொன்றில், "பத்து வருடங்களுக்குப் பின்னர் இலங்கையர் அல்லது இந்தியர்கள் தான் இருப்பார்களேயன்றி, இரண்டு தேசிய இனங்களையும் சேராதவர்கள் மிகக் குறைவாகவே இருப்பர்" என்று சேர் ஜோன் கொத்தலாவலை கூறினார்.

இந்த அடிப்படையில் பார்க்கும்பொழுது, இலங்கை அரசாங்கம் நாடற்றவர்களில் பெரும்பாலோரையும் இந்தியப் பிரஜாவுரிமை பெறும்படி தூண்டுவது விளங்கக்கூடியதொன்றே. 'நாடற்றவர்கள்' இந்தியா செல்வதற்காக இலங்கை அரசாங்கம் கொண்டுவரும் திட்டங்களை நாம் சந்தேகக் கண்ணுடன் பார்க்க வேண்டிய அவசியமில்லை, இலங்கை அரசாங்கம் மனத்தில் களங்கமின்றி, இத் திட்டங்களைக் கொண்டு வந்தால். அத்துடன், இந்தியாவுக்குச் செல்ல விரும்பாது, இலங்கையையே தாயகமாக ஏற்றுக் கொண்டவருக்கு இலங்கை அரசாங்கம் இலங்கைப் பிரஜாவுரிமையை அளிக்கவும் தயங்கக் கூடாது.

இந்தியா செல்வதற்கு நாடற்றவர்களுக்கு அளிக்கப்படும் 'தூண்டுதல்கள்' எவ்வளவு தொகையில் பணச் செலவை உண்டாக்குமென்பதை முன் கூட்டியே ஊகித்தல முடியாத காரியம். அது இத் 'தூண்டுதல்களை' ஏற்றுக் கொள்ளச் சம்மதிப்பவரின் தொகையைப் பொறுத்துள்ளது. இப்படிப்பட்ட ஒரு திட்டத்துக்கு இந்தியாவின் ஒத்துழைப்பும் அவசியம். ஏனெனில், இந்தியப் பிரஜாவுரிமையை விரும்பி ஏற்பவர்கள் இந்தியாவுக்கு வரும்பொழுது, அவர்களைக் குடியேற்ற, திட்டமிடப்பட்ட புனருத்தாரணம் அவசியமாகும்.

இத்தகைய திட்டமொன்றை இரு அரசாங்கங்களும் செயலாற்ற முன்னர், எத்தனையோ அடிப்படைப் பிரச்சினைகள் நல்லெண்ண அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டியிருக்கும். தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளுள், திட்டத்துக்குரிய பணச்செலவு பற்றிய பிரச்சினைதான் தீர்ப்பதற்குச் சுலபமான பிரச்சினையாக அமையும். தனது சக்திக்குட்பட்ட அளவில், திட்டத்துக்குரிய முழுச் செலவும் அமையுமானால், இந்தியா கடன் அளிப்பதற்கு மறுக்கவேண்டியதில்லை. தேவை எழுந்தால், தகுந்த ஏஜென்ஸி மூலமாக, சர்வதேச (பண) உதவியை இலங்கை பெற முடியும்.

ஆனால், உடனே தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் எவை என்பது தெளிவு. தேசிய இடாப்பு மசோதா, தோட்டங்களில் இலங்கையரை வேலைக்கு வைக்கும் மசோதா ஆகிய, நாடற்றவர்களுக்கெதிராக நிறைவேற்றப்பட்டுள்ள, இவ்விரண்டு மசோதாக்களையும் இலங்கை அரசாங்கம் வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டும். இதன் மூலம், இந்தியாவுடனும், நாடற்றவர்களுடனும் இலங்கை நியாயமான முறையில் நடந்துகொள்ள முடியும். அத்துடன், இலங்கை இந்தியரின் பிரதிநிதிகளுடன் இலங்கை அரசாங்கம் கலந்தாலோசித்த பின்னர், பாதிக்கப்பட்ட அம் மக்களுக்கு உகந்த ஒரு திட்டத்தை அது வகுக்க வேண்டும்.

இத்தகைய உடன்பாட்டுடன் கூடிய வோர் திட்டத்தை இலங்கை அரசாங்கம் இந்திய அரசாங்கத்திடம் சமர்ப்பிக்குமேயானால், இரு நாடுகளுக்குமிடையேயுள்ள நட்புறவைக் கடந்த பதினைந்து வருடங்களுக்கும் மேலாகப் பாதித்து வந்துள்ள ஒரு பிரச்சினைக்குத் தீர்வானவொரு முடிவைக் காணும் வகையில் தனது ஒத்துழைப்பை அளிக்க, இந்திய அரசாங்கத்துக்குப் பெரிதும் உதவியாக அமையும்.

# சிங்கள பிரயாணச் சீட்டை ஏற்க முடியாது

## புகையிரத நிலைய அதிபர் டிக்கட் வழங்க மறுப்பு

**போராதனையிலுள்ள விவசாயக் காரியாலயத்தில் கடமை பார்க்கும் ஊழியர் ஒருவர் புகையிரத நிலையத்தில் திண்டாடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அவருக்கு வழங்கப்பட்டிருந்த இலவச பிரயாணச் சீட்டு சிங்கள மொழியில் மட்டுமே இருந்ததுதான் இந்தத் திண்டாட்டத்துக்குக் காரணம். புகையிரத நிலைய அதிபர் சிங்கள மொழி தெரியாத காரணத்தினால், பிரயாணச் சீட்டை ஏற்க மறுத்து விட்டாராம்.**

சிங்களத்தில் மட்டும் எழுதப்பட்டிருந்த இலவச பிரயாணச் சீட்டைப் புரிந்து கொள்ளமுடியாதெனக் கூறி புகையிரத நிலைய அதிபர் சீட்டை நிராகரித்து விட்டார். இதன் காரணமாக பேராதனை விவசாயக் காரியாலயத்தைச் சேர்ந்த ஊழியர் யாழ்ப்பாணப் பகுதி புகையிரத நிலையமொன்றில் திண்டாடவேண்டி ஏற்பட்டதாக அறிகிறோம்.

இப்பேர்ப்பட்ட பல நிர்வாகச் சிக்கல்கள் அடிக்கடி ஏற்படுவதை அரசாங்க எழுது வினைஞர் சங்கம் நீதி அமைச்சுக்குச் சுட்டிக் காட்டியும் இதுவரை தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனத் தெரிகிறது. 13-12-62ல் எழுது வினைஞர் சங்கம் இது போன்ற பல குறைபாடுகளையும், சங்க உறுப்பினர்களுக்கு ஏற்பட்டு வரும் பல அவமானங்களையிட்டும் விரிவாக நீதி அமைச்சுக்குத் தெரிவித்திருந்தது. ஆனால் அதற்கான பரிகாரம் இதுவரை தேடப்படவில்லை. மேலும் எழுது வினைஞர் சங்கம், அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொழிற் சங்கமாக விருப்பதால் மேற்கொண்டு சங்க உறுப்பினர்கள் தகுந்த வகையில் கௌரவமாக நடத்தப்பட வேண்டும், அதற்கான வழிவகைகளை அரசாங்கம் செய்யவேண்டும் என்ற கருத்தை சங்கத்தைச் சார்ந்த ஒருவர் நமது நிருபரிடம் கூறினார்.


கலப்பற்ற உயர்தர அலுமினியம்
மங்காத பிரகாசம்
நீடிய உழைப்பு
இவைகளுக்கு

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
ONE DOLLAR
DOLLAR BRAND

டொலர்
அலுமினியப் பாத்திரங்கள்

டொலர் கோர்ப்ரேசன்,
14, டாம் வீதி,
கொழும்பு-12.


# மூதூர் மாதா சபை ஆண்டுவிழா

மூதூர் தேவ மாதா சபையாரால் திரு இருதய மகாநாடு கடந்த 14-ம் 15-ம் தேதிகளில் மூதூர் நகரில் நடைபெற்றது. 14-ம் திகதி செவ்வாய்க்கிழமை காலையில் மகாநாடு ஆரம்பமாகியது. வணக்கத்துக்குரிய பிதா பிறேடி சுவாமியார் அவர்களின் பாதுகாவலில் மகாநாடு நடைபெற்றது. திருமதி. ந. வீரேசன், செல்வன் ஜே. எஸ். பெர்ணண்டோ, செல்வி. பே. ரோஸ்மரியா குருஸ் ஆகியோரின் பேச்சுக்கள் இடம் பெற்றன. வணக்கத்துக்குரிய பிதா ஞானப்பிரகாசம் அவர்கள் 'செப அப்போஸ்தல சபையும், திரு இருதய பக்தியும்' எனும் பொருள் பற்றிப் பேசினார். தேநீர் இடை வேளைக்குப் பின்னர் வண. போஷகர் சுவாமியார் தலைமையில் "தேம்பாவணி திருமணப்படலம்" எனும் பொருளில் கருத்தரங்கமும் நடந்தேறியது.

15-ம் திகதி புதன்கிழமை காலை பாடற் பூசையும், ஆசிர்வாதமும் முடிவடைந்தது. அன்று இரவு "யோசேப்" என்னும் நாடகம் நடை பெற்றது. ஆசிரியர் திரு. க. அ. றேச்டி வாஸ் யாக்கோப்பாகவும், திரு. ஸ்தனிஸ்லாஸ் பார்வோன் மன்னனாகவும் நடித்தனர்.

## அவர்கள் வேதனை!

"வெண்ணை திரண்டு வரும் போது மத்து உடைந்து விடுவது" போன்ற நிலை உருவாகி விடுமே என்று சில தமிழ் அரசாங்க ஊழியர்கள் மனம் வருந்துகிறார்களாம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் கவிழ்ந்தும், நிதி மந்திரி பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா ராஜிநாமாச் செய்யவும் ஏற்பட்டால் தங்கள் ஆசைக் கோட்டைகள் தகர்ந்து விழுந்து தவிடு பொடியாகிவிடுமே என்று பகிரங்கமாகக் கவலை கொள்ளுகின்றனராம்.

விழுந்து விழுந்து சிங்களம் படித்து ஓரளவு சம்பள உயர்வையும், பதவி உயர்வையும் எண்ணி எதிர் பார்த்துக் கொட்டாவி விட்டுக் கொண்டுள்ள இவர்கள் இந்த அரசாங்கம் வீழ்ந்து விட்டால், இனிமேல் ஏற்படப்போகும் எந்த அரசாங்கமும் சிங்கள மொழியைத் திணிக்கும் பிரச்சினையில் சற்றுப் பின் வாங்கலாம், என்று கருதி, அப்படி யேற்படும் போது, சிங்களம் படித்ததும் பிரயோசனமில்லாது போய் விடுமே என்று ஏங்கித் தவிக்கின்றனர்.

தாங்கள் பட்ட பாடு வீணாகி விழலுக்கிறைத்த நீராகி விடுமே, என்று வேதனையுறும் இவர்கள் வருங்காலத்தில் இரு தலைக் கொள்ளி எறும்பு போலாகித் தவிக்கப் போவதை நாம் கண்ணாரக் காணத்தான் போகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த இதழ்—2-9-1962—மன்னார் மாநாட்டு மலர்

# கவிஞர் சங்கம்

## பெயர்:

கழகத் தின் பெயர் கவிஞர் சங்கம்.

## குறிக்கோள்:

கவிதை வளர்த்தலே கருதும் இலக்காம்.

## பணிகள்:

மாதம் தோறும் மன்றம் நடாத்தி
மற்றவன் மதுரக் கவிதை வா சித்தல்,
காலாண்டுக் கோர் முறை கவிதை நூலொன்றை
நாலு பே ரறிய நாட்டில் வெளியிடல்,
கவி நூல் நிலையம் நிறுவுதல், கவிஞரைக்
கௌரவித் திடுதல், பிறமொழிக் கவிமலர்
கொய்தெம் தமிழ் எனும் கோமகட் கணிதல்,
அன்னிய நாட்டின் அருமைக் கவிஞர்
ஈழம் வரின் வரவேற்பு நல்கிக்
காவிய உலகின் கருத்துகள் பற்றி
உரையாட் டயர்தல், உன்னதக் கவிதை
அரங்குகள் அடிக்கடி நடாத்தி மகிழ்தல்,
நாடகம் கவிதையில் நடித்துக் காட்டுதல்,
இன்னவை போற்பல இனிய பணிகள்
சங்கத் தாலே சாதிக் கப்படும்.

## உறுப்பினர் தகுதியும் கடமையும்:

கவிதை எழுதும் கவிஞர் வாழ்க
அவர்கள் இந்தக் கவிஞர் சங்கத்
தவிசில் அமரும் தகுதி பெற்றார்.
கவிதை புனைதல் அவர் கட னுமே!

## சங்கத்தவராகும் முறை:

தங்கத் தமிழ் வளர்க்குந் தக்ககவிஞரெலாம்
சங்கத் தவராதல் சாலும்; எனினும் ஒரு
சங்கத்துக் கூட்டத்திற் சரிபாதிக் கதிகம் பேர்
இங்கொத்துக் கொள்ள வேண்டும்.
இதுமாறாப் பொது விதியாம்.

## கட்டணம்:

ஆண்டுக் கட்டணம் ஐந்து ரூபா.

## நிருவாகிகள்:

ஆண்டுக் கொருமுறை அமர்ந்த பே ரவையில்
செயலவர் பொருளவர் தெரியப்படுவர்.

## செயலவை:

இவர்கள் இருவரோ டின்னும் மூவர்
சேர்ந்தே அமைந்தொரு செயலவை இயங்கும்.

## செயலவர்:

சங்கம் தன்பணி சரிவரப் புரியச்
செயலவர் அதனைச் செலுத்தக் கடவர்.

## பொருளவர்:

செயலவை செய்யும் தீர்மா னப்படி
செலவுகள் செய்தலும் வரவுகள் வைத்தலும்
பொருளவர் தமது பொறுப்பே யாகும்.

## தலைவர்:

அன்றன் றைக்கொரு தலைவரை அமர்த்தி
ஒவ்வொரு கூட்டமும் ஒழுங்காய் நடக்கும்.

## குறைந்தொகை:

கூட்டத் துக்குக் குறைந்தொகை ஏழு.

## ஏனையவை:

இங்கு விதியெதும் இல்லா விடத்துப்
பொதுவழக் குகளே போற்றப்படுமாம்.

## வாழ்த்து:

வாழிய கவிதை; வாழிய தமிழே!

# வாழைப்பழத்திற்கு யோகம் பிறக்கிறது

**எதிர்காலத்தில் தேயிலை இறப்பர் போன்றவற்றிற்கு உள்ள ஏற்றுமதி வியாபாரம் குறைந்து, வாழைப் பழத்திற்கு கிராக்கி ஏற்படும் என்று தெரிகிறது. இல்லாவிட்டால் இந்தியாவிடமிருந்து ரஷ்யா இரண்டு கோடி ரூபாவுக்குப் பழங்களை வாங்குமா?**

வாழைப்பழம்: பண்டைய காலந் தொட்டே தமிழ் இலக்கியத்தோடு ஒன்றி விட்ட பெருமையுடையது. மா, பலா, வாழை என முக்கனியுடன் சேர்ந்த பெருமையுடையது. தமிழரின் மண விழாக்களிலும், மற்றைய சிறப்பு வைபவங்களிலும் முதலிடம் வாழைப் பழத்திற்கேயுண்டு.

இத்தகைய சிறப்பு நிரம்பியதாயிருப்பினும், மிக மலிவாகவும், எப்பொழுதும் தாராளமாகக் கிடைப்பதாலும் இன்று இதற்கு மற்ற பழங்களுக்குப் போன்ற மதிப்புக கிடையாதென்றே நம்புகிறேன். இருந்தும் திடீரென இதற்கும் ஓர் "யோகம்" பிறந்து விட்டது. ஆம், ரஷ்யா, இந்தியாவிடமிருந்து 2 கோடி பெறுமதியான ரூபாய்க்கு வாழைப் பழங்களை வாங்கியுள்ளது என தினசரிகளில் வந்த செய்திகளே இதன் மதிப்பு உயர்ந்ததற்குக் காரணமாகும்.

எத்தனையோ விதவிதமான பழவர்க்கங்கள் இருக்க ரஷ்யா போய் ஏன் இந்த வாழைப்பழங்களை வாங்குகிறதே இதில் என்னதான் விசேடங்களிருக்கின்றன என ஆராயத் தொடங்கினேன்.

மற்றெல்லாப் பழங்களையும் விட சகல உயிர் சத்துக்களும் நிறைந்துள்ள தாய் திகழ்வது இவ்வாழைப் பழங்களே என அறிய முடிந்தது. ஒரு நூவிலிருந்து.

வாழைப்பழம், முட்டையிலுள்ள வெண்கருச் சத்தான 'ஆல்பூமினேய்ட்' என்பதும், கொழுப்பு, சர்க்கரை முதலிய சத்துக்களும்; போதுமான உப்புச் சத்தும் நிறைந்திருக்கின்றது. மேலும், உயிரை ஒம்பும் கந்தகம், இரும்பு, சுண்ணும்பு சத்துக்களும், மேக்னீஷியம் எனும் உறுதியான சுத்த வெண்மை நிறமுடையதும், காற்றின் சக்தியில் கண்ணைப் பறிக்கும் படியான ஒளி வீசக் கூடிய உலோகச் சத்தும், பொட்டாசியம் என்னும் ஒருவித நச்சுச் சத்தும் இன்னும் தாவர சத்துக்கள் பலவும் நிறைந்துள்ளது. குறிப்பாக இரும்பு, கந்தகம், சுண்ணும்பு போன்ற உடலுக்கு உரமூட்டும் சத்துக்களே மிகுதியாக நிறைந்துள்ளது.

**இதயசூரியன்**

வாழைப்பழத்திலுள்ள இரும்புச் சத்து, நமது தேகத்திலுள்ள கெட்ட இரத்தத்தைப் போக்கியும் செம்மை பொருந்திய சுத்த இரத்தத்தை அளித்தும் அவயங்களை நன்கு இயங்கச் செய்தும் இரத்த விருத்தியை உண்டாக்குகிறது.

கெந்தக சத்தினுல் மூளையையும், முதுகெலும்பையும் அதினின்று பிரியும் விலா வெலும்புகளையும் வளம் பெற்று வளர்ச்சியுறச் செய்கிறது வாழைப்பழம்.

சுண்ணும்பு சத்தினுல் "ராச்சிட்சம்" என்னும் எலும்பு வியாதியைப் போக்கி எலும்புகளைச் சரியான நிலையில் பொருந்தச் செய்கிறது.

எக்காலத்திலும் வாழைப் பழம் உட்கொள்வதால் பலம், உணர்ச்சி, ஊக்கம், ஆரோக்கியம் முதலியவற்றைப் பெற்று மலச்சிக்கல் அற்ற நோயற்ற சுகவாழ்வு வாழலாம். தவிரவும், நமது தேகத்திற்குத் தேவையான தாது விருத்தியையும் அளிக்கிறது இது.

1940-ம் ஆண்டே மேல் நாட்டார் வாழைப் பழமே எல்லா விட்டமின்களும் நிறைந்த சிறந்த பழவர்க்கம் எனக் கண்டுள்ளனர். இதிலும் 'விட்டமின் சி' அதிகமாக நிறைந்துள்ளதாம்.

விட்டமின் சத்தே எல்லா சத்துக்களிலும் மேலான சத்து என்பது தெளிவு. வாழைப்பழத்திலுள்ள விட்டமின்களால் சோகை, நாள்பட்ட வியாதிகளை நீக்கி, இரத்தப் பெருக்கை உண்டாக்குகிறது. விட்டமின் 'பி' நரம்புகளுக்கு பலத்தையும் விட்டமின் 'இ' "கல்ஷியம்" சத்தை தேகத்தில் தங்க வைக்கவும், எலும்பு வியாதிகளை நீக்கவும் உதவுகிறது. தொற்று வியாதியினின்றும் காப்பாற்றுகிறது.

வியாதியஸ்தர்களும், ஜீரண சக்தியற்றவர்களும் சாப்பிட உகந்த பழம் வாழைப்பழமே! எனவே நாமுட தினசரி நான்கு அல்லது ஆறு வாழைப்பழங்கள் வீதம் சாப்பிட்டு வந்தால் சகல சத்துக்களையும் ஒருங்கே பெற்று நோயற்ற வாழ்வோடும், திரேகாரோக்கியத்தோடும் மகிழ்வுடன் வாழலாம் என்பதில் ஐயமில்லை யல்லவா?

# 'நேர்மை தெரியாத அரசு தியாகம் பற்றிப் போதிக்கிறது'

## மூதூரில் நபிநாயகர் விழா

**படையும் பட்டாளமும் கொண்டு ஆளத்தான் தெரிகிறது இந்த அரசுக்கு; ஏழைகளுக்குக் கொடுக்கப்படும் 2 கொத்து அரிசியில் அரைக் கொத்து அரிசியை அபகரித்து விட்டு தியாகம் செய்யுங்கள் நாடு செழிக்க என்று உபதேசம் செய்கிறார்கள் நீதியற்ற ஆட்சியாளர்கள். இன்றைய இஸ்லாமிய இளைஞர்கள், இறுதித் தூதர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காட்டிய பாதையில் செல்ல வேண்டும். அநிதிகளை எதிர்க்கவேண்டும்.**

இவ்வாறு கடந்த வாரம் மூதூரைச் சேர்ந்த மக்குளுத்தில் நடைபெற்ற நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிறந்த நாள் விழாவில் பேசிய ஜனப் எம். இ. எச். எம். தௌபீக் குறிப்பிட்டார்.

ஜனப் தௌபீக் மேலும் பேசுகையில் "நபிகள் நாயகமவர்களின் வரலாறு வீரத்துக்கு ஓர் ஊற்று; சமுதாயத்துக்கு ஒரு நல்ல எடுத்துக் காட்டு. தீனுல் இஸ்லாத்தைப் பின்பற்றிய எந்த ஒருவருடைய வாழ்க்கையைப் புரட்டிப் பார்த்தாலும் 'தியாகம்'தான் சிரித்துக் கொண்டிருக்கும்.

குருட்டு நம்பிக்கையிலே சிக்கிக் கிடந்த மக்களை விடுவித்து, சீர்திருத்தப் பாதையிலே மக்களை வழி நடத்திச் சென்றார்கள், அனுதையாகப் பிறந்த அண்ணல் அவர்கள் உண்மையை எடுத்துக் கூறினார்கள். இன்று...எம் நாட்டை ஆளுகின்ற சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆட்சிக் குழுவுக்கு நேர்மை தெரியவில்லை. படையும் பட்டாளமும் உள்ள இராணுவம் இல்லாமல் உண்மையைக் கூற முடியாமலிருக்கி

(8-ம் பக்கம் பார்க்க)




# தலைவலிக்கு

ரிஷி நேத்திர சஞ்சீவி தைலம்

108 மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது

இதனைத் தலைக்கு வைத்துவரின் குணமாகும் வியாதிகள்:

கண் எரிச்சல், கண்சிவப்பு, கண்ணீர் வடிதல் பூ விழுதல், கண் அரிப்பு, காதில் சீழ் வடிதல், காதுக்குத்து, பீனிசம், செவிடு, காது இரைச்சல், காது மந்தம், மூக்கிலிருந்து நீர் வடிதல், ரத்தம் வருதல், ஓயாத் தும்மல், நாற்ற உணர்ச்சி காணல், வாசனை உணர்ச்சி இல்லாதிருப்பது, மண்டையிடி, மண்டைக் கரப்பான், பிடரி வலி, ரோமம் உதிர்தல் முதலியவைகளைக் குணப்படுத்துவதோடு தலைமயிரைக் கறுத்த நிறத்தோடு அடர்த்தியாக வளரச் செய்யும்.

விபரமடங்கிய கேட்லாக் இனும்

புட்டி 1க்கு ரூ. 5-75
அரைப் புட்டி ரூ. 3-00

தபால் செலவு -/95

ஞானசுந்தர வைத்தியசாலை,

187, செட்டியார் தெரு, கொழும்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரக் கட்சியோடு இரண்டறக் கலந்து உறவாடிய கம்யூனிஸ்ட் கட்சி சில நாட்களுக்கு முன்னர் புதிய "ஸ்டண்ட்" ஒன்றைச் செய்து காட்டியது. மக்கள் வரவு செலவுத் திட்டம் என்ற போர்வையில் சில மண் பொம்மை ஒன்றைச் செய்து, நாடெல்லாம் வேடிக்கை காட்டித் திரிந்தது.

இந்த மக்கள் வரவு செலவுத் திட்ட பொம்மலாட்டத்தினல் யாருக்கு என்ன பலன் ஏற்பட்டதோ தெரியவில்லை. ஏதோ நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மைகள் செய்கிறோம் என்று வீண் வாய்வீச்சு வீசியது தான் மிச்சம். அதனல் எள்ளளவு பலனும் ஏற்பட்டதாகக் கூற முடியாது.

நிதி மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தமது வரவு செலவுத் திட்டத்தில் நாட்டு மக்களின் வயிற்றிலடிக்கும் நாசத் திட்டத்தையே கொண்டு வந்துள்ளார். மக்கள் வரவு செலவுத் திட்டத்தை அரசாங்கம் கையேற்க வேண்டுமென அன்று கூவிய கம்யூனிஸ்டுகளின் தற்போதைய நிலை என்ன? நாட்டு மக்களை குறிப்பாக ஏழை மக்களைப் பாதிக்கக்கூடிய படு மோசமானதொரு வரவு செலவுத் திட்டத்தைக் கொண்டு வந்துள்ள ஆளும் கட்சியை கம்யூனிஸ்டுகள் ஆதரிக்கப் போகின்றார்களா?

இரண்டும் கெட்டான் நிலையில் நின்று தவிக்கும் ஆளும் கட்சியான சுதந்திரக் கட்சிக்கு இப்பொழுது பெரும் தலையிடிகள் ஏற்படப் போகின்றன. நாட்டிலே அலைமோதும் எதிர்ப்பையும், கொதிப்பையும் சமாளிக்க முடியாது திண்டாடுகிறது. எதிர்க் கட்சிகள் பல நாடெங்கணும் கண்டனக் குரல்களை எழுப்ப ஆரம்பித்துள்ளன. அரிசி வெட்டையும், புது வரிகளையும் எதிர்த்து அரசாங்கத்தை நோக்கி எதிர்ப்புப் பாணங்கள் தொடுக்க ஆரம்பித்துள்ளனர் மக்கள்.

## பாம்புக்கு வால்...

மக்கள் வரவு செலவுத் திட்ட மகுடியை மக்கள் முன் ஊதி, மக்களை ஓரளவு தூண்டி விட்ட கம்யூனிஸ்டுகள், 'பாம்புக்கு வாலும் மீனுக்குத் தலையும்' காட்ட ஆரம்பித்துள்ளது தான் நமக்கு நகைப்பைக் கொடுக்கிறது.

தங்களால் தயாரிக்கப்பட்டுள்ள ஒரு தகுடுதத்தத் திட்டத்தையிட்டு பிரசாரத்தை ஆரம்பித்தார்கள். ஆனல் அந்தத் திட்டத்தையிட்டு அரசாங்கமோ அல்லது நிதி மந்திரியோ எதுவித மான அக்கறையும் காட்டவேயில்லை. புஸ்வாணமாகி விட்ட ஒரு திட்டத்தை, 'புஸ்வாணமாகிவிடும்' என்பதை முன்கூட்டியே அறிந்திருந்தும், எதற்காகக் கட்டி இழுத்து மாரடிக்க வேண்டும்?

இது இவ்வாறிருக்க, தங்கள் திட்டத்தை ஏற்க எந்த வகையானஒப்புதல் தாவோ அல்லது அதைப் பற்றிப் பொருட்படுத்தவோ முடியாத அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ள அதிர்ச்சிக்கு வைத்தியம் செய்யப் புறப் பட்டுள்ளதாக கம்யூனிஸ்ட் கட்சியைப் பற்றிய தகவல்கள் நமது அப்பாக்குட்டி அம்மானிடம் சிக்கியுள்ளன.

மக்களின் எதிர்ப்புத் தாங்காது அரசாங்கம் அடி சாய்ந்து போய்விடும் என்ற நிலை ஏற்படுமானல், அதற்கு என்னென்னவகையில் முட்டுக் கொடுக்கலாம் என்பதையிட்டு ஒரு திட்டத்தைத் தீட்டுவதில் கம்யூனிஸ்டுகள் முனைந்துள்ளார்களாம்.

சில நாட்களுக்கு முன்னர் தோழர் பீட்டர் கெனமன் பிரதமர் திருமதி சிறிமாவோ அம்மையாரிடம் சென்று சில மணி நேரங்கள் குசுகுசு மந்திரம் போட்டுத் திரும்பினாராம். அரசாங்கத்தையும், அதன் புது வரவு செலவுத் திட்டத்தையும் வீழ்த்த எதுவித முயற்சிகள் நடைபெற்றாலும், அந்த முயற்சியில் தாங்களும் பங்கு கொள்ளுவதுபோல் பாசாங்கு செய்து எல்லோரையும் சேர்த்துக் கவிழ்த்து விடத் திட்டங்கள் தயாரித்துள்ளார்களாம். நயவஞ்சக குரப புலிகளல்லவா கம்யூனிஸ்டுகள்? சர்வ தேசிய சாணக்கியர்களல்லவா? இன்னும் என்னென்ன கோமாளிக் கூத்துக்கள் காட்டப் போகிறார்களோ, பொறுத்திருந்து பார்ப்போம்.

# சந்தித்து வந்தவை

காலகண்டன்

## முற்போக்கு எழுத்தாளர்...!

யாழ்ப்பாணத்திலிருந்து "தென்னவன் தம்பி" என்ற புனைபெயரில் ஒரு மருமகன் கீழ்கண்டவாறு அம்மானுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார்—கடிதத்தின் ஒரு பகுதி ஒரு கேள்வி. அதைப் பாருங்கள்.

அப்பாக்குட்டி அம்மான்,

இப்பொழுதெல்லாம் முற்போக்கு எழுத்து என்று அடிக்கடி கேள்விப்படுகிறேமே? முற்போக்கு எழுத்தாளர் யார்? தயவு செய்து சொல்ல முடியுமா?

—தென்னவன் தம்பி,
யாழ்ப்பாணம்.

## அம்மானின் பதில்

தென்னவன் தம்பிக்கு,

தென்னவா! முற்போக்கு, பிற்போக்கு என்பதெல்லாம், உனக்கும் எனக்கும் புரியாத 'யதார்த்தம்'! முற்போக்கு எழுத்தாளர் என்று சொல்லிக்கொள்ள சிலருக்கு ஆசை. எழுதுவதில் கூட முற்போக்கும் பிற்போக்கும் என்று எழுத்துக்களை இந்த யதார்த்த வாதிகள் உண்டாக்கியுள்ளனர்.

எழுத வேண்டுமென்ற ஆசையில், ஏதாவது வளவளவென்று வாந்தி எடுப்பது.........வெறுப்பூட்டும் ஆபாசங்களை அப்படி அப்படியே வர்ணிப்பது......... பொதுவாக சமூகத்தில் பரகஸ்யப் படுத்தப்படக் கூடாது, என்று மறை பொருட்களாக மறைக்கப்பட்டவற்றை பட்டவர்த்தனமாக எழுதுதல்; இதெல்லாம் முற்போக்கின் லட்சணம். எதை எழுதுவது, எதை எழுதாமல் விடுவது என்பதையிட்டுக் கருதுவதே முற்போக்கு இலக்கணத்துக்கு இழுக்கு.

முற்போக்கு என்று தங்களைத் தாங்களே நாமகரணம் சூட்டிக் கொள்ளுபவர்களெல்லாம் இரண்டு விடயங்களை மனதில் வைத்தே "முற்போக்கு" முத்திரையைப் பொறித்துக் கொள்ளுகின்றனர்.

முற்போக்கு என்ற முத்திரையுடன் எதை எழுதினலும், குறிப்பாக வாசிப்போருக்கு விளங்காத ஒரு 'இலக்கிய'த்தை எழுதிவிட்டாலும் போதும். அது உடனே பிரசுரமாகி விடுகிறது. எப்படியோ புத்தக உருவிலும் வெளியாகி விடுகிறது. முற்போக்கை விரும்பும் இரண்டாவது குழுவினர், ருஷ்யாவின் செலவில், சில ஊர்களையாவது எப்போதாவது பார்த்து விடலாமே என்ற பேராசை.

சிற்சில வேளைகளில் எழுத்தாளர்களிடையே ... ஸிஸ்ட் இலக்கியம் எழுதுபவர்களை ருஷ்ய அரசாங்கம் அங்கு அழைத்து அதையும் இதையும் காட்டி விட்டு விடுகிறது. இந்த ஊர் பார்க்கும் ஆசையுடன், விரைவில் பிரபல்யமாகிவிடலாம் என்ற அவாவினலும் உந்தப்பட்டுவிடுவதனல் தான் முற்போக்குத் திரைக்குள் சென்று மூடு மந்திரம் ஜபிக்க ஆரம்பித்து விடுகின்றனர், சில எழுத்தாளக் குஞ்சுகள்.

அம்மான்

## தலை வீங்கினல்...!

ஏதாவது ஒரு பத்திரிகையில் ஒரு சிறு வரி எழுதிவிட்டால் போதும், தன்னைத் தானே எழுத்தாளன் என்று பட்டம் சூட்டிக்கொள்வது ஒரு தொற்று வியாதியாகி விட்டது இப்போது. தான் எழுத்தாளன் என்று ஆகிவிட்டதும் திடீரென தலையும் வீங்கிவிடுகிறது. தான் நினைப்பதெல்லாம் சரி என்று எண்ண ஆரம்பித்து விடுகின்றனர். எழுத்தாளன் ஒவ்வொருவனுக்கும் தன்னடக்கத்துடன் கூடிய கர்வம் கொஞ்சம் இருக்கத்தான் வேண்டும். அப்போதுதான் மக்களால் போற்றக் கூடிய இலக்கியங்களைப் படைக்க முடியும். ஆனல் ஒருவரியை எழுதியதும் எழுத்துலகம் முழுவதையுமே தன் கை விரல்களுக்குள் அடக்கி விட்டதாகக் கருதுவது தான் கூடாது. இந்த நிலையில் தலை வீக்கம் கண்டால், தலைப் பாரம் ஏற ஏற தலை தன் நிலையிழந்து தரையை நோக்கி மடங்கி, ஈற்றில் தரையுடன் தலை ஐக்கியமாகிவிட நேரிடும்.

## கடிதம் எழுதுவோருக்கு..

அப்பாக்குட்டி அம்மானுடனே, அல்லது காலகண்டரிடமோ கடிதத் தொடர்பு வைத்துக்கொள்ள விரும்பும் எவரும், தகவல்கள் தர விரும்புவோருட்பட, தங்கள் சொந்தப் பெயரையும்,முகவரியையும், குறிப்பிடத் தவறக்கூடாது. முழுப் பெயரும் ,முகவரியும், இல்லாது வரும் கடிதங்கள் அம்மானின் கைக்குச் சேரமாட்டாது என்பதை அறிவுறுத்த விரும்புகிறேம்.

—காலகண்டர்.

## எழுத்தாளச் சி(ற்)பிகள்

சில யதார்த்த எழுத்தாளர்கள் தங்கள் கருத்துக்களை இரவல் கொடுப்பது முண்டு. மட்டக்களப்பைச் சேர்ந்த முற்போக்குக் கும்பலிடம் இந்த இரவல் பழக்கம அதிகம உண்டு. பள்ளிச் சிறுர்களின் பெயரில் எதையாவது எழுதிக் கொடுத்துப் பத்திரிகைகளில் பிரசுரமாக்கிவிடுவது; ஏதாவது புரியாத 'யதார்த்தத்தத்துவ'ங்கள் அந்த எழுத்தில் காணப்பட்டு, எழுத்துடைப் பெயராளனை அண்டி அவரிடம் விளக்கம் கோரினல் விடயம் அம்பலமாகி விடும். அவர் ஒரு தற்குறி என்பது உடன் வெட்ட வெளிச்சமாகி விடும்.

இப்படி கருத்தை விற்பதும், பெயரை விற்பதும் எதற்காகவோ தெரியவில்லை.

எப்படியோ தங்கள் பெயர்கள் பத்திரிகைகளில் இடம் பெற்றுவிட்டால் போதும் என்று எண்ணும சில மாணவர்களுக்கும், எழுத்துலக ஆசை கொண்ட இளைஞர்களுக்கும் இத்தகைய வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் 'முற்போக்கு' முக்காட்டுக்குள் சில முகங்களை அணைத்துக் கொள்ள வலை வீசுகின்றனர்.

## மீண்டும் மந்திரி வரவேற்பு

நல்ல காரியங்களுக்கு முட்டுக்கட்டை போட முயலும் பலர் இருக்கிறர்கள். சில காரியங்கள் நடைபெற்றல், தமது பதவிக்கோ, பொருளுக்கோ பங்கம் ஏற்பட்டு விடக் கூடுமே என்று நற்காரியங்களுக்குத் தடை போடுவர். இன்னும் சிலர் சொந்தப் பொறமை, விருப்பு வெறுப்புகளைக் கொண்டு தடையிடுவர். வேறு பலர் நற்காரியங்கள் நடைபெறும் அதே காலங்களில் சுய நலத்திற்காக தீமைகளைச் செய்து காட்டிக் கொடுக்கும் கைங்கரியத்தைக் கடைப்பிடிப்பவர்கள்.

இலங்கைத் தமிழ் பேசும் இனம் தனக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்குப் பரிகாரம் தேடி அல்லலுறும் இவ்வேளையில், சிலர் அதற்கு விரோதமாக இருக்கின்றனர். அவர்கள் மேற் கூறப்பட்ட மூன்று வகைக் குழுவில் ஏதாவது ஒன்றுக்கு இலக்கணமாவர். வீடு எரி

(13-ம் பக்கம் பார்க்க)


## தி. மு. க. தடைக்கு திருமலை நகரசபை கண்டனம்

"இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆள வந்தார்கள் தடை விதித்தது, இந்த நாட்டில் சனநாயகத்தையே குழி தோண்டிப் புதைக்கும் செயலாகும். ஒரு சில அரசியல்வாதிகளைத் திருப்திப்படுத்துவ தற்காக, இந்த நடவடிக்கையை எடுக்க வேண்டிய அவசியம் ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டிருக்குமேயானல், இன்று இந்த நாட்டின் அரசுக் கட்டில் அமர்ந்திருப்பவர்கள் தங்கள் சக்தியிலேயே நம்பிக்கை இழந்து விட்டனர் என்பதைத்தான் இச்சம்பவம் காட்டிக் காட்டுகின்றது. இவ்வாறு திருமலை நகரசபை முதலாம் வட்டார உறுப்பினர் திரு. ஞா. ஞாக்காஸ் அவர்கள் ஓர் பிரேரணையைப் பிரேரித்தார்.

அப்பிரேரணை மேலும் கூறுவதாவது: "அழகு தமிழ் மீது அழியாக் காதலை ஆயிரமாயிரம் உள்ளங்களில் தட்டியெழுப்பி, முடைநாற்றம் வீசுகின்ற மூடநம்பிக்கைகளுக்குச் சாவு மணி அடித்து சாதிக் கொடுமைகளைச் சாடி, மறுமலர்ச்சிக் கருத்துககளைப் பரப்பி வந்த ஒரு சல்ச்சார தாபனத்திற்கு, இந்த நாட்டின் அரசியலார் தடையுத்தரவு விதித்ததை, ஈழம் வாழ் தமிழ் பேசும் சமூகம், தங்கள் இனத்தின்மீது ஆட்சியாளர்கள் வேண்டுமென்று புரிந்த கொடுமை என்றே கருதுகின்றது. இந்த நிலையில் திருக்கோணமலை நகராண்மைக் கழகம், ஆட்சியாளர்களின் இந்த அடக்கு முறை நடவடிக்கையை ஆணித்தரமாகக் கண்டிப்பதுடன், இதற்கு உடந்தையாக விருந்த பிற்போக்குச் சக்திகளின் சரிவு காலமும் வெகு தொலைவில் இல்லை என்பதையும் நெஞ்சில் துணிவுடன் தெரிவித்துக் கொண்டு, அடக்குமுறையால் எந்த இயக்கத்தையும் அணை போட்டுத் தடுத்துவிட முடியாதென்றும், ஆனல் பதிலுக்கு அந்த இயக்கத்தின் மீது, முன்னையவிட அதிக ஆர்வத்தையே வளர்க்க முடியும் என்பதையும் தெளிவுபடுத்திக் கொள்ள விரும்புகின்றது."


தொலைபேசி 693. HIRATA "தந்தி சேகரன்"

உறுதியான நைலோன், தருலோன் நூல்களும், வலைகளும்



கிடைக்குமிடம்: சேகரம் & சன்ஸ்
74, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தமிழைச் சீரழித்த சாதிக் கொடுமை

## பிளவுகள் நீடித்தால் அழிவு நிச்சயம்

**சீரும் சிறப்பும் பெற்று, செம்மையுடன் வாழ்ந்த செந்தமிழர் பரம்பரை இன்று சின்னாபின்னப்பட்டுச் செயலிழந்து தவிக்கிறது. சாதி யெனும் கொடு வியாதியால் பீடிக்கப்பட்டுள்ளது. மக்கள் யாவரும் சரிநிகர் சமானம் என்ற நிலையில் தமிழ் இனம் ஒன்றுபடாவிடில் நமக்கு ஏற்படப்போகும் தீங்குகள் அனேகம். சிந்தித்துச் செயலாற்ற வேண்டியது நமது பொறுப்பு.**

அந்தோ! தமிழினமே உன் நிலையை எண்ணும் போது எனக்கு அழுவதா? சிரிப்பதா? என்று புரியவில்லை. கங்கை கொண்டான், கடாரத்தை வென்றான், ஈழம் கண்டான், இமயத்தில் இலச்சினை பொறித்தான் என்றெல்லாம் புகழ் பாடப்படும் அந்த மறத்தமிழர் பரம்பரையில் வந்ததுதானா இன்றைய தமிழினம்? "பிறப்பொக்கும் எவ்வுயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையால்" என்ற சீர்திருத்த நோக்கம் படைத்த பண்டைத் தமிழர் பரம்பரையில் வந்தவர்கள்தானா ஈழம் வாழ் தமிழ் மக்கள்? ஈழம் வாழ் தமிழ் மக்களின் பாரம்பரியத்திலே ஐயம்கொள்ள வேண்டியிருக்கிறது, அவர்களுடைய போக்கை நோக்குமிடத்து.

கன்னித் தமிழைப் பழித்தார் கனகவிசயர் என்றதும் வெகுண்டெழுந்தான் சேரன் செங்குட்டுவன். மொழியை உயிரினும் மேலாகப் போற்றிய அந்தப் பழந்தமிழர் வழிவந்தது தானா இன்றைய ஈழத் தமிழினம். உணர்ச்சியற்ற மரக்கட்டைகளாக, உணவிற்காக வாழுகிறது ஈழத் தமிழினம். மானம் பெரிதல்ல; மான் பெருக்க உண்ணும் உணவு தான் பெரிதென்று கன வாழ்வு வாழுகின்றனர் ஈழத் தமிழர். சிங்கள வெறியென்னும் மதயானை செந்தமிழ்ப் பூஞ்சோலையிலே புகுந்து பாழ்படுத்தும் போதினிலும் கண்ணிருந்தும் குருடர்களாய், காதிருந்தும் செவிடர்களாய், உணர்ச்சியற்ற மரக்கட்டைகளாக வாழுவதா தமிழினம்? வாழத்தான் செய்கிறது ஈழத் தமிழினம்!

அன்னை மொழியாம் தமிழ் மொழியை அழித்தொழிக்க ஆதிக்க வெறிகொண்ட சிங்கள ஆட்சி பீடம் ஆர்த்தெழுந்து நிற்கையிலே, ஐந்தடக்கிபோல் உணர்ச்சிகளை உள்ளடக்கி, உரிமை வேண்டாம், சலுகை கிடைத்தால் போதும் என்று எச்சிலிலை பொறுக்கி வாழ எண்ணுகிறது ஈழத்தமிழினம். உரிமை பறிபோய்விட்டது! தமிழர் உடலினால் பலராயினும் உள்ளத்தால் ஒருவர் என்ற உணர்வு ஓங்கி ஒன்றுபட்டு உரிமைக் குரல் எழுப்ப வேண்டிய இந்த நேரத்திலும் மதத்தாலும், சாதியாலும் பிளவுபட்டு நிற்கிறது தமிழினம்.

### உரிமைகள் கிடையாதா?

காலம் மாறும். நம்மினத்தின் கற்பனையில் உதித்த இந்த பிற்போக்கு வாதம், அதாவது சாதி பேதம் மாறும் என்று நம்பியிருந்தோம். ஆனால் நமது நம்

**வளலாயூர் யாழ்வேந்தன்**

பிக்கை வலிவும் பொலிவும் பெறுவதற்குப் பதில் நலிவுறுவதாகவேயிருக்கிறது.

தாழ்த்தப்பட்ட மக்களென்று தள்ளிவைக்கப்பட்ட சிறுபான்மைத் தமிழருக்கு மனித உரிமைகள் மறுக்கப்பட்டன. "கண்ணுடையவர் என்போர் கற்றோர்" என்று கூறுகிறான் வள்ளுவப் பெருந்தகை. கண்ணான கல்வியே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மறுக்கப்பட்டது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கல்வி வசதியிருந்தால் அவர்கள் அறிவுக் கண் கொண்டு அகிலத்தை நோக்குவார்கள்; அதனால் நாம் அடிமைப்பட்டிருப்பது ஏன்? என்று எண்ணிப் பார்ப்பார்கள். ஏன் என்ற கேள்வி அடிமைகளின் உள்ளங்களிலே உதித்துவிட்டால் அதன் பிறகு அடிமை விலங்குகள் தூள் தூளாகிவிடும். இதை உணர்ந்துதான் உயர்சாதி என்று தங்களைக் கூறிக்கொள்வோர் தாழ்த்தப்பட்டவர்களென்று தள்ளிவைக்கப்பட்டவர்களுக்கு கல்வி வசதியை அளிக்க மறுத்தார்கள்.

அரசியல் தலைவர்கள், அரங்கிலே நின்று, அடுக்கு மொழியிலே, அன்னை மொழியை அடிமைகொள்ள, அழித்தொழிக்க வந்த சிங்கள மொழியைச் சிந்தையில் கொள்ளாதீர் என்று சொற்பெருக்கு ஆற்றுகின்றனர். அவையெல்லாம் உணர்ச்சியைத் தட்டி எழுப்புகின்றனவா? இல்லை! நானும் எனது குடும்பமும் வாழ்ந்தால் போதும். இனமும் மொழியும் எக்கேடு கெட்டாலென்ன? என்று வாழுகின்றனர் மக்களிற் பலர்.

### பிஞ்சு மனதில் நஞ்சு!

சாதியென்ற இந்தக் கொடிய வியாதி ஆசிரியர்களைத்தான் அதிகமாகப் பீடித்திருப்பதுபோல் தோன்றுகிறது. எதிர்காலப் பிரசைகளை உருவாக்கவேண்டிய ஆசிரியர் சமூகத்திலே இந்தச் சாதிப் பேய் தாண்டவமாடுவது மிகவும் வருந்த வேண்டிய ஒன்றாகும். ஆசிரியர்களைப் பார்த்துத்தான் மாணவர்கள் நடப்பார்கள். பிஞ்சு மனங்களிலே நஞ்சை விதைத்துவிட்டால் அது எதிர்காலச் சமுதாயத்தைத் தான் பாதிக்கும்.

செந்தமிழைச் சிதைத்துவிட, சீரழிக்க விரும்புகிறது சிங்கள வெறி. சிங்கள மொழி பேசும் மக்கள் வாழும் சூழலிலே இருக்கும் போதுகூடவா இந்தச் சாதி சனியன் நம்மை விட்டுவிடாமல் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுகிறது? மலைநாடுகளுக்கு மாற்றப்பட்டிருக்கும் தாழ்த்தப்பட்ட ஆசிரியர்கள் இந்தச் சாதிக் கொடுமையால் மிகவும் பாதிக்கப் படுகிறார்கள்.

### அடிமை நிலை தொடரும்!

சிங்களவர் பறத் தமிழன் என்றதும் கொதித்தெழும் தமிழர்களே சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். ஊரிழந்து வேறோர் ஊருக்கு வந்தும் சாதியை விடாது பற்றிக் கொண்டிருக்கிறீர்களே, அந்தச் சாதியின் கொடுமையால் பாதிக்கப்படுபவர்களின் மனம் எப்படி வேதனைப்படும் என்பதை என்றாவது எண்ணிப்பார்த்தீர்களா?

யாழ்ப்பாணத்தில் தான் சாதியின் கொடுமையென்றால், யாழ்ப்பாணத்திற்கு அப்பாலும் இது தமிழரைத் தொடரத்தான் வேண்டுமா? தொடரத்தான் வேண்டுமென்று நீங்கள் விரும்பினால் தமிழினத்தின் அடிமை வாழ்வும் தொடரத்தான் செய்யும்.

இந்தச் சாதிச் சனியனுக்கு அவசரமாகவும், அவசியமாகவும் ஒரு முடிவு காணவிட்டால் தாழ்த்தப்பட்ட மக்களாகிய நாமும் எங்களுடைய மனப்பாங்கிலே மாற்றம் செய்யவேண்டி வரும்! உங்களுக்கு இல்லாத இனமொழிப் பற்று எங்களுக்கு மாத்திரம் ஏன் வேண்டுமென்று எங்களில் சிலர் எண்ணலாம்! அந்த எண்ணம் எங்களுடைய உள்ளங்களிலே எழுந்தால் அதன் முடிவு எப்படியிருக்குமென்று நான் சொல்லத் தேவையில்லை! ஆகையால் சிந்தித்துச் செயலாற்றுங்கள்.

---

# மக்கள் குரல்

## கதிர்காமத்தில் பொலிஸார்

கதிர்காமம் சென்று "கந்தனைக் காணலாம்; அவன் கருணையைப் பெறலாம்" என்ற நம்பிக்கையுடன் நூற்றுக்கணக்கான மைல்கட்கப்பாலிருந்து வந்த தாராளமான முருகபக்தர்கள் அங்கு கடும் ஏமாற்றமடைந்தனர். பொலிஸாரின் அக்கிரமமான நடத்தையே இதற்குக் காரணமாகும்.

இவ்வாண்டு கதிர்காமக் கோவிலினுள்ளே கூட்டத்தைச் சமாளிக்கும் பொறுப்பைப் பொலிஸார் ஏற்றிருந்தனர். இத்தனை காலமும், முருகதரிசனம் செய்ய விரும்புவோர் நேராகக் கோவிலினுள்ளே அனுமதிக்கப்பட்டனர். அர்ச்சனை செய்ய விரும்புவோர் மாத்திரம் கியூவில் நிற்கவிடப்பட்டு ஒருவர் பின் ஒருவராய் உள்ளே சென்றனர்.

வழக்கத்திற்கு மாறாக இவ்வாண்டிலோ பொலிஸார் கயிறுகட்டி பக்தர்களை உள்ளே செல்லவிடாது தடுத்தனர். அர்ச்சனை செய்வோர் மாத்திரம் ஒருவர் பின் ஒருவராய் உள்ளே அனுமதிக்கப்பட்டனர். அர்ச்சனை செய்ய விரும்புவோர் ஒரு தட்டத்தில் வெளியே விற்கப்படும் அர்ச்சனைப் பொருட்களை வாங்கி, ஒரு ரூபாவும் அத்துடன் இணைத்து, 'கியூவில்' நின்று உள்ளே சென்று கோவில் அர்ச்சகரான 'கப்புறாளை' யிடம் கொடுக்கவேண்டும்—என நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

பொலிஸாரின் கொள்கைப்படி, அர்ச்சனை செய்ய வசதியற்ற உண்மையான பக்தர்கள் உள்ளே போக முடியாதா? அனுமதி மறுக்கப் பட்டோர் எறிக்கும் வெய்யிலில் கண்களில் நீர் வழிய வெளியே நின்றுகொண்டிருந்தனர். பக்திப் பரவசத்தால் உள்ளே நுழைய எத்தனித்தோர் பொலிஸாரின் இரும்புக்கரங்களால் பிடரியில் பிடித்துத் தள்ளப்பட்டனர். அசூரத்தனமாகத் தாக்கப்பட்ட ஒரு பெண்மணி, கழுத்தில் கயிறு சிக்கி, தடுமாறிக் கீழே விழுந்த காட்சியை நான் கண்களால் கண்டேன்.

பொலிஸாரின் இத்தகைய நடவடிக்கைகள் தடுக்கப்படல் அவசியமாகும். இவர்களின் பிழையான செய்கை அரசாங்கத்திற்கு மாத்திரமல்லாது நாட்டிற்கே களங்கத்தைத் தேடித்தருகின்றன.

—ஒரு பக்தை—

கொழும்பு-6

## இந்நிலையில் மந்திரிப் பதவியா?

அடிமைகளாய், அனாதைகளாய் தமிழ் பேசும் மக்கள் வாழும் இக்கட்டத்தில், மூதூர் இரண்டாது பிரதிநிதி, தமிழர் ஒருவருக்கு மந்திரிப் பதவி தரவேண்டுமென்று பிட்சா பாத்திரமேந்தி ஆட்சியாளரை வேண்டுகின்றார்.

தமிழன் மந்திரியாக வருவதற்கு திறமையுண்டு; உரிமை உண்டு. ஆனால் தமிழன் உரிமைகளை இழந்து நடைப்பிணமாய் வாழும் நிலையில் மந்திரிப் பதவி வேண்டுமா? சிந்திக்க வேண்டிய கட்டம்.

இழந்த உரிமைகளைப் பெற்றபின், அழகு தமிழ் அரியாசனத்தில் அமர்ந்தவுடன், சரிநிகர் சமானமாய் இந்த நாட்டில் வாழும் நிலை வந்தவுடன்— தமிழ் பேசும் மக்கள் மந்திரிப் பதவிக்காகத் தேடி ஓடத்தேவையில்லை. அது நம்மை நாடி வரும். இந்த நிலையை உருவாக்க தமிழ் பேசும் மக்கள் அத்தனை பேரும் ஆவன செய்வார்களாக.

கரவை[illegible]

கொழும்பு.

## தமிழ் வளர்த்த...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இயற்றப்பெற்ற இந்நூலில் நபிகள் நாயகம் மீது பாடப்பெற்ற நூறு துதிப்பாக்கள் அடங்கியுள்ளன. இந்நூலை ஆக்கும்போது புலவருக்கேற்பட்ட சுவையான நிகழ்ச்சியொன்று அவரின் மாண்புக்குச் சான்றாக அமைகிறது.

சந்ததத் திருப்புகழின் ஐம்பத்தொன்பதாம் பாடலைப் புலவர் பாடிக் கொண்டிருந்தார். அதாவது அப்பாடலின்:

மஞ்சஞ்சுங் கொங்கங் கொந்தள<br>
முங்கும்பம் பந்தும் பம்பர<br>
மஞ்சந்தண் கஞ்சஞ் செஞ்<br>
சிமிழ் முலையாளு

முதலாம் அடியைப் பாடிவிட்டு மற்ற அடி வராததால் புலவர் நீண்ட நேரம் சிந்தனையிலாழ்ந்தார். 'மஞ்சஞ்சுங்' என்ற சொல்லை அவரின் வாய் முணுமுணுத்துக் கொண்டிருந்தது. அப்படியே நித்திரையிலாழ்ந்து விட்டார். அப்போது நபிகள் நாயகம் அவர்கள் கனவில் தோன்றி "மந்தன்கண் டஞ்சும்" என்று கூறி மறைந்தார்களாம். உடனே புலவர் விழித்தெழுந்து:

மந்தன்கண் டஞ்சும் சஞ்சர<br>
வம்புக்குஞ் சம்பிஞ் சஞ்சன<br>
வண்டுங்கண் டஞ்சங் குஞ்சர<br>
விழிமாதர்

என்று பாடலை முடித்தார். இந்நிகழ்ச்சியைப் புலவர் தன்னிடம் நேரில் கூறியதாக திவான் முகம்மது காசிம் ஆலிம் தெரிவிக்கிறார்.

இவ்வாறு இறையருள் பெற்ற தண்டமிழ் கவிஞராக விளங்கிய, அப்துல் காதிறு புலவர் 18—9—1918-ல் கண்டியின் அண்மையிலுள்ள [illegible] இறைவனடி சேர்ந்தார்.

வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்

வேல் தைலம்
மிகச் சிறந்த சஞ்சீவி

ஜலதோஷம், தலைவலி, ஒருதலைக்குத்து, கை கால் உளைச்சல், முதுகு வலி, விஷக் கடி, தேள்கடி, ஜன்னி, வாய்வுப் பிடிப்புகள், சுளுக்கு, வீக்கம், இரத்தக் கட்டு, கட்டிகள், புறப்பாடுகள் முதலிய சகல வியாதிகளுக்கும் பாதிக்கப்பட்ட இடங்களில் நன்றாகத் தேய்த்தால் மிக விரைவில் குணமடையும்.

ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய மகா சஞ்சீவி.

விலை ரூபா 1-25

தபால் செலவு வேறு

தயாரிப்பாளர்கள்:

S. P S. ஜெயம் கம்பெனி,
மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:

M A R S மனுவேல் நாடார் அன் கோ.,
34, செட்டியார் தெரு,
கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்

SUTANTIRAN

1962 ஆகஸ்ட் மாதம் 26-ந் தேதி

194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1163


## மன்னார் வழி காட்டும்

தமிழரசுக் கட்சி மகாநாடு அடுத்த வாரக் கடைசியில் மன்னாரில் கூடுகிறது. சிறப்பான முறையில், பிரமாண்டமான அளவில் மகாநாட்டை நடத்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. பலலாயிரக் கணக்கில் மக்கள் திரளுவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது சத்தியாக்கிரகத்துக்குப் பின் நடைபெறும் முதலாவது மகாநாடாகும். கடந்த கால சம்பவங்களை மகாநாடு எடை போட்டுப் பார்க்கும், அதற்கேற்ப வருங்காலத் திட்டங்களைத் திட்டும் என்று மக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.

தடை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் கட்சி மீண்டும் சுறுசுறுப்பாகச் செயல்படுகிறது. மூதூர் தேர்தலில் கட்சிக்கு மகத்தான வெற்றி. கட்சியின் செல்வாக்கை ஊர்ஜிதம் செய்து விட்டது மூதூர் தீர்ப்பு. இத்தேர்தலுக்குப் பின்னர் மக்கள் கவனத்தை ஈர்த்துள்ளது மன்னார் மகாநாடு தான். உரிமைப் போரைத் தொடர மகாநாடு வழி காட்டும் என மக்கள் திடமாக நம்புகின்றனர்.

சோதனைகள் மிகுந்த நெருக்கடியான ஒரு சந்தர்ப்பம் இது.

"சிங்களம் மட்டும்" சட்டம் தீவிர அமுல், அரசாங்க ஊழியர்களின் தொண்டை விழுள் சிங்களத்தைத் திணிக்கும் முயற்சி, திணிப்பை எதிர்த்தால் சம்பள உயர்வு நிறுத்தம், சிங்களத்தைப் படிப்புமாறு இன்னும் பல நிர்ப்பந்தங்கள், மலைநாட்டுத் தமிழரின் கல்வி உரிமையைப் பறிக்கவும் சட்டம், அவர்களின் பிள்ளைகள் தமிழில் கல்வி பயிலத் தடை, அவர்களைத் தோட்டங்களிலிருந்து விரட்ட வகுப்பு வாதிகளின் கிளர்ச்சி, தமிழ் மண்ணில் சிங்களக் குடியேற்றங்களை நிறுவச் சதி, அவசர காலச் சட்டம் இன்னும் அமுல், தி. மு. க. தடை, தமிழ் பேசும் மக்களின் உறுதியைக் குலைக்க தமிழ் பகுதிக்கு மந்திரிகளின் படையெடுப்பு, தமிழ் பகுதிகளில் ஆட்சியாளரது 5ம் படையின் சுறுசுறுப்பு, நாட்டிலே கடுமையான பொருளாதார நெருக்கடி, அரசாங்கத்தின் தவிப்பு—இத்தகைய சோதனைகள் நிறைந்த ஒரு சந்தர்ப்பத்திலேதான் தமிழரசு மகாநாடு கூடுகிறது. இதனால் மகாநாட்டின் பொறுப்பும் கூடுகிறது—முக்கியத்துவமும் அதிகரிக்கிறது, சரித்திரப் பிரசித்தி பெற்ற மகாநாடாக அது விளங்குமென்பதில் ஐயமில்லை.

கடந்த உரிமைப் போராட்டத்திலே மக்கள் ஈரடி முன்னேறினர். ஆனால் அடக்கு முறை ராணுவப் பேயாட்டத்தால் ஓரடி பின் வாங்கினர் தற்காலிகமாக. போராட்டப் பாதையிலே மீண்டும் முன்னேற மன்னார் வழி காட்டும் என்று எதிர்பார்க்கின்றனர்.

பொங்கிய எழுச்சி தணிந்தது. ஆனால் அது தற்காலிகமானதே! போராட்டங்களில் அப்படி நிகழ்வது புதுமையன்று. மீண்டும் மக்கள் இயங்கும்போது உணர்ச்சிப் பிரவாகம் கரைபுரண்டோடும். அந்நிலைதான் இன்று உருவாகிறது. தமிழ் பேசும் மக்கள் கூட்டம் மறுபடியும் இயங்கத் தொடங்கி விட்டது. அவர்களது உணர்ச்சியைப் போராட்டப் பாதையிலே திருப்பவேண்டியது கட்சியின் பொறுப்பு.

கட்சியின் அடுத்த நடவடிக்கை என்ன என்பதை மன்னார் நிர்ணயிக்குமா என்று சிலர் கேட்கின்றனர். அடுத்த நடவடிக்கை என்பதே அர்த்தமற்ற பேச்சு.

ஒரே நடவடிக்கைதான் உண்டு. இழந்த உரிமைகளைப் பெற்று சமஷ்டி அரசியலை நிறுவும் வரை தொடர்ந்து நடைபெறும் போராட்டந்தான் அது. ஆரம்ப நடவடிக்கையும் அதுதான்—அடுத்த நடவடிக்கையும் அதுதான்—இறுதி நடவடிக்கையும் அதுவே.

கட்சி அமைப்பு பற்றி மகாநாடு ஆராயுமென ஒரு செய்தி கூறுகிறது. தமிழரசுக் கட்சி ஒரு ஜீவ இயக்கம். இயக்கத்தை வழி நடத்த கட்சிக்குக் கட்டுப்பாடான அமைப்பு தேவையே.

ஒரு சிலரைக் கொண்ட பலாத்காரக் கட்சியைப் போன்று எமக்குக் கட்டுப்பாடு மக்கள் இயக்கமொன்றுக்கு அவசியமில்லைதான் ஆயினும் அடக்குமுறைத் தாக்குதலுக்குக் கட்சி தாக்குப் பிடிக்க வேண்டாமா? அதற்கு இரும்புக் கோட்டையாகக் கட்சியைக் கட்டியெழுப்ப வேண்டும்.

அத்துடன், கட்சி அமைப்பிலும், கட்சியினுள்ளும் சனநாயகம் தழைத்தோங்க வேண்டும். கட்சி சனநாயகம் மக்களிடையே சனநாயகப் பண்பைவளர்க்கப் பெரிதும் உதவும்.

கட்சிக் கட்டுப்பாட்டை மீறுபவர்கள் மீது சனநாயக முறையில் விசாரணை நடத்தப்பட வேண்டும். விதிகளுக்கேற்ப ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும் அவசியமாயின் இதற்கென நிரந்தர ஒழுங்குக் குழுவொன்று கட்சியினுள் செயல்படலாம்.

வலை பின்னப்பட்டதைப் போல கட்சி அமைப்பு நாடு முழுவதும் பரவி நிற்கவேண்டும். கிராமங்கள் தோறும், நகரங்கள் தோறும், மலைநாட்டில் தோட்டங்கள் தோறும் கட்சிக் கமிட்டிகள் இயங்க வேண்டும். கட்சியின் ஸ்தாபன அமைப்பே சனநாயகத்தை அடிப்படையாகக் கொண்டிருத்தல் அவசியமாகும்.

கிராம, நகர, தோட்டக் கமிட்டிகளால் ஒரு குறைந்த வருடச் சந்தாவின் அடிப்படையிலே உறுப்பினர்களை லட்சக் கணக்காகச் சேர்க்க முடியும்.

வட, கிழக்கு மாகாணத் தமிழ் பேசும் மக்களுக்கும் மலைநாட்டு தமிழ் மக்களுக்குமிடையே சகோதரப் பிணைப்பு வலுவடைகிறது. அவர்களைப் பிளவுபடுத்த பிற்போக்குச் சக்திகள் பெரு முயற்சி செய்கின்றன. இரு கூறாக்கி விட்டால் உரிமைகளைப் பறித்தல் சுலபமல்லவா? அந்த முயற்சியை முறியடிக்கவேண்டும். இரு பகுதி மக்களையும் ஒன்றாக இணைக்கவேண்டும். அதற்கு அசைக்க முடியாத ஓர் 'எஃகுப் பாலத்தை' அமைக்க வேண்டும். அந்தப் பொறுப்பு மகாநாட்டைச் சார்ந்ததாகும்.

மலைநாட்டுத் தமிழ் மக்களுக்கு இன்று குடியுரிமையுமில்லை, வாக்குரிமையுமில்லை. இழந்த உரிமைகளை மீண்டும் பெற மகாநாடு வழி காட்டுமா என்று மன்னாரை நோக்குகின்றனர் மலைநாட்டுத் தமிழர்கள்.

எவ்வகையில் பார்த்தாலும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது மன்னார் மகாநாடு. மகாநாடு மகத்தான முடிவுகளைச் செய்யும், அவற்றைச் செயல்படுத்தலாம் என்று ஆர்வத்துடன் காத்திருக்கின்றனர் தமிழ் பேசும் மக்கள்.

மன்னார் மாநாட்டுக்கு

# யாழ்ப்பாணமிருந்து புறப்படும் மாபெரும் சைக்கிள் ஊர்வலம்

மன்னாரில் நடைபெறவிருக்கும் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் ஏழாவது தேசிய மகாநாட்டுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படவிருக்கும் சைக்கிள் ஊர்வலத்துக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் யாவும் செய்யப்பட்டுவிட்டன என்றும் விபரத்தை, சைக்கிள் ஊர்வல செயற்குழுவினர் அறிவித்துள்ளனர்.

ஊர்காவற்றுறை, வட்டுக்கோட்டை, காங்கேசந்துறை, உடுப்பிட்டி, உடுவில், நல்லூர், கோப்பாய், பருத்தித்துறை, சாவகச்சேரி, கிளிநொச்சி, வவுனியா ஆகிய தொகுதிகளிலிருந்து சைக்கிள் ஊர்வலங்கள் மன்னார் மகாநாட்டிற்குச் செல்லவிருக்கின்றன.

சித்தங்கேணிச் சந்தியிலிருந்தும், காங்கேசன்துறை பட்டின எல்லைக்குள் இருந்தும், அச்சுவேலி ஆவரங்கால் பகுதிகளில் இருந்தும் 29-8-62 பிற்பகல் 2-30 க்கு ஒரு ஊர்வலமும்; சுன்னாகத்திலிருந்து மணி 2.45 க்கும், குழப்பிட்டிச் சந்தியிலிருந்து மணி 3.00 க்கும் வேறு ஊர்வலங்களும் புறப்பட்டு யாழ்ப்பாணம் கட்சிக் காரியாலயம் 25-ீர் 2-ம் குறுக்குத்தெருவிற்கு மணி 3.45 க்கு முன் வந்தடையும். குறிப்பிடப்படாத இடங்களில் இருந்து வரும் ஊர்வலங்களோ அல்லது தனித் தொண்டர்களோ கட்சிக் காரியாலயத்திற்கு 3.45 க்கு முன் வந்து சேர வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

யாழ்ப்பாணக் கட்சிக் காரியாலயத்தில் இருந்து ஊர்வலம் 29-8-62 புதன்கிழமை மாலை 4.00 மணிக்குப் புறப்பட்டு கண்டி வீதி, கச்சேரி-நல்லூர் வீதி, பருத்தித்துறை வீதி, கோப்பாய் சந்தி மார்க்கமாக சாவகச்சேரியை அடையும். தொண்டர்களை சாவகச்சேரியில் வைத்து, பாராளுமன்ற உறுப்பினர் திரு வ. ந. நவரத்தினம் அவர்கள் வரவேற்பார். அன்று இரவு தொண்டர்கள் சாவகச்சேரியில் தங்குவார்கள். பருத்தித்துறை, உடுப்பிட்டி முதலிய தொகுதிகளின் தொண்டர்கள் கொடிகாமம் மார்க்கமாக சாவகச்சேரியை 29-8-62 மாலை வந்தடைவர்.

30-8-62 வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு திரு வ. ந. நவரத்தினம் பா. உ. ஊர்வலத்தை தொடக்கி வைப்பார். ஊர்வலம் கேரதீவு, சங்குப்பிட்டி மார்க்கமாக பூநகரியை முற்பகல் வந்தடையும். 30-8-62 வியாழக்கிழமை கிளிநொச்சி, பரந்தன் முதலிய இடங்களில் இருந்து வரும் தொண்டர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வரும் தொண்டர்களை சங்குப்பிட்டி அல்லது பூநகரியில் சந்திப்பர், பூநகரியில் அன்று சாயங்காலம் 3.00 மணிக்கு ஊர்வலத்தை கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு கு. சிவசுந்தரம் அவர்கள் ஆரம்பித்து வைப்பார், ஊர்வலம் பல்லவராயன் கட்டு மார்க்கமாய் முழங்காவில் வந்தடையும். அன்று இரவு தொண்டர்கள் முழங்காவிலில் தங்குவார்கள்.

31-8-62 வெள்ளிக்கிழமை காலை முழங்காவிலிருந்து ஊர்வலம் புறப்பட்டு திருக்கேதீச்சரத்தை வந்தடையும். அன்று மாலை ஊர்வலம் திருக்கேதீச்சரத்திலிருந்து புறப்பட்டு 5-மணியளவில் தள்ளாடிச் சந்தியை வந்தடையும்.

வவுனியாத் தொகுதியிலிருந்து நகரசபைத் தலைவர் திரு சு. சுப்பிரமணியம், அவர்கள் தலைமையில் ஊர்வலம் புறப்பட்டு தள்ளாடிச் சந்தியை 31-8-62 மாலை 5-மணியளவில் வந்தடையும்.

இரு ஊர்வலங்களையும் தமிழரசுக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினரும், நிர்வாக உறுப்பினருமான ... தன்னாயுச் சந்தியில் வரவேற்று, மன்னார் பட்டினத்தினூடாக அழைத்துச் சென்று பின் மகாநாட்டு மண்டபத்தை வந்தடையும். அங்கு ஊர்வலத்தை மன்னார் பாராளுமன்ற உறுப்பினர் திரு வீ. அழகக்கோன் அவர்கள் வரவேற்பார்.

சைக்கிள் ஊர்வலத்தில் பங்குபற்ற விரும்பும் தொண்டர்கள் உடனடியாக யாழ்ப்பாணம் 2-ம் குறுக்குத் தெரு 25-ம் இலக்கத்திலுள்ள கட்சிக் காரியாலயத்தில், தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

### கொழும்பிலிருந்து செல்லுவோருக்கு

மன்னார் மாநாட்டுக்கு கொழும்பிலிருந்து செல்லும் பார்வையாளர்களும், உறுப்பினர்களும் பிரயாண வசதிகளையிட்டு ஒழுங்கு செய்ய, கும்பெனித் தெருவிலுள்ள, ஜெனரல் லேக் ரோடு, 61-ம் இலக்கத்திலுள்ள திரு ஜே. எஸ். சுந்தரம் அவர்களுடன் தொடர்பு கொள்ளும்படி கோரப்படுகின்றனர்.

# சுதந்திரக் கட்சிப் பொதுக் கூட்டத்தில் 300 பேர்

## ஆளும் கட்சியின் செல்வாக்கு மங்கி மறையும் பரிதாபம்

ஆளும் கட்சியின் செல்வாக்கு படுமோசமாகக் குறைந்துவிட்டது வரவு செலவுத் திட்டத்தை ஆதரிப்பதற்காக கட்சி ஸ்தாபனங்களின் சார்பிலே கடந்த வியாழக்கிழமை மாலை கொழும்பு காலி முகத் திடலில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சுமார் 300 பேர்களே கலந்துகொண்டனர். அவர்களிலும் பாதிப்பேர் கடற்கரையிலே மாலைவேளையில் உலாவ வந்தவர்களாவர். வெட்கக்கேடான விஷயம்.

இக்கூட்டத்திற்காகப் பெரிய சுவரொட்டிகளும் பிரசுரங்களும் அச்சிட ரூ.3000/- வரை செலவு செய்யப்பட்டதாம். அப்படியானால் 10 ரூபாய்க்கு ஒருவர் வீதம் கூட்டத்துக்கு வந்தனர் போலும்!

நிதிமந்திரி உட்பட எம்.பிகள் சிலரும் கூட்டத்தில் பேசப் போவதாகப் பிரசாரம் செய்யப்பட்டது. அப்படியிருந்தும் சுமார் 300 பேர்தான் கூட்டத்தில் கலந்து கொண்டனரென்றால் மந்திரிகளின் செல்வாக்கும் அவர்களது கட்சியின் செல்வாக்கும் மங்கி மறைந்து வருகிறதென்பதற்கு வேறு என்ன சான்று வேண்டும்?

அன்று காலையில் நடைபெற்ற ஜனப்பிரதிநிதிகள் சபையில் இப்பொதுக் கூட்டம்பற்றிக் குறிப்பிட்ட பட்டிருப்பு எம். பி. திரு. எஸ். எம். இராசமாணிக்கம் இக்கூட்டத்தின் மறைவிலே அடக்கு முறையைக் கட்டவிழ்த்துவிட அரசாங்கம் திட்டமிட்டிருந்ததாகக் குற்றஞ்சாட்டினார்.

## 'நேர்மை....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

றது. நீதி நியாயமுடன் நாட்டை ஆள முடியாமலிருக்கிறது. கல்வி மந்திரி ஜனுப். பதியுதீன் மஹ்மூதைப் போன்ற இஸ்லாமியர்களிடம் கேட்டால், "நபிகள் நாயகம் கூறிய சோஷலிசப் பாதையிலே தான் செல்லுகிறோம்" என்று கூறுவார்கள். அவர்கள் சென்ற வழியிலே தான் நாங்களும் போகிறோம் என்று கூறும் இவர்கள் வெட்கப்பட வேண்டும். பங்கிட்டரிசியில் அரைக் கொத்து வெட்டுவதுதானா சமதர்மம்? அரைக் கொத்தரிசியைத் தானம் செய்து தியாகம் செய்யுங்கள் என்று வேண்டுகோள் விடுக்கும் பிரதமர் வேதனைப்பட வேண்டும்" என்று கூறினார்.

மக்குளுத்துப் பள்ளி வாசலின் கதீப் ஜனுப் பக்கிரான் லெவ்வை அவர்களின் தலைமையில் இவ் விழா நடைபெற்றது. இக் கூட்டத்தில் ஜனுப்களான மௌலவி எஸ். சாகுல் கமீது, மௌலவி ஏ. ஆர். எம். தமீம், அல்ஹாஜ் முகம்மது அனிபா ஆலிம் ஹாஜியார் ஆகியோர் உரையாற்றினர்.

மாநாட்டு மலர் : மூவர்ண முகப்பு | ஆராய்ச்சி அரசியல் கட்டுரைகள் — பரிசுக் கதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய சமஷ்டியில் நாகர்களுக்கு சுயாட்சி

## சனத்தொகை 4 லட்சமே வருமானமோ ரூ. 30 லட்சம்

## இலங்கைக்கு ஒரு படிப்பினை

நாகர் என்னும் தனியொரு தேசிய இனம் வாழும் "நாகர் நாடு" இந்தியாவின் கிழக்கு எல்லையிலுள்ள அஸ்ஸாம் மாகாணத்தின் ஒரு பகுதியாக இருந்து வந்தது. "நாகர் மக்கள் சபை" என்னும் ஸ்தாபனத்தின் தலைமையின்கீழ் தனியரசு கோரி அவர்கள் நீண்டகாலப் போராட்டம் நடத்தியதின் விளைவாக இப்பொழுது சுயாட்சி பெறுகின்றனர். நாக நாடு இந்திய சமஷ்டியில் ஓர் உறுப்பாக விளங்கும். அந்த நாட்டின் ஜனத்தொகை எவ்வளவு தெரியுமா? 3,80,000 பேர்மட்டுமே. வருடாந்த வருமானம் 30 லட்சம் ரூபா. ஆயினும் அவர்களுக்குச் சுயாட்சி வழங்கப்பட்டுள்ளது. காரணம் அவர்கள் ஒரு தனி இனம்—அந்த இனத்திற்குரிய தனிப் பிரதேசமும் உண்டு.

இலங்கையில் தமிழ் பேசும் மக்களோ ஒரு சில லட்சம் பேர். அவர்களுக்குரிய பிரதேசம் இரண்டே இரண்டு மாகாணங்கள். இங்குள்ள பிரதேசத்தில் ஒரு சுயாட்சியை நிறுவ முடியுமா என்று சிலர் கேட்கின்றனர். அவர்களுக்கு நாகர் நாடு தக்க பதிலளிக்கிறது.

இந்தப் பின்னணியில் நாகர் நாட்டினுள்ளே துவன்சாங் என்னும் ஒரு தனிப் பிராந்தியம் அதற்கென தனிப் பிராந்திய சபையும் நிறுவப்பட்டுள்ளது.

நாகர்களுக்கான ஒரு தனி நாட்டை அமைக்கும் மசோதாவையும், அதற்கான அரசியல் சட்ட திருத்த மசோதாவையும் லோக் சபையில் இந்தியப் பிரதமர் நேரு அண்மையில் சமர்ப்பித்தார்.

இவ்வளவு காலமும் அஸ்ஸாமின் ஒரு பகுதியாக விளங்கி வந்த நாகர் மலைகளும், துவென்சாங் என்னும் இனம் வாழும் இடமும், இனிமேல் இந்திய யூனியனின் பதினாறாவது சுயாட்சி நாடாக விளங்கும்.

புதிய நாகர் நாட்டில், அறுபது அங்கத்தவரைக் கொண்ட சட்ட சபை இருக்கும். அத்துடன், மற்றப் பிரதேசங்களிற் போல, இங்கும் ஓர் மந்திரி சபை இயங்கும்.

நாகர் நாட்டுக்குப் பிறிதாக ஒரு கவர்னர் நியமிக்கப்பட்டாலும், அஸ்ஸாம் உயர் நீதிமன்றம் இரு நாடுகளுக்கும் பொதுவாக விளங்கும். 'அஸ்ஸாமினதும் நாகர் நாட்டினதும் உயர் நீதிமன்றம்' என்று அது அழைக்கப்படும்.

இந்த அரசியல் சட்ட மாற்றங்கள் கடந்த ஜூலை 1960ல் இந்திய அரசாங்கத்துக்கும், நாகர் மக்கள் இயக்கத் தலைவர்களுக்கும் மிடையே ஏற்பட்ட உடன்பாட்டின்படியே அமைந்துள்ளன.

நாகர் நாட்டின் ஒரு பகுதியாக விளங்கும், துவென்சாங் இனம் வாழும் இடமும் ஓரளவுக்குச் சுயாட்சி பெறுகின்றது. துவென்சாங்குக்குப் பிரத்தியேக பிரதேச சபை ஒன்று இருக்கும். அந்தப் பிரதேச சபையின் அங்கீகாரமின்றி, நாகர் நாட்டில் நிறைவேற்றப்படும் எந்தச் சட்டமும், துவென்சாங்கைப் பொறுத்தவரை செல்லுபடியாகாது.

நாகர் நாட்டை அமைக்கும் மசோதா, அஸ்ஸாம் சட்ட சபைக்கு, அதன் கருத்துக்களை அறியுமுகமாக அனுப்பி வைக்கப்பட்டது. அஸ்ஸாமிலிருந்து நாகர் நாடு பிரிவதைப் பற்றியும், அஸ்ஸாமின் பருப்பம் குறைவது பற்றியும் அஸ்ஸாம் சட்டசபை அங்கத்தவர் வருத்தம் தெரிவித்தனர். அதே நேரத்தில், அஸ்ஸாமின் முதன் மந்திரி, நாகரின் கடுமையான விடுதலை யுணர்ச்சியின் முன், இந்திய அரசாங்கம் வேறொன்றும் செய்திருக்க முடியாதென்று ஏற்றுக் கொண்டார்.

நாகர் நாட்டின் சனத்தொகை3,80,000 மட்டுமே.

நாகருடைய சுதந்திர உணர்ச்சியையும், அபிலாஷைகளையும் பூர்த்தி செய்யவே அவர்களுக்கு இந்தப் புதிய நாடு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

நாகர் நாடு அமைக்கப்படும் பகுதியான நாகமலை—துவென்சாங் பகுதியிலிருந்து கிடைக்கப் பெறும் வருவாய் ஆக 30 இலட்சம்ரூபாயாகும்.

### பிழை திருத்தம்

கடந்த வாரம் (19-8-62) வெளியாகிய சுதந்திரன் 7-ம் பக்கத்தில் "அறிவழகன்" கடிதக் கட்டுரையில் "ஊருக்கு ஒரு நியாயம் உங்களுக்கு..." என்ற உபதலைப்புடன் வந்த பந்தியின் முதற் பாகத்தில் "தோழர்கள் தமிழுரிமைகளுக்காக"... என்றிருப்பதை "தோழர்கள் தமதுரிமைக்காக"... என்று திருத்தி வாசிக்கும்படி கோருகிறோம்.



சென்னை புதிய கல்லூரி அதிபர், வணக்கத்துக்குரிய மௌலானா செய்யது அப்துல் வஹாப் புஹாரி அவர்களும், அதே கல்லூரியின் பொதுக் காரியதரிசி ஜனாப் எம். எஸ். அப்துல் மஜீத் அவர்களும், தங்கள் இலங்கைச் சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு புகையிரத மார்க்கமாக இந்தியா செல்லுகையில் கோட்டைப் புகையிரத நிலையத்தில் வைத்து எடுக்கப்பட்ட படம். கொழும்பு மௌலானா ஸ்தாபனத்தைச் சேர்ந்தவரும் இலங்கை இந்திய வர்த்தக சங்கத் தலைவருமான ஜனாப் எஸ். எம். செய்யது முகம்மது அவர்களும் காணப்படுகிறார்.

## இ. தி. மு. க. வுக்கு புதிய பெயர் தமிழர் கட்சியாம்

### சிங்களப் பத்திரிகை தகவல்

தடை செய்யப்பட்ட இலங்கைதிராவிடமுன்னேற்றக் கழகம் மற்றொரு பெயரில் இயங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறதென்று "தவஸ" என்னும் சிங்களப் பத்திரிகை ஒரு செய்தியை பிரசுரித்துள்ளது.


அச்செய்தி கூறுவதாவது:- தடை செய்யப்பட்ட தி. மு. கவுக்கு மற்றொரு உருவம் கொடுத்து மீண்டும் செயல்படுத்துவதற்காக அதன் தலைவர்கள் புஸ்ஸல்லாவத் தோட்டத்தில் நடத்திய ஓர் இரகசியக் கூட்டம் பற்றி தகவல்கள் கிடைத்துள்ளன.

சட்டப்படி இலங்கை தி.மு.க. தடைசெய்யப்பட்டிருப்பதால் மற்றொரு உருவத்தில் புதிய ஸ்தாபனமொன்றை அமைப்பதற்கான ஆரம்பப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளனவாம்.

இந்த ஆரம்பப் பேச்சுவார்த்தைகளில் தமிழரசுக் கட்சியும் சில தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்களென அறியப்படுகிறது.

கட்சிப் பெயரை "தமிழர் கட்சி" என்று மாற்றுவதென இக்கூட்டத்தில் தீர்மானித்துள்ளனர்.

தி.மு.க.வின் விதிகள், திட்டங்களுக்கிணங்கவே இப்புதிய ஸ்தாபனத்தையும் நடத்துவதென முடிவு செய்தார்களென அறியப்படுகிறது.

சி. சி. சி. புகையிலை பசளைக் கலவைகள்



கொழும்பு கொமர்ஷியல் கொம்பனி லிமிட்டெட்,
பசளைப்பகுதி.
[illegible] ஹவுஸ், யூனியன் பிளேஸ், கொழும்பு 2. போன்: 7935.


# அட்டோர்னி ஜெனரலுக்கு எதிராக வழக்கு

## சம்பள உயர்வு பெருததனல் அரசாங்க ஊழியர் தொடருகிறார்

சிங்களத்தில் தேர்ச்சி பெறாதவர்களுக்கு பதவியுயர்வோ, அல்லது சம்பள உயர்வோ கொடுக்கப்படமாட்டாது என்று அரசாங்கம் அறிவித்ததும், அதன்படி நடவடிக்கைகள் எடுத்தும் வருவதை ஆட்சேபிக்கும் முகமாக ஒரு அரசாங்க ஊழியர் அட்டோர்னி ஜெனரலுக்கு எதிராக ஒரு வழக்கைத் தொடங்க விரும்புவதாக அறிகிறோம்.

சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்படுவதற்கு முன்னர் அரசாங்க சேவையில் அமர்த்தப்பட்ட ஊழியர்கள், சிங்களத்தில் தேர்ச்சி பெறாத காரணத்துக்காக அவர்களுடைய சம்பள உயர்வுகளையும், உத்தியோக உயர்வுகளையும் இழந்து வருகின்றனர். இந்தச் செயல் சட்ட விரோதமானது என்பதை எடுத்துக்காட்ட சங்கரிதியாக அரசாங்க எழுது வினைஞர் சங்கம் போராடி வருவது தெரிந்ததே.

1952-ல் சேவைக் கமர்த்தப்பட்ட ஒரு அரசாங்க ஊழியர் சிங்கள மொழியில் தேர்ச்சிபெறாததனுல் 1-4-62 முதல் அவருக்கு அளிக்கப்பட வேண்டிய சம்பள உயர்வு மறுக்கப்பட்டுள்ளது. தமிழ் மொழியைத் தாய் மொழியாகக்கொண்ட அரசாங்க ஊழியர்கள் சிங்களத்தில் தேர்ச்சி பெற வேண்டுமென்று இன்று நிர்ப்பந்திக்கப்படுவது சட்ட விரோதமாகும் என்பதை எடுத்துக் காட்டி அவ்வூழியர் அட்டோர்னி ஜெனரலுக்கு எதிராக வழக்கைத் தாக்கல் செய்யப் போகிறாராம்.

## அரசாங்கத்தின்மீது எழுதுவினைஞர் வழக்கு

### அட்டோர்னி ஜெனரலுக்கு சம்மன்ஸ்

சம்பள உயர்வைத் தடை செய்யும் திறைசேரிச் சுற்றுநிருபம் சட்டப்படி செல்லுபடியாகாதெனவும், சிங்களம் மட்டும் சட்டம் பாரபட்சமானது என்றும் தீர்ப்பளிக்க வேண்டுமெனக் கோரி அரசாங்க எழுதுவினைஞர் சங்கமும் ஏற்கனவே ஒரு வழக்கைத் தாக்கல் செய்தது தெரிந்ததே.

31-8-62 அன்று கோர்ட்டுக்கு வருமாறு அட்டோர்னி ஜெனரலுக்கு சமன்ஸ் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்த் தெரிய வருகிறது.


கருத்துக் விதைகள் | கேலிச் சித்திரங்கள் | 36 பக்கங்கள் | விலை சதம் 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசி

கோட்டைப் புகையிரத நிலையத்திலுள்ள நடைபாதை. அது வாழ்க்கையின் பல் இன்ப துன்பங்களையும், மனக் குமுறல்கள், வேதனைகளையும் தாங்கி நிற்பதாகும்.

அங்கு. பசியால் வாடும் மகன். அவன் கேட்கும் கேள்விகள். அன்பும், சினமும் கலக்க மறுமொழி கூறும் அவனுடைய ஏழைத்தாய்.

நடமாடும் இவ்விரண்டு மனிதப் பிறவிகளையும் நீங்கள் நடைபாதையில் சந்திக்கிறீர்கள்.

சுவையான சந்திப்பு.

மணிவாணன்

"ஆ......ஆ......ஓ...வ்...." கொட்டாவி. நித்திரை வராது எழும்பி இருந்து எதையோ கைகளால் தடவித் தேடியது அந்த உருவம். தேடிய பொருள் கிடைத்து விட்டதோ, என்னவோ; திரும்பவும் படுத்துக் கொண்டது.

"லொக்....லொக்....லொக்..." இது இன்னொரு மனித உரு. இருமல் அடிக்கடி அந்த மனித உருவத்தைத் துன்புறுத்திக்கொண்டிருந்தது.

"குக்...குக்...குக்,...க்,...கூ,... புகை வண்டிகளின் ஓசை. அவைகளின் ஓங்கார இரைச்சலைத் தாங்கிக்கொண்டு கம்பீரமாகக் காட்சியளித்தது கோட்டைப் புகையிரத நிலையம். யாத்திரையும்—இரைச்சலையும், சிரிப்பையும்—அழுகையையும் தாங்கித் தாங்கி அதற்குப் பழக்கமாய் விட்டது.

புகை வண்டிகளின் இரைச்சலோ அல்லது வீதியில் ஓடும் மோட்டார்களின் சத்தமோ, அந்த நடைபாதை வாசிகளை — நடைபாதைச் சமுதாயத்தை, அவர்களின் மோன நிலையை—இன்பத்தின் புரிப்பைக் கலைக்கவில்லை, கலைக்கவும் முடியாது. கலைப்பது எதுவோ அதுதான் அவர்களது இன்பம். அதுதான் அவர்களது வாழ்க்கை.

இரவு வேளைகளில், அந்த நடைபாதை மாளிகையின் சொந்தக்காரர்கள் அவர்கள்தான். அவரவருக்கு என்று, கண்ணேட்டக் குறிப்பில் இடங்களும், அவர்களாவே பிரிக்கப்பட்டுள்ளன. சிலவேளைகளில், அதனை மீறும்போது அல்லது புதிய ஒருவர் அவர்களுடன் வந்து சேரும்போது அவர்களிடையே சச்சரவுகள் ஏற்படுவதும் வழக்கம்.

மணி பன்னிரண்டுக்கு மேலிருக்கலாம். இருமிய மனித உருவம் இன்னும் இருமிக்கொண்டேயிருந்தது. பாவம்!...சிலர் நித்திரை குழம்பி அந்த உருவத்தைத் திட்டத் தொடங்கினர்.

சிறிது நேரத்தில் அந்த உருவமும் எப்படியோ உறங்கிவிட்டது.

"அம்மா!........."

"ம்........"

"பசிக்குதம்மா..."

"ம்..."

"அம்மா..."

"ஏண்டா ஆய்க்கினை செய்கிறாய், பேசாமக்கிடவுடா..."

"பசி வயித்தைப் பிருண்டுதம்மா..."

"இப்ப என்ன செய்கிறது; விடிஞ்சாப்போலை பாக்கலாம் கிடந்து நித்திரையைக் கொள்."

"பசி பொறுக்க முடியேல்லே'ம்மா" அவன் அழத் தொடங்கினான். பிச்சைக்காரியானாலும் அவள் தாய் அல்லவா? தான் பெற்ற செல்வம் அழுவதைப் பொறுக்க முடியுமா அவளால்? அவன் எழுந்திருந்தான். தாய் எழுந்தது அவனது உள்ளத்தில் சிறிது நம்பிக்கையை ஊட்டியது. பசியின் காற்பங்கு தீர்ந்த மாதிரித் தான்.

அவள் அவனைத் தன் மடியில் கிடத்தித் தடவிக் கொடுத்தாள்.

"அம்மா இப்ப ஏதும் வேண்டித் தாறியா'ம்மா?"

"இப்ப ஏதும் வேண்டிற துக்குக் காசில்லே; நாளைக்கு என்ரை செல்லத்துக்கு நிறைய வேண்டித்தாறன். இன்டைக்குப் பேசாமக் கிட".

"ஏன்'மா காசில்லே?"

"கடவுள் தரல்லே"

"ஏன்'மா கடவுள் தரல்லே"

"அவர் எங்களைச் சோதிக்கிறாரடா கண்ணு"... அவள் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள்.

"ஏன்'மா சோதிக்கிறார்?"

"நாங்க செய்த பாவத்துக்காக"

"எப்ப'ம்மா பாவம் செய்தனுங்கள்?"

"முந்தி...முந்தின பிறப்பிலே..."

"என்ன பாவம்'மா செய்தனுங்கள்?"

"அதெல்லாம் உனக்கெண்டும் இப்ப விளங்காது பேசாமக்கிட"...அவள் சிறிது அதட்டினாள். தாயின் அதட்டலில் அடங்கிப்போய் சிறிது நேரம் பேசாமலிருந்தான் அவன். ஆனாலும் அவன் உள்ளம் அமைதி பெறவில்லை. ஏதோ புரியாத கண்ணுக்குத் தெரியாத ஒன்று அவனை உறுத்திக் கொண்டிருந்தது.

"அம்மா!..." அவனது குரலில் நடுக்கம் தென்பட்டது.

"..........."அவள் உள்ளத்தில் ஏதோ இனம் புரியாத உணர்வலைகளின் எழுச்சி.

"அம்மா!......"

"என்ன கண்ணு..."அவள் தன் செல்வத்தை அணைத்துக்கொண்டாள்.

"கடவுள் எங்கே'ம்மா இருக்கிறார்?"

"அவர் எங்குமிருப்பாராடா கண்ணு"

"அதெப்படியம்மா எங்கையும் இருக்கிறது. அவருக்கெண்டு ஒரு இடமுமில்லையா?"

உனக்கேன் அதெல்லாம்?"

"இடம் தெரிஞ்சால் நான் போய்க் கடவுளைக் கேட்கப் போறன்".

"என்ன?"

"நான் எவ்வளவோ குற்றம் செய்யிறனான். நான் செய்யிற குற்றத்துக்கு என்ரை அம்மா சில வேளைகளில் அடிப்பா. ஆனால், அவ ஒரு நாளும் என்னை வெறுக்க மாட்டா. நீ யேன் எங்களைச் சோதிக்கிறாய், நாங்கள் என்ன குற்றம் செய்தம். எங்களுக்கு ஏன் நீ சாப்பாடுதரல்லே..."

"டேய்;...நீ பேசாமக் கிடக்கமாட்டாய் வாய் முதிர்த்துட்டு"

தாயின் அதட்டலில் பயந்துபோய்ப் பேசாது படுத்தான். அவன் தேகம் நடுங்கியது. அது தாயின் அதட்டலின் எதிரொலியோ என்னவோ? உருண்டு உருண்டு படுத்தான். அவனுக்கு நித்திரை வரவில்லை. "கடவுள்...பசி..." இதுதான் அவனது நினைவு. அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஏதோ மர்மத் திரைக்குள் அகப்பட்டு விழிப்பது போன்ற உணர்வு.

எப்படியோ விடிந்து விட்டது. எல்லோரும் எழுந்து தத்தம் படுக்கைகளைச் சுருட்டி இடத்தைக் காலி பண்ணத் தொடங்கினர்.

அந்தத் தாயும் எழும்பித் தன் மகனைத் தட்டினாள். அவளது கைகள் நடுங்கின. அவனது தேகம் நெருப்பாய்க் கொதித்தது.

அவள் அழுதாள். வேறு என்ன செய்வதென்றே அவளுக்குத் தெரியாது.

அவன் எழுந்திருக்க முயன்றான். முடியவில்லை.

"அம்மா!..."

"என்ன கண்ணு?"

"கடவுளுக்கு என் மேல் கோபமாம்மா?..."

"ஏன் கண்ணு?..."

"எனக்கு ராத்திரிக்கிடையில் காய்ச்சலைத் தந்துட்டாரே'ம்மா..."

"இல்லே'டா கண்ணு அவர் எங்களை வஞ்சித்து விட்டார்..."

"ஏம்'மா"

அவளுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. கண்ணீர் வடித்தாள்.

"ஏம்'மா அழுகிறாய்; நான் செத்துப் போடுவன்னெண்டா'ம்மா?..."

"இல்லேடா கண்ணு; அப்படிச் சொல்லக் கூடாது. நீ சாகமாட்டாய்."

"ஏன்'மா இதுக்கும். கடவுள் கோபிப்பாரா'ம்மா...?"

அவன் சிரித்தான். ...ணை வாய்விட்டுச் சிரித்தான். அவள் அழுதாள். அவள் அழுது கொண்டே இருந்

தான். அவனுடைய சிரிப்பு ஓய்ந்தது; பேச்சு ஓய்ந்தது. ஏன் அவனே ஓய்ந்துவிட்டான்.

அவளுடைய அழுகை மட்டும் இன்னும் ஓயவில்லை. எப்பதான் ஓயுமோ?



# மூலதனம்

அன்னம்மாவின் கணவன், பதி, பத்தா எல்லாம்அவளின் மாடு ஒன்று தான்.

அவளின் வாழ்க்கைச் சக்கரமே அதிலிருந்துதான் சுழலுகின்றது.

அந்த விலைமதிப்பில்லா மூலதனத்துக்கு ஒன்று நேர்ந்துவிட்டால், அன்னம்மாவின் கதி.. ...?

சொல்ல வேண்டுமா?

துரை. சுப்பிரமணியன்

பெண்ணெயின் 'உறவை' அன்னம்மாவின் தலை முற்றாக மறந்து விட்டதைப் போன்று, செம்மை நிறம் கொண்டு, காற்றோடு சேர்ந்து பறந்து கொண்டிருக்க, சேலைத் தலைப்பை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு, செல்லாச்சி வீட்டை நோக்கி, நடந்து கொண்டிருக்கின்றாள்.

செல்லாச்சி, குத்தகைக்கு வளவெடுத்து. அதில் வீடு கட்டி, அதிலிருந்துகொண்டு தேங்காய் வியாபாரம், மட்டை வியாபாரம் செய்கிறாள். அவைகள் அவளது மூலதனமிடாத வருவாய்கள். வீட்டு வாடகையைக் கொடுத்துவிட்டால் மிஞ்சுவது அவளுக்கு வருமானம்.

"சே...லப்புடவை" வாக்கியம் நீண்டெழுந்து இறுதியில் சேலைப் புடவைக்காரனின் தொண்டைக்குள் நெரிபடுகின்றது.

"சீலப்புடவை... சீலப்புடவோய்... இஞ்சை வா இஞ்சை வா... கூப்பிட கூப்பிட ஓடுறாய்" சேலைப் புடவைக் காரனைக் கூப்பிடுகின்றாள், செல்லாச்சி.

"என்ன கிடக்கு"

"கட்டா வொயில். யோச்சட், கிரும்பிப்பார்..."

"சரி...சரி பப்ளின் கிடக்கே?"

"ஓ..."

"எங்கே விரி பாப்பம்"

சேலைப்புடவைக்காரன் அவிழ்ப்பதில் முனைகிறான்.

"அன்னம்மா! என்ன வந்து பேசாமை நிக்கிறாய்"

"சும்மா வந்தனான்"

"கையிலை போயிலை கிடந்தாத் தாவன் ஒரு துண்டு"

அன்னம்மா புகையிலை ஒரு துண்டைக் கொடுக்கின்றாள்.

"எணை செல்லாச்சி யக்கா"

"...ம்..."

"எனக்குமொரு வங்காச் சீலை கடனு வாங்கித்தாணை, நான் பிறகு கொஞ்சம் கொஞ்சமாகத் தாறன்"

"அப்ப யாவாரியார் இவவுக்கும் உந்த வங்காச் சேலையிலை ஒண்டு குடுத்திட்டு என்ரை கணக்கிலை போடும்".

செல்லாச்சியின் வாடிக்கைக்காரன்தான் அவன்.

"அப்ப...மாசம் முடியக் கொஞ்சம் காசைக்கொண்டு வந்து தா. இதுக் கிடையிலை நான் வாங்கித் தந்தநெண்டு ஒருதருக்கும் பறஞ்சு போடாதை...என்ன"!

"ஓமணை அக்கா"



"இப்ப ஆருக்குப் பால் குடுக்கிறாய்?"

"உங்காலை ஓவிசர் விட்டுக்கு"

அன்னம்மா சேலையை மடித்துத் தனது முந்தானைக்குள் கட்டுகிறாள். கட்டிக் கொண்டு நேராக வீட்டிற்குள் செல்லுகிறாள்.

"அன்னம்மா துலையாலையே?"

"சும்மா உதிலை போட்டு வாறன்"

"உன்னட்டை பசுப்பால் கிடக்கெண்டு கேள்விப்பட்டன்"

"ஓமண்ணை"

"அப்ப காலமை பின்னேரம் காக்காப் போத்தல் தாவன்"

"அப்ப நாளைக்குத் துவக்கம் தரட்டே"

"ஓ...அதுக்கென்ன"

அன்னம்மாவின் இதயத்துள் இனிய தென்றலடிக்கின்றது. அன்னம்மாவின் கணவன், பதி, பத்தா எல்லாம் அவளின் மாடு ஒன்று தான். அதிலிருந்து தான் அவளின் வாழ்க்கைச் சக்கரம் சுழலுகின்றது

அன்னம்மா வீட்டை அடைகிறாள்.

"அம்மா உதென்னணை கொண்டாறாய்... எனக்குத் தாம்மா" அன்னம்மாவின் பிள்ளைகளொன்றின் குரல்.

"அம்மா எனக்கும்"—மற்றதின் குரல்.

"ம்...அதுக்கை என்ன சீலம்பாய் கிடக்கு...ம்... பாருங்கோ, அது ஒரு சீலையொண்டு."

(15-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தடுப்புக் காவலில் நாம்' 6.



## அன்பு மகள் அன்பரசிக்கு,

புதுமை லோலன்

தடுப்புக் காவல் நிலையம்,
பனாகொடை,
ஹோமகம.
23—4—1961

என் அருமை மகள்
அன்பரசிக்கு,

இப்போது அந்தியின் அந்திநேரம். அதாவது பகலும் இரவும் யுத்தம் புரியும் பொழுது, இரவு வெற்றி பெற்று விடுவான் போல இருட்டுகின்றது. எனினும் இருட்டுக்குமட்டுமா இவ்வுலகு சாஸ்வதமாகும்? இன்னும் சில மணித்தியாலங்கள் ஓடிவிட்டால் திரும்பவும் பகல் வரவே செய்வான். இக்காட்சியை என் அறையின் யன்னலூடாகப்பார்த்தபடி மடல் வரைய ஆரம்பிக்கின்றேன்.

"பகல் போனால் இருட்டு, இருள் போனால் பகல்" அதே போன்று ஈழத் தமிழ் பேசும் மக்கள் இன்று இருட்டில் இருக்கிறார்கள். சுதந்திரம் என்ற ஒளி ஞாயிறு வரும் வரையும இருளில் இருக்க வேண்டியமைந்துவிட்டது. இருள் தானே என்பதால், வெறி பிடித்த இருடர் கூட்டம், தமிழ் பேசுமினத்தின் மடியிலேயே கைபோட்டு உரிமைகளைப் பிடுங்கி விட்டார்கள். சொந்தச் சகோதரரான மலைநாட்டுத் தமிழரின் உரிமையையும், எங்கள் குடி உரிமையையும் பிடுங்கிய திருடர் கூட்டம்...... எமது விழியிலே கன்னக்கோல் கொண்டு குத்திவிட்டார்கள். அந்த விழிதான் தமிழ் மொழி. உரிமையை இழந்து, தனித்தன்மையில் பங்கமேற்பட்டு, விழியினி ரத்தமோடத் தமிழர் இருளிலே போகும்போது......... இந்த இடருக்குக் காரணர் யார், எனவும் எண்ணத்தானே செய்வர்.

ஒளி காட்டுகின்றேம், வழி தெரிகின்றது என, 'மெழுகுதிரி' போன்ற உருகும் ஒளியுடன் அழைத்தது ஒரு கூட்டம். அக்கூட்டத்தில் தமிழ்ச் சாதி, தமிழ்ச் சாதி என அலறும், வீரதீரசூரர் ஆகிய ஒரு நியாயவாதியிருந்தார், உருட்டும் விழியையும், வரட்டுக் கொள்கையையும் காட்டி மக்களின் உள்ளத்தைப் புரட்டினார். உரிமை ஒளியைக் காண இவர் பின்னால் தமிழர் கூட்டம் சென்றது.

இந்து மதத்தின் பாதுகாவலர் நானே என மத வகுப்புவாதத்தை வளர்த்து, சன்மார்க்கமென்பது குறுகிய மதக் கொள்கையென்பதை மெய்ப்பித்து, தமது கல்லூரி மாணவியரைக் காலத்துக்குக் காலம் மந்திரிகள், பிரதானிகள் முன்பு குலுங்கவிட்டு...... தலைப்பாகைக்குள் தன்னலத்தைச் சுருட்டிவைத்து... ஐக்கியம், ஐக்கியம் எனப் பேசிக்கொண்டு, இதோ வழி, என வேறேர் 'மெழுகுவர்த்தி' ஒளியுடன் புறப்பட்டார் ஒருவர். அவர் பின்னும் ஒரு சில தமிழர் கூட்டம், இருசகனுமா என்ற ஆவலுடன் பின்தொடர்ந்தனர்.

கொள்கையென்ன கொள்கை...சண்டமாருதம் எனப் பாராளுமன்றத்தில் முழங்கும் தனிக்காட்டு ராஜா யானே! என்னிடம் ஒலிவர் அரசியல் கற்றூர். சோல்பரி என்னுடைய மச்சான். டி. எஸ். சேனநாயக்கா, என்னைக் கலந்து யோசித்துவிட்டே கக்கூசுக்குக்கூடப் போவார். யான்தானே அரசாங்கத்தை நடாத்தியவன்......

என்று தன் 'வீரதீர'த்தை மட்டுமே கொள்கையெனவும்; தானே தலைவராயும் செயலாளராயும்; அங்கத்தவராயும் கொண்ட ஒரு புதுக் கட்சிக்கு உருப்படுத்திய பாட்டனுரையும், நம்பிய அப்பாவியா மக்கள், இருளாகவே அவர் பின் தொடர்ந்தனர். அவர் கையிலிருந்ததும் மெழுகுவர்த்தி ஒளியே.

இருள், இருள், இருள். ஒளி கிடைக்குமா என ஏங்கிய தமிழ் பேசுமினம் ... தமிழ்த் தலைவர்கள் எனக் கூறிக்கொண்டவர்களைப் பின் பற்றி எறுநடைபோட்டது. ஒளியை வழிநோக்கப் பார்க்க ஆசைப்பட்டது தமிழ்பேசுமினம். ஆனால்......;

ஐயகோ! சாபக்கேடு! கொடுமை! துரோகம்! காக்கை வன்னியன் திரும்பவும் பிறந்தான்! யூதாஸ்கரியாத் திரும்பவும் பிறந்தான்! எட்டப்பன் திரும்பவும் பிறந்தான்!

அதனாலே, ஒளிதேடி இருளிலே புறப்பட்டுப் போன செந்தமிழர் கூட்டத்தை— இருட்குகையிலே தள்ளி...... பதவி என்ற வலையினுள், படாடோப வாழ்வு வாழ தமிழர் கூட்டம் போயே போய்விட்டது.

இருளிலிருந்த மக்கள் இருட்குகையிலே— அதாவது இன்னும் இருளிலே ...தள்ளிவிட்ட தலைவர்கள்—மந்திரிகளாகவெற்றிப்பவனி வந்தனர்.

உரிமைகளையிழந்து — தன் மதிப்பையே இழக்குமளவு கொடுமையைத் தமிழ்பேசுமினம் அனுபவித்தது. மெழுகுவர்த்தி ஒளி, உருகி உருகி மறைந்துவிடும். இந்தத் தற்காலிக ஒளியை நம்பிக் குப்பிவி தொட்டுப் போன தமிழ் மறவர் கூட்டம், ஏமாற்றம் தந்த பாடத்தில் மனமாற்றம் அடைந்தது.

தன் கையே தனக்குதவி. எங்கள் பலம் ஒன்றானால், தமிழ் பேசுமினம் ஓரே அமைப்பு வடிவுபெற்றால், நேர்மையும் கண்ணியமும் கொண்ட தலைவரின் கீழ் அணி திரண்டால், கொள்கையும் தியாகமும் கொண்ட இயக்கத்தில் அன்புப் போர் செய்தால்........... வெற்றி வெற்றி எனக் குரல் கொடுத்தனர். அந்த வெற்றி, மக்கள் வெற்றியாகும் அதற்கு மக்களின் ஒன்றுபட்ட பலமும் தியாக உணர்வும் தேவை. அந்த சக்தியை ஒன்றுசேர்க்க........ மக்களின் அபிலாசைகளை மதிக்க...... தோற்றியது விடிவெள்ளி. அதோ! அதோ! இது உருகும் மெழுகுவர்த்தி ஒளியல்ல. பகல் என்ற விடுதலை கிட்டும் நேரத்தையறிவிக்கும் விடிவெள்ளி. அந்த விடிவெள்ளியையே 'தமிழரசுத் தந்தை' என அழைத்தனர்.

நம்பிக்கை ஒளி பரவியது. இருட் குகையைவிட்டு ஈழத் தமிழர் புறப்பட்டனர்,படாடோபம் சூழ, சருகைக் கரையுடன் அலங்கார பவனி வந்த உருட்டிப் புரட்டி வாழும் தலைவர் கூட்டத்தின் மெழுகுவர்த்தி ஒளி, விடிவெள்ளி முன் ஒளி இழந்தது கடைசியில் மெழுகுவர்த்தி உருகி உருகி......அவர்கள் சலுகையை எரிக்க முனைந்தது. அதனாலே, தீயினால் ஏற்பட்ட வடுவுடன், அரசியலை விட்டு ஓடினார்கள்; ஓடினார்கள்; ஓடியேவிட்டார்கள் எனினும் ஆசை அறுவதில்லையே! பதவியாசை ஒரு வேசை! எனவே இடைக்கிடை அறிக்கை மட்டும் விடுவதிலும், மதம் காட்டி மக்கள் கூட்டத்தைப் பிரிக்கும் சூழ்ச்சிக்குப் பாய் விரிப்பதிலும், கிராமச் சங்கத் தேர்தலில் மண் கவ்வுவதிலும் தமது ஆசைகளைக் காட்டிவருவதுடன்...... விடிவெள்ளியை மறைக்கப் பகீரதப்பிரயத்தனமும் செய்கின்றார்கள். விடிவெள்ளி தோற்றினால் பின்பு இருள் வரவே வராது. நிச்சயமாகப் பகல் உண்டாகவேசெய்யும்.

அந்தப் பகல் காண விடிவெள்ளியின் ஒளியுடன் புறப்பட்டுவிட்ட கூட்டத்தில், ஒரு சிறு பகுதிதானே, இத் தடுப்புக் காவலிலும் உள்ளனர்.

அதோ! பொழுது [illegible] மேற் கூறியதுபோன்று, — தமிழ் பேசுமினத்தின் நிலையை இருளுடன் ஒட்டிப் பார்க்கும்போது—தோற்றியது.

அதோ மேகத் திரள்கள். பஞ்சுபோல வெண் மேகங்கள் பல உருவங்களைத் தந்து ஓடுகின்றன. அவ்வுருவங்களைப் பார்க்க, உன்போல அசைவது போன்றும், என் தோளிலே—நான் கைதாகும் நாள்— நீ தூங்கியதுபோன்றும் தெரிகின்றதே! உன்னைக் காண்கிறேன் மகளே மேகத்தின் உருவங்களில். அதோ சந்திரன். இந்தச் சந்திரன் தானே நீ இருக்கும் இல்லத்திலும் தோற்றுவான். அச் சந்திரனுக்கு எல்லாம் தெரியுமே! அவனுவது உன் அப்பா, மேன்மாடியிலே இருந்து உன் பாசத்தை எண்ணும் நினைவுகளைக் கொண்டு வந்து சொல்வானு? மனிதரால் முடியாததைக் கால ஓட்டம் செய்யுமாமே......காலமே! ஓடுக.

இன்று தொடக்கம், தடுப்புக் காவலில் உள்ள கத்தோலிக்க நண்பர்களுக்காக குரு ஒருவர் வந்தார். இனி ஒவ்வொரு ஞாயிறும் வருவாராம். கத்தோலிக்க நண்பர்கள், ஒரு மூலையறையைத் தமது தொழுகை இடமாக அமைத்துக் கொண்டுள்ளனர். மன்னார்ப் பிரதிநிதி அழகக்கோன் அவர்கள், 'தமிழ் பேசுமினத்தின் விடுதலைக்காக வேண்டும்' ஆராதனை நெஞ்சை உருக்கியது.

இன்று, கோப்பாய் பிரதிநிதி பாலசுந்தரம் அவர்கள், பரமேஸ்வராக் கல்லூரி முன்னுல் உப அதிபர் தி. இராஜசேகரம் அவர்கள், யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினர் அழகையா அவர்கள், சட்டக் கல்லூரி மாணவன் அன்ரனி அவர்கள் தமிழரசுக் கட்சிச் செயலாளர் வ. நவரத்தினம் அவர்கள், பருத்தித்துறையைச் சேர்ந்த நியாயவாதி நவரத்தினம் அவர்கள், ஆகியவர்கள் கைது செய்யப்பட்டு ஒன்ருக வந்து சேர்ந்தனர். எங்கள் தடுப்புக் காவல் குடும்பம் வளருகின்றது. எங்கள் குடும்பம் இப்போது பெரிது.

யாழ்ப்பாண நிலை எப்படி எனக் கேட்டோம்.

இராணுவக் கொடுமை. மக்கள் கூப்பன் அரிசியைப் பெறக் கூட மனமில்லாது உள்ள நிலை, சீட்டு இல்லாது பஸ் பிரயாணம் என்பவற்றையெல்லாம் கூறினர்.

இரவானதும் இராணுவம் மனிதராக இருப்பதில்லையாம், வெளிச்சம் தெரியும் வீட்டில் புகுந்து தொல்லை கொடுப்பராம். அதுவும் பருவப் பெண்கள் உள்ள தனி வீட்டில் புகுந்து தொல்லை கொடுப்பதில் சமர்த்தராம். ஜீப் வந்து நிற்குமாம், பின்பு வேலி எரியுமாம், அதுவும் சத்தியாக்கிரகத்தில் பங்கு கொண்டவர்களது இல்லங்களையறிந்து, வேண்டுமென்றே துன்புறுத்துகின்றனராம். யாழ்ப்பாணத்தில் நடைபெறும் காட்டாட்சியாகிய இராணுவ ஆட்சியைக் கேட்கக்கேட்க மனம் வெந்தது. மனிதத் தன்மை குறைந்தவர்கள் தான் இராணுவத்தில் சேர்வரோ எனக்கூட ஐயப்பட வேண்டியுள்ளதே!

பொது மக்களைப் பாதுகாக்க இராணுவமா? மக்களையடிக்க, அச்சமுறுத்த இராணுவமா? மற்ற நாடுகளில் எதிர்ப்படைகளுடன் போராடவே இராணுவமிருக்கின்றனர். எங்கள் ஈழ நாட்டில் தமிழரைத் துன்புறுத்தமட்டுமே இராணுவம் உள்ளனர். ஆச்சரியமான ஈழ ஆட்சி!

இம்முறை யாழ்ப்பாணத்தில் மட்டுமே — திட்டமிட்டே இராணுவக் கொடுமை நடைபெற்றுள்

(13-ம் பக்கம் பார்க்க)

## 'தன்மானமுள்ள தமிழன் எவனும் அமைச்சர் பதவி ஏற்கமாட்டான்'

—தம்பலகமத்தில் முகம்மதலி

தமிழ் பேசும் இனம் இன்று வேண்டி நிற்பது மந்திரிப்பதவி அல்ல. ஆட்சியாளர்கள் தமிழர் ஒருவரை அமைச்சர் ஆகக முன்வந்தாலும் எந்தத் தன்மானம் உள்ள தமிழனும் அதை ஏற்க முன் வரமாட்டான். தமிழர் ஒருவர் மந்திரிப் பதவி வகிக்க வாய்ப் பேற்பட்டால் அதை நான் ஆட்சேபிக்க விரும்பவில்லை. இந்தப் பதவி நியமனம் தமிழ் பேசும் இனத்தை எதிர் நோக்கியுள்ள அரசியல் பிரச்சினைகளுக்கு முடிவான பரிகாரமாகாது.

இவ்வாறு மூதூர் முதலாவது எம். பி. ஜனுப் முகமதலி தம்பலகமம் புதுக்குடியிருப்பு பாரதி கிராம முன்னேற்றச் சங்கத்தின் நான்காவது ஆண்டு நிறைவு விழாவுக்குத் தலைமை தாங்கி உரை நிகழ்த்திய போது கூறினர்.

மேலும் அவர் பேசுகையில், ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியிலும் காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்காவின் ஆட்சியிலும் தமிழ் மந்திரிகள் இருக்கவே செய்தனர்—தற்போதைய ஸ்ரீமாவோ அம்மையாரின் ஆட்சியிலும் தமிழ் மந்திரி ஒருவர் இருந்தே வருகிறார். நண்பர் ஜனுப் பதியுதீன் மாமூத் அவர்களைத்தான் நான் குறிப்பிடுகிறேன். இவர்களது நிர்வாகத்தில் நமது இனத்தைச் சுற்றி அரசியல் நெருக்கடிகள் அதிகரித்தனவேயன்றிக் கஷ்டங்கள் குறைந்தபாடாக இல்லை. அரசாங்கம் அப்படி ஒரு நியமனத்தைச் செய்ய முன்வருகிறதெனில் அது நம்மை ஏமாற்றும் ஒரு கண் துடைப்பாகவே நாம் கருத முடியும்.

தன் கையே தனக்குதவி என்பதற்கேற்ப, எமது இனம் இழந்த உரிமைகளை மீட்க தார்மீக அடிப்படையில் போராட்டங்களை நடத்தியே தீரவேண்டும். இப்படியான ஒரு நியாயத்தின் மூலம் ஆட்சியாளர்கள் தமிழ் பேசும் இனத்தின் உரிமைக் குரலை அடக்கிவிட நினைத்தால் அது பகற்கனவாகவே முடியும்.

சங்கச் செயலாளர் திரு. எஸ். மயில்வாகனம் மூதூர் முதல்வருக்கு மலர் மாலை சூட்டி வரவேற்றூர். வரவேற்புப் பத்திர[illegible] அன்னருக்கு வாசிக்கப் பட்டது.




ராஜ பீடி ஸ்பெஷல்
இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்
ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றேதான்
புகைத்து பலனடையுங்கள்
ராஜா பீடி கம்பனி
கொழும்பு-14.,
டெலிபோன் : 2739


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன் கலைப் பகுதி

# ஆடல்பாடல்காட்சி

நாடக விமர்சனம்:

## மத (ஏ) மாற்றம்

சமூகத்தைச் சின்னபின்னப்படுத்தும் எத்தனையோ கொடுமைகள் இருக்கும் போது, பல்கலைக் கழகத்துத் தமிழ்ச் சங்கத்தாருக்கு மதமும், கடவுளும்தான் முதல் எதிரிகளாகத் தென்பட்டுள்ளன. மதத்தால் சீரழிந்த, அழிந்து கொண்டிருக்கும் எத்தனையோ குடும்பங்கள் இருக்கின்றன என்பது உண்மையேயானாலும்; "மதமாற்றம்" நாடகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட கதை என்னமோ வெறும் ஏமாற்றத்தையே கொடுத்துள்ளது.

மதத்தால் வேறுபட்ட இருவர் மனத்தால் இணைந்து வாழத் துடிக்கின்றனர். மதம் காதலியின் தந்தை உருவில் வந்து வழிமறிக்கிறது. காதலி தழுவிய மதத்தையே ஏற்றுக்கொண்ட காதலன், காதலியை அடைய வாய்ப்புக் கிடைக்கும் தறுவாயில், காதலி விஷயம் அறியாது, வீட்டை விட்டு வெளியேறிய தோடல்லாமல் தனது காதலனின் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிவிடுகின்றாள்.

காதலனும், காதலியும் மீண்டும் சந்திக்கும்போது மகிழ்ச்சியும், உற்சாகமும் பிறக்கவேண்டுமே ஒழிய, மதம் மாறிவிட்டதற்காக ஒருவரை ஒருவர் திட்டித் திரிறவேண்டிய அவசியம் ஏற்பட முடியாது.

ஜோஸப்பும் மீனாவும் காதலர்களாகக் காட்டப்படுகின்றனர். ஜோஸப் பாலசிங்கமாகவும், மீனா லீலாவாகவும் மதமாற்றம் செய்யப்படுகின்றனர். காதலனுக்காகத் தனது பெற்றோரையும் சுகபோகங்களையும் துறந்து வீட்டை விட்டு வெளியேறும் மீனா, லீலாவாக மாறியிருக்கும்போது பாலசுப்பிரமணியமாக மாறிவிட்ட தனது காதலனின் காதலை வெறுக்க நேரிடுகிறது. இக்கூற்று உண்மைக் காதலுக்கு இலட்சணமாகுமா! இது மதத்தின் கோளாறு? கடவுளின் கோளாறு? அல்லது காதலின் கோளாறு?

வேற்று மதத்தினனாகவிருந்த ஜோஸப்பை, மதத்தையும் பொருட்படுத்தாது விரும்பிய மீனா, தன் காதலன் மதம் மாறிவிட்டதனாலும், தான் கத்தோலிக்க மதத்தினளாகி விட்டதனாலும் மணக்க மறுத்தும், காதலன் ஜோஸப், (பின்னால் பாலசுப்பிரமணியம்), காதலியை மதபேதம் கடந்து கலியாணம் செய்துகொள்ள முற்படுவதால், மதத்தையும், கடவுளையும் குற்றவாளியாக்க முனைந்துள்ள கதாசிரியரின் 'பகுத்தறிவை'ப் பாராட்டத்தான் வேண்டியுள்ளது.

கதையின் போக்குப்படி ஆராய்ந்து பார்க்குமிடத்து வேண்டுமென்றே கத்தோலிக்க மதத்தை வலிந்து இழுத்துக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றியுள்ளனர் என்பதும் தெரிகிறது. இலங்கையிலுள்ள தற்போதைய 'முற்போக்கு வாதி'களை அதிகமாக உறுத்துவது கத்தோலிக்க மதம் தானே!

கதையில்தான் பெரிய வெடிப்பு இருக்கிறது என்று பார்த்தால், மேடைக் கலை வளர்ந்துள்ள இக்காலத்திலும் நடிப்புக்குமா பஞ்சம் ஏற்படவேண்டும்? நடிப்புக் கலைக்கே உயிரளிக்கவல்லவர்கள் என்று கூறப்படும் சிலருடைய பெயர்கள் 'மதமாற்ற'த்துடன் சம்பந்தப்படுத்தப்பட்டுள்ளனவே!

பொறியியல், விஞ்ஞானம் படிக்கும் மாணவ மாணவிகள் இந்த அளவுக்கு தமிழ் மொழியில் பேசவும், நடிக்கவும் முன்வந்தமை பாராட்டப்பட வேண்டியதே! என்றும் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. வெட்கக்கேடு, அடிக்குமேல் அடிபட்டு 'விழுந்தும் மீசையில் மண்ஒட்டவில்லை' என்றதற்கொப்ப இருக்கிறது இந்த வாதம். அன்னியர் இக்கூற்றைக் கேட்டால் எள்ளி நகையாடமாட்டார்களா? முத்தமிழை வளர்த்துப் பெருமைபட்ட இனத்தின் பரம்பரையினர் என்று கூறப்படும் ஒரு ஒப்பற்ற சமுதாயத்தைச் சேர்ந்த தற்கால மாணவர்களுக்காகவா இந்த வக்காலத்து?

### நடிகர்கள்

கதைத் தலைவி மீனாவாக வரும் செல்வி சற்குணம் ஓரளவாக வசனம் பேசுவதில் திறமையைக் காட்டியுள்ளார். கதாநாயகன் ஜோஸப்பாகவரும் திரு. பஞ்சாட்சரம், பரிதாபத்துக்குரிய உருவ அமைப்பு. அசட்டுக் கோமாளி வேஷம் அருமையாகப் பொருந்தியிருக்கும் அவருக்கு. மீனாவின் தந்தையாக வரும் திரு. சிவபாத சுந்தரத்துக்கு வேடம் பொருந்தியது. வேலைக்காரன் வேலாயுதமாக வந்து அடிக்கடி சிரிப்பூட்டிய திரு. சிவானந்தன், நகைச்சுவை நடிப்பில் சிறப்புற விளங்கலாம். அவருடைய திறமையை இன்னும் நன்கு பயன்படுத்தி, தூங்கி வழிந்த நாடகத்தை ஓரளவு சுவையூட்டியிருக்கலாம். இராமலிங்கமாக நடித்த திரு. சுந்தரலிங்கம் பரவாயில்லை, அவருக்கான வசனங்களும் நகைச்சுவையுடன் எழுதப்பட்டிருந்த போதிலும், அவற்றின் இடையிடையே, தென்னக சுயமரியாதை இயக்க ஏடுகளின் "உக்குடுவி" ('காப்பி' அடிப்பு)த் தன்மை எட்டிப்பார்க்கின்றது.

தெரேசா பாகத்தில் தோன்றிய செல்வி தெரேசா பீட்டரிடம், நடிக்க வேண்டுமென்ற துடிப்பு உண்டு. பயிற்சி பெற்றால் பாவங்களும் ஒத்துழைக்கலாம். ஆனால் குரலும், உச்சரிப்புகளும் ஒத்துழைக்க மறுக்கின்றன.

பொதுவாக 'மதமாற்றம்' கதையிலும், காதலிலும்,

(13-ம் பக்கம் பார்க்க)

## கலைப் பூஞ்சோலை

2-9-62-ல் மலரவிருக்கும் மன்னார் மாநாட்டு மலரில் கலைப் பூஞ்சோலை ஒரு விசேட அம்சமாகத் திகழும்.

'சுதந்திர'னில் கலைப் பகுதி "கலைப் பூஞ்சோலை" என்ற மகுடத்துடனேயே இனிமேல் வெளிவரும்.

கலைப் பூஞ்சோலை புதிய தொடரில், திரையும் மேடையும் திகட்டாத விருந்தளிக்கப் போகின்றன. நாட்டிலே அங்காங்கே உள்ள சிறந்த கலைஞர்களை தக்க முறையில் அறிமுகப்படுத்தும் திட்டத்தை 'சுதந்திரன்' வகுத்துள்ளது.

நாடகக் கலை மன்றங்கள் தங்கள் கலைப் பூஞ்சோலையுடன் தொடர்பு கொள்வதற்கான திட்டங்களை விரையில் வெளியிடுவோம்.

9-9-62 சுதந்திரனுடன் வெளியாகும் கலைப் பூஞ்சோலையுள் புகுந்து தொண்டாற்ற நல்ல வாய்ப்புகள் கிடைக்கும் தன்னாளை எதிர்பாருங்கள்.

மன்னார் மாநாட்டு மலரில் கலைப் பூஞ்சோலை கருத்தூட்டும் களஞ்சியமாக மலருகிறது.



பாதை இருண்டு விட்டது! பாவை என் துணையிருக்க தனித்துப் போகாதே என்று நிஷி அசோக்குமாரைக் கோருகிறார் போலும். கபிரிட்டல் திரைக்கு வரும் "இருட்டுப் பாதை"யில் ஓர் உள முருக்கும் கட்டம்.

## "தாய் சொல்லைத் தட்டாதே"

வர்ணனை

### பெண்களுக்கு மட்டும்!

பெண்களின் உள்ளத்தைத் தொடும் பல கட்டங்கள் "தாய் சொல்லைத் தட்டாதே" படத்தில் இடம் பெற்றுள்ளன. ஒரு தாயை மெய்சிலிர்க்க வைக்கும் மூன்று கட்டங்களை மட்டும் எடுத்து, அவற்றை வர்ணித்து எழுதுங்கள் பார்க்கலாம். சிறந்தவர்ணனைக்கு சிறந்த பரிசு ஒன்று கிடைக்கும் பிரசுரிக்கத்தகுதியான சில இப்பகுதியில் பிரசுரமாகும். வர்ணனை 200 வார்த்தைகளுக்குள் அடங்கியிருத்தல் வேண்டும்.

வர்ணனை அனுப்புவோர் கீழ்க்காணும் முகவரியை வெட்டி உறையின் மேல் ஒட்டி அனுப்புதல் அவசியம்.

தாய் சொல்லைத் தட்டாதே
( வர்ணனை )
"சுதந்திரன்"
த. பெ. 1183 கொழும்பு



பி. எஸ். வீரப்பா தயாரித்த 'வீரக்கனல்'லில் ஜெமினி கணேசன், அஞ்சலிதேவி, எம். என். ராஜம் ஆகியோர் தோன்றுகின்றனர். சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில் இப்பொழுது காட்சியளிக்கிறது.



டாக்டர் மு. வரதராசனார் எழுதிய 'பெற்றமன'த்தில் விஜயலட்சுமி, எஸ். எஸ். ஆர். சிவாஜி கணேசன். "பெற்றமனம்" சினிமாஸ் திரைகளில் விருந்தளிக்க விருக்கின்றது.

**மன்னார் உங்களை அழைக்கிறது: மாநாடு காண வாரீர்! வாரீர்!!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திக்கு வந்தவை

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கிற நேரத்திலே, சுருட்டுக்கு நெருப்பு எடுக்க முயலும் வினைஞர்களின் நிலையிலுள்ளவர்களே, மக்கள் குமுறி எழும் உணர்ச்சியுடனே போராடிக் கொண்டிருக்கையில் மந்திரிகளுக்கு வரவேற்பளிக்க முற்படுபவர்கள்.

சில காலத்துக்கு முன்னர் மந்திரி சமரவீராவை வல்வெட்டித்துறையில் வரவேற்க ஒழுங்கு செய்த ஓழ் மதி பிடித்தவர்களையிட்டு சந்தியில் குறிப்பிட்டிருந்தோம். இம்முறை மந்திரி ஏ. பி. ஜயசூரியாவை வரவேற்பதற்கு, முன்னர் திரு. சமரவீராவை வரவேற்ற "பிரபுக்கள்" தலைகாட்டவில்லை. காரணம் மந்திரி கொடுத்து விட்டுச் சென்ற வாக்குறுதிகள் நீர் மேல் எழுத்துக்களாகி விட்டமையே தான். கடந்த முறை மந்திரி வரவேற்பில் கலந்து கொள்ள வாய்ப்புக் கிடைக்காத—வரவேற்பாளர்களால் ஒதுக்கி வைக்கப்பட்ட முன்னாள் வி. ச. தலைவர் திரு அப்பாக்குட்டியார பிள்ளை (அம்மான் அல்ல) மந்திரிகளை வரவேற்க, தமது கையொப்பமிட்ட விண்ணப்பங்களை வெளியிட்டிருந்தார்.

கடந்த முறை வரவேற்பில், தான் புறக்கணிக்கப்பட்ட பிரமுகராகக் கருதப்பட்டமையே இவ்வரவேற்பைத் தாமே ஒழுங்கு செய்யக் காரணமாக விருந்ததாம் அவருடன் ஜெயராக் கல்லூரி அதிபரும் மந்திரி வரவேற்பில் பங்கு கொண்டார். தமது பதவியை சாசுவதமாக்க அவர் செய்த அந்தரங்கத் திருவிளையாடல்கள் அம்பலமேறுதிருக்க அவர் மந்திரிகளைக் காக்காய் பிடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. வரவேற்பில் கலந்து கொண்டமைக்காக தமது மாணவர்களின் கேலிக்கும், கிண்டலுக்கும் இலக்கானது மட்டுமல்லாது, அடுத்த நாள் கல்லூரி வகுப்பறைகளைச் சுத்தம் செய்ய வேண்டிய பொறுப்பும் அவரையே சார்ந்துவிட்டது. சுத்த சைவராகவிருந்தும், மந்திரியாருக்கு அளிக்கப்பட்ட விருந்தில் சிதறிய எலும்புத் துண்டுகளையும், எச்சில்களையும் தாமே சுத்திகரித்தது பரிதாபமாகவிருந்தது.

## சின்ன மேளமும், கப்பலோட்டிய தமிழனும்

மந்திரி வரவேற்புக்கு கூட்டம் வராது என சம்பந்தப்பட்டவர்களுக்கு முன்னரேயே தெரியும். ஆகவே சில 'ரசிகர்'களை யாவது கவர்ந்திழுக்க சில முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டியேற்பட்டதாம்.

ஊர்வலம் தொடங்குமுன்னர் ஒலி பெருக்கியில் பலரும் விரும்பும் "கப்பலோட்டிய தமிழன்" வசனம், பாடல்கள் ஒலிபரப்பப்பட்டன. ஆனால், இது ஒரு குறிப்பிட்ட அளவு தூரத்துக்கே ஒலி கேட்கும்படி அமைக்கப்பட்டிருந்தது. வெளியில் பலருக்கும் வெகுதொலைவில் கேட்குமேயானால் யாரும் அருகில் வரமாட்டார்களல்லவா? சில இளைஞர்கள் இந்த வசனம், பாடல்களை ரசிக்கவே அவ்விடத்துக்குச் சென்றனர். மந்திரி வரவேற்பு ஆரம்பமானதும் மாயமாக மறைந்தனர்.

வல்வட்டியில் மந்திரி ஜயசூரியாவின் நண்பரெனத் தம்பட்டமடித்துக் கொள்ளும் திரு குழந்தைவேலு, தாம் மந்திரிக்களித்த சொந்த வரவேற்பில் மக்களைச் சேர்க்க ஓர் உபாயத்தைக் கைக் கொண்டார். சதுர்க்கச்சேரி களை ரசிப்பதில் யாழ்ப்பாண மக்கள் அதிக விருப்புடையவர் என்ற இரகசியத்தைத் தெரிந்து வைத்துக்கொண்டுள்ள அவர், மாலை 5 மணிக்கே சின்ன மேளத்தை முடுக்கி விட்டார். இரவு 8 மணிக்குத்தான் மந்திரி வரவேற்பு என்றறிந்த போதிலும், முன்னதாகவே சின்னமேளம் இடம் பெற்றது மந்திரியை மயக்கவா? அல்லது மக்களைத் திரட்டவா?

மாலைகளை மந்திரிக்கு அணிவிக்கவும், பூரண கும்பங்களை வைக்கவும் விலை பேசி ஒழுங்குகள் செய்த ஒரு வழக்கறிஞர்...பாவம் அவர் பெண் மணிகளிடம் வாங்கிய திட்டுகளுக்கு அளவில்லை

## வாலிபர்கள் பாராட்டுக் குரியவர்கள்

மந்திரி மகாநாம சமரவீராவின் வரவேற்பினால் பகழிழந்த வல்வெட்டித்துறையின் மானத்தைக் காக்க, வாலிபர்கள் கட்சி பேத மற்ற நிலையில் மொழிக்காகவும், இனத்துக்காகவும் தொண்டாற்ற முன் வந்துள்ளனர்—தமக்குள் ஒரு ஒற்றுமையை உருவாக்கி—உறுதியான திட்டங்களை வகுத்துள்ளனர் என்ற செய்தி கேட்டு நமது அப்பாக்குட்டி அம்மான் துள்ளிக் குதித்தார். அவர் மனமார அவர்களைப் பாராட்டுகிறார்.

மந்திரி ஜயசூரியாவுக்கு வரவேற்பளிப்பதை ஆட்சேபித்து அவ்விளைஞர்கள் ஓர் துண்டுப் பிரசுரத்தை அவசர அவசரமாக விநியோகித்தனராம். அவர்களை பொலிசாரின் துணையுடன் கண்டிக்க சில "பெரியவர்கள்" எடுத்துக் கொண்ட முயற்சிகள் எதுவும் பலிக்காமல் போய்விட்டதாம். கட்சி பேதமற்ற முறையில் மொழிக்காகவும் இனத்துக்காகவும் தொண்டாற்ற முன் வந்த வல்வை முற்போக்கு வாலிபர் சங்கத்தை நாமும் அப்பாக்குட்டி அம்மானுடன் சேர்ந்து பாராட்டுகின்றோம்.

# சிலாபத்தில் சிங்கள வகுப்பு
## ஊழியர்கள் பகிஷ்கரிப்பு

சிலாபத்திலுள்ள தமிழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்குச் சிங்களம் கற்பிக்க அரசாங்கம் ஆயத்தங்கள் செய்தது. சிலாபம் நகராண்மைக் கழகக் கட்டிடத்தில் 20-8-62 முதல் சிங்கள வகுப்புக்களை ஆரம்பித்து நடாத்த ஏற்பாடுகள் தடபுடலாகச் செய்யப்பட்டு, எல்லா தமிழ் உத்தியோகத்தர்களுக்கும் அழைப்பு விடப்பட்டது. ஆனால் குறிக்கப்பட்ட காலத்தில் ஒருவரும் சிங்களம் கற்க வரவேயில்லை. ஆத்திரமடைந்த அதிகாரிகள் தொடங்கிய முயற்சியை அன்றே கைவிட வேண்டியேற்பட்டதாக அம்மானுக்குச் செய்தி கிடைத்துள்ளது. சிங்களம் படிப்பதில்லை என்று அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் செய்துள்ள தீர்ப்பை ஒட்டியே சிலாபத்திலுள்ள தமிழ் அரசாங்க ஊழியர்கள் சிங்கள வகுப்புகளைப் பகிஷ்கரித்தனர்.

# அன்பு மகள் அன்பரசிக்கு

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

ளது. ஏன் சத்தியாக்கிரக காலத்தில் நாளன்று, நாமெல்லாம் கைதான அன்று—யாழ்ப்பாணத்தில் மட்டுமே அடி, உதை, இடி, கண்ணீர்ப் புகை ஆகிய கொடுமைகள் நிகழ்ந்தன. மற்ற இடங்களில், அமைதியாகவே சத்தியாக்கிரகிகளை அப்புறப் படுத்தியுள்ளது. ஆமாம்! வேண்டுமென்றே அதிகார பீடம் இப்படிச் செய்திருக்கக்கூடும். ஆனால் இதனால் ஆட்சிக்கு வெற்றியோ வலுவோ ஏற்படுமா? மக்களின் உள்ளத்திண்மையை இன்னும் கூட்டவே உதவும். மக்களின் எழுச்சி முன்பு, துப்பாக்கி துசாகும், கொடுமைகள் தகரும் என்பது வரலாற்று உண்மை.

மகளே! தமிழ் பேசும் மக்கள் ஈழநாட்டின் சிறுபான்மையினமாக இருக்கலாம். ஆனால், இன்று ஈழநாட்டின் ஆட்சியை அசைக்கின்றார்கள். அவசர கால நிலையைப் பிரகடனப்படுத்தாது, இன்றைய ஆட்சியினரால் ஆட்சிச் சக்கரத்தை உருட்ட முடியாத நிலை. ஆகவே, பைந்தமிழ் வீரரின் அறப்போராட்டம் சாமான்யமானதல்ல. மகளே, சாமான்யமானதல்ல. எனவே, நாம் தடுப்புக் காவலில் இருக்கும் ஒவ்வொரு நிமிடமும்கூட ஆட்சிக்கு அதிக செலவையும், அமைதியின்மையையும், உலகில் கொடுர ஆட்சி என்ற பட்பிடிப்பையும் மெய்ப்பிப்பதுடன், தமிழனின் திட நெஞ்சையும் உணர்த்தவே செய்கின்றோம். தியாகமென்று சொல்லாவிட்டாலும், இன்றைய ஈழத் தமிழனின் கடமையை நாம் செய்கின்றோம். நாட்டுக்காக உழைக்கும் பேறு பெற்றவர்களாகி விட்டோம்.

அப்படியானவர்களுள் என் அப்பாவும் ஒருவராகி விட்டார் என நீ பெருமைப் படுவதில் நியாயமிருக்கின்றதல்லவா?

ஆகவே, உன் அப்பாவைப் பிரிந்திருந்தாலும், உன் அப்பா கொலை செய்தோ களவு செய்தோ சிறையடையவில்லை--நாட்டுக்காக, பைந்தமிழ் உரிமைக்காகச் சென்றுள்ளார், என எண்ணி பிரிவுத் துன்பத்தையகற்றுவாயாக.

தந்தையின் ஸ்தானத்திலும் தாயின் ஸ்தானத்திலுமிருந்து உன் அம்மா வேண்டியன செய்வார். எங்கே பாலொழுகச் சிரிக்கும் அந்த அன்புச் சிரிப்பு—சிரியடி அன்பு.

உனது அப்பா,

புதுமைப்பித்தன்.

(தொடரும்)

## மத(ர)மாற்றம்

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

நடிப்பிலும், மக்களைக் கவர்வதிலும் ஏமாற்றத்தையே அளித்துள்ளது. எனினும் பல்கலைக்கழகத்துக்குச் சேர்ந்த கிங் ஜோர்ஜ் மண்டபம் இரண்டு நாட்களின் வசூலுக்கும் ஏமாற்றம் அளித்திருக்க மாட்டாது என்றே கருதுகிறோம்.

பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கத்துள் மத வேற்றுமை தலைகாட்டக்கூடாது—அரசியல் பேதங்கள் உண்டாகக் கூடாது என்றெல்லாம் கூக்குரலிடும் சில உருவங்களையும், மதங்களைச் சாடி, ஒரு சர்வ தேசியத்துக்கு சாமரை வீசும் கருத்துக்கள் கொண்ட "மதமாற்றம்" நாடகத்தில் தலைகாட்டக் கண்டோம்.

—நாதன்.

# "பெண் மனதில்" சிவாஜி

ஆனந்த விகடன் பத்திரிகையில் தொடர் கதையாக வந்து பலரின் உள்ளங்களைக் கவர்ந்த லட்சுமி எழுதிய "பெண் மனம்" பிரசாத் புரடக்ஷன்சாருக்காகத் திரைப் படமாக உருவாகப் போகிறது.

கலைஞர் கருணாநிதியின் வசனத்தில் வளரப்போகும் இப்படத்தில் சிவாஜி பிரதம பாகத்தில தோன்றப் போகிறார். அவருடன் சரோஜா தேவி தோன்றுகிறார். இப்படத்தை தயாரிப்பாளர் திரு. பிரசாத்தே டைரக்ட் செய்யவுள்ளார்.

இப்படத்தின் கதாநாயகனாக வரும் சிவாஜி, யாருக்கும் அடங்காத முரடனைத் தோன்றுவார். அவரை அன்பினால் அடிமைகொண்டு திருத்தும் மனைவியாக சரோஜாதேவி நடிக்கவேண்டியிருக்கும்.

தேவர் பிலிம்ஸார் தயாரித்த "தாய்சொல்லைத் தட்டாதே" இலங்கை வெள்ளித் திரைகளில் வெற்றி முழக்கமிடும் போது தென்னகத் திரைகளில் தேவரின் அடுத்த தயாரிப்புகள் இரண்டு வெற்றிக் கொடி நாட்டிக் கொண்டிருக்கின்றன.

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர், சரோஜாதேவி, அசோகன் தோன்றும் "தாயைக் காத்த தனயன்" அண்மையில் 100 வது நாள் விழா வைக் கொண்டாடியது. ஆகஸ்டு 15ல், இந்திய சுதந்திர தினத்தன்று தேவரின் அடுத்த தயாரிப்பான "குடும்பத் தலைவன்" திரைக்கு வந்தான். இப்படத்திலும புரட்சி நடிகர் சரோஜாதேவி, அசோகன் முதலானோர் திறம்பட நடித்துள்ளனராம்.


சிறந்தது சிக்கனமானது சிந்தனையூட்டுவது

யானை பீடி

ஸ்பெஷல்




காரம், மணம், குணம் நிறைந்த யானை பீடி ஸ்பெஷல் புகைப்போருக்குப் புத்துணர்ச்சியையும் உற்சாகத்தையும் கொடுக்க வல்லது. தொழிலாளிகளும், சீமான்களும் தங்கள் வருவாய்க்கேற்ப, சிறந்த புகை பிடிக்க யானை பீடியையே புகைக்கிறார்கள். பூரண திருப்திக்கு யானை பீடி ஸ்பெஷலே புகையுங்கள்.

யானை பீடி கம்பெனி

62, டிமெசெஞ்சர் வீதி கொழும்பு. தொ.பே.7651

CFA/EBC2



# இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் டைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் எம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விபரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

சுதந்திரன் டைப் பவுண்டரி,

194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு—12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புதுமைக் கதை

# புதுமைப் பூங்காவில் பூவாகிய பாவை

(அன்ரனி பெர்னண்டோ—கிரிலப்பனை)

அழகி, அரசன் மகள் அவள், எவ்வளவு அழகான பெயர். பெயர் மட்டுமென்ன? அவள் அழகியே தான். அழகு ராணி அவள். அழகிக்கு இவ்வளவையும் கொடுத்த இயற்கை ஒரு பெருங் குறையையும் சேர்த்துக்கொடுத்து விட்டது. ஆம், அழகியை ஊமையாகப் படைத்துவிட்டது. அவளால் பேச முடியவில்லை.

அழகியால் பேச முடியவில்லையே என்பது அரசனுக்குப் பெருந்துயராக இருந்தது. அவளைப் பேசச் செய்வதற்கு அவர் எவ்வளவோ பாடுபட்டுப் பார்த்தார். ஒன்றும் பயனளிக்கவில்லை. அழகி பேசவே இல்லை.

அழகி எப்போதும் துக்கமாக இருந்தாள். பேச முடியாத கவலை அவளுக்கு. இளவரசியைச் செல்வமுள்ள இளவரசர்களுக்கு மணம் செய்துதர அரசன் முன்வந்தான், அதையும் செய்ய முடியவில்லை.

இப்படியே பல வருடங்கள் ஓடி மறைந்தன.

அன்றொருநாள் இளவரசி தோழிகளோடு பூங்காவுக்குப் போனாள். மாலையில், இருள் சூழும் நேரம். மாளிகைக்குத் திரும்ப ஆயத்தமானாள். மற்ற நாட்களைப் போல் இல்லாமல் அன்று அடிவைத்த இடமெல்லாம் அழகிய ரோசா மலர்கள் இருந்தன.

இளவரசி அழகி ரோசா மலர்கள் இருக்கும் பக்கத்தைப் பார்க்காமல் நடந்தாள் அப்படியே நடந்து ஒரு ரோசாத்தோட்டத்திற்கே வந்து விட்டாள்.

அரசனின் பூந்தோட்டத்தைவிட இந்தத் தோட்டம் எவ்வளவோ அழகாக இருந்தது. அழகி தேவலோகத்தில் இருப்பவள்போல் காணப்பட்டாள். அவளோடு வந்த தோழிகளைக் காணவில்லை. அவள் பல நாட்கள் அந்தப் பூங்காவில் இருந்தாள்.

ஒருநாள் அந்தப் பூந்தோட்டத்தில் பெரிய சத்தம் ஒன்று கேட்டது. அவ்விடத்தில் முகம் ரோசா மலராகவும் உடல் மனித உடலாகவும் உள்ள யாரோ ரோசாப் பற்றைக்குள் இருந்து 'அழகி' என்று இனிய குரலில இளவரசியை அழைத்தார்கள். இளவரசி பயந்துவிட்டாள்.

"அழகி, உனக்குப் பேச முடியாதென்பது எனக்குத் தெரியும். அதற்கு வருத்தப் படாதே. நானும் இதே சாபத்துக்கு ஆளானேன். இப்போது எனக்கு பேச முடிகிறது. உனக்குப் பேசுவதற்கு ஆசையாக இருந்தால் நீ நூறு வருடங்கள் ரோசாப் பூவாக மாறி இவ்விடத்தில் இருக்க வேண்டும். நான் பெரிய பொய்யொன்றைச் சொன்னதால் சபிக்கப்பட்டுத் தான் இவ்வளவு துக்கப் படுகிறேன். உனக்கும் இது போன்ற சாபம் கிடைத்திருக்கிறது. எனவே நீ இங்கு நூறு வருடங்கள் வாழ வேண்டும்." இளவரசி அதற்குச் சரியென்று ஒப்புக் கொண்டாள்.

அரசனுக்கு இந்தப் புதுமையான கதை எட்டியது. இளவரசியைத் தேடித்தரும்படி அரசன் நாடெங்கும் அறிவித்தான். அழகியைத் தேடும் முயற்சியில் பலர் ஈடுபட்டார்கள். அவளைக் கண்டுபிடிக்க ஒருவராலும் முடியவில்லை.

ஓர் இளவரசன் அழகி இருக்கும் ரோசாத் தோட்டத்தைத் தேடிக்கொண்டு வந்தான். அங்கு அந்தப் புதுமையான மனித உருவம் சொன்னது, இளவரசன் சில வருடங்கள் இருந்தால் இளவரசியைப் பெற்றுத் தருகிறேன் என்று. அழகியைப் பெற வேண்டும் என்ற ஆசையில் இளவரசன் அதற்கு ஒப்புக்கொண்டான்.

அந்த இளவரசன் ரோசா மலர்களைத் தின்னும் ஒரு புழுவாக உருமாறினான். கொஞ்ச காலம் கழிந்ததும் தோட்டத்தில் இருந்த பூக்கள் எல்லாம் முடிந்தன. அந்தப் புழு ரோசா மலர்களை எல்லாம் தின்று கொழுத்துப் பெருத்தது. தோட்டக்காரன் அதைப் பிடித்துக் கொன்றுபோட்டான். பின்பு அந்தப் புழு ஒரு ராட்சதனுகி அங்கிருந்த மனித உருவத்தை விழுங்கியது. விழுங்கிப் பெலசாலியான இளவரசனுக மாறியது. நூறு வரு[illegible] இளவரசன் மணந்துகொண்டான்.

ஒரு நிமிஷக் கதை:

## நான்கு முட்டாள்கள்

ஞா. ஜீவநாதன்
(கொழும்பு-10.)

ஓர் ஊரிலே நாலு முட்டாள்கள் இருந்தனர். அவர்கள் ஒருநாள் மத்தியான உணவை கடற்கரையில் உண்ண நினைத்து அங்கு சென்றனர். அவர்களில் ஒருவனிடம் ஒரு தங்க மணிக்கூடு இருந்தது. அவர்கள் கடற்கரையை வந்தடைந்ததும் மணிக்கூடு வைத்திருப்பவன் நேரத்தைப் பார்த்தான். பார்த்ததும் அவன் திடுக்கிட்டு மற்றவர்களிடமும் காட்டினன். அவர்களும் திடுக்கிட்டனர். ஏனெனில் ஒரு முள்ளுத்தான் மணிக் கூட்டில் தெரிந்தது. அப்படித் தெரிந்ததற்கு காரணம் அப்போது பன்னிரண்டு மணி. இது அந்த முட்டாள்களுக்குத் தெரியவில்லை. அவர்கள் துக்கத்துடன் இருப்பதை அவதானித்து ஒரு வயோதிபர் முட்டாள்களிடம் காரணத்தைக், கேட்கவே அவர்கள் மணிக்கூட்டைக் காட்டி நடந்ததை சொல்லினர். விஷயம் அறிந்த வயோதிபர் 'நான் திருத்தி தருவேன் நீங்கள் ஐம்பது ரூபாய் தருவீர்களா' என்றார். முட்டாள்களும் சம்மதிக்க அவர் திருத்துவதுபோல பாசாங்கு செய்து ஐந்து நிமிஷத்தின் பின் முட்டாள்களிடம் கொடுத்தார். அப்போது நேரம் பன்னிரண்டு ஐந்து ஆனகையால் இரு முள்ளும் தெரிந்தது. முட்டாள்கள் ஐம்பது ரூபாயைக் கொடுத்து விட்டு மத்தியான உணவை உண்டனர்.

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

## வளர்மதி

### சுதந்திரன் மாணவர் மன்றம்

### அங்கத்தவர் மனுப் பத்திரம்

இல. 6

பெயர் ..............................

பாடசாலை ..............................

விலாசம் ..............................

..............................

.............................. ..............................
பெற்ருேர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

# வித்தைக்காரன்

(புவனேஸ்வரி அருளம்பலம், சாவகச்சேரி)

வித்தைக்காரன் நல்ல வித்தைக்காரன்—பெரும்
வேடிக்கை காட்டிடும் வித்தைக்காரன்.

சத்தம் போட்டு அழைத்திடுவான்—தன்
கையால மேளத்தை அடித்திடுவான்
எத்தனை வித்தைகள் காட்டிடுவான்—நாம்
அனைவரும் சேர்ந்து பார்த்திடுவோம்! (வித்தை)

கம்பம் ஒன்றில் ஏறி நிற்பான்—பெரிய
கரகம் ஒன்றைத் தலையில் வைப்பான்!
பம்பரம் போன்று ஆடி நிற்பான்—அதை
பார்ப்போர் மனதைக் களிக்க வைப்பான் (வித்தை)

கொட்டை ஒன்றை மண்ணில் வைப்பான்—அதை
சட்டை கொண்டு மூடிவைப்பான்!
எட்டு விநாடி ஆகுமுன்பே—ஒரு
செடியை வளர்த்துக் காண்பிப்பான் (வித்தை)

மனதில் நாங்கள் எண்ணுவதை—அவன்
பலரும் அறிய எடுத்துரைப்பான்!
பணத்தைக் குழியில் புதைத்துவிட்டு—அயல்
பையன் மடியில் வரவழைப்பான்! (வித்தை)

தரையில் உள்ள மண்ணையள்ளி—நல்ல
சர்க்கரை போலத் தந்திடுவான்.
மறைந்து போன மோதிரத்தை—ஒரு
மாம்பழத் துள்ளே வரவழைப்பான். (வித்தை)

மாய வித்தை செய்திடுவான்—பெரும்
மந்திர வித்தை செய்திடுவான்
ஆயிரம் ஆயிரம் மக்களங்கே—கூடி
ஆஹா என்றே மகிழ்ந்திடுவான். (வித்தை)

# எங்கள் கோரிக்கைகள்

(எஸ். அப்துல் கபூர், கொழும்பு)

உலகில் எங்கள் இனமே இல்லாத இடம் இல்லை என்றே சொல்லலாம். ஆயிரக்கணக்கான எங்கள் இனங்களை சிலர் வைத்துக் கொண்டு லட்சக்கணக்காகப் பெருக்கி விடுகிறார்கள். இதெல்லாம் எதற்கு என்று கேட்கிறீர்களா? எங்கள் மாமிசம் என்றால் உங்களுக்கெல்லாம் கொண்டாட்டம் ஆச்சே!

எங்கள் இனங்கள் எவ்வளவு அதிகமாகப் பெருகிறதோ அவ்வளவையும் அழித்து விடுகிறீர்கள்! நாங்களும் உங்களைப்போல் சுதந்திரமாகத்தான் வாழ விரும்புகிறோம். நீங்கள் எல்லோரும் வாழப் பிறந்தவர்கள்; நாங்கள் எல்லோரும் சாகப் பிறந்தவர்கள் என்று தானே எண்ணி விடுகிறீர்கள்? இந்த எண்ணம் எவ்வளவு பெரிய தவறு என்பதை சிந்தித்துப் பார்த்தால் உங்களுக்குப் புரிந்து விடும்.

விடுமுறை நாட்கள் வந்து விட்டால் போதும், எங்கள் மாமிசம்தான் உங்கள் வயிற்றுக்குப்போய் ஆகவேண்டும் என்பதுதான் உங்கள் நியதியா? சிலருக்கு எங்கள் மாமிசத்துடன் மூன்று வேளை உணவு உட்கொள்ளாவிட்டால் அவர்கள் உடம்புக்கு ஏதாவது ஆகிவிடுமாம். கொடிய, கூர்மையாக தீட்டப்பட்ட வாளைக் கொண்டு நாங்கள் துடிக்கத் துடிக்க கழுத்தை அறுக்கிறீர்களே! அழுது புரண்டாலும் கயிற்றைக்கொண்டு கட்டி இழுத்து, சித்திரவதை செய்து எங்கள் உயிரைப் போக்கி விடுகிறீர்களே! இந்த அநியாயத்தை யாரிடம்சொல்லி அழுவதென்றே எனக்குப் புரியவில்லை.

எங்கள் இனத்தவர்களுடன் சந்தோஷமாக நாங்கள் கூடி வாழ விரும்பினுல் அதையும் வந்து கெடுக்கிறீர்கள். இந்த அநியாயத்தை நாங்கள் இனியும் பொறுமையுடன் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. நாங்களும் உங்களைப் போல் வாழ்ந்து தான் ஆக வேண்டும்.

சில நாடுகளில் எங்கள் இனத்தவர் இருவரைச் சண்டைக்குத் தயார் செய்து, பந்தயம் பிடித்து, பிறகு இருவரையும் மோதவிட்டு வேடிக்கைப்பார்க்கிறார்கள். எங்கள் இனத்தவர்கள் சற்றுத் தயங்கி நின்றாலும், சுற்றி இருக்கும் எங்கள் இனத்தவர்களுக்கு கோபம் பொத்துக் கொண்டு தான் வரும் ஏனென்றால் உங்கள் இனத்தவர்கள் மோதத் தயங்கும் எங்கள் இனத்தவர் இருவருக்கும் வெறியூட்டும் வகையில் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். இதனால் எங்கள் இனத்தவர் இருவரும் பயங்கரமான முறையில் மோதி, வெற்றி பெற்ற எங்கள் இனத்தவருக்கு சொந்தமானவர் சபாஷ் போட்டு அவர் கட்டிய பந்தயப் பணத்தையும் எடுத்துக்கொண்டு வெற்றிப் பெருமிதத்துடன் போய்விடுவார். ஆனால் வெற்றிபெற்ற எங்கள் இனத்தவர் "இவர்களின் பந்தய விளையாட்டினால் என் இனத்தைச் சேர்ந்த ஒருவரை எவ்வளவு கடுமையாகத் தாக்கிக் காயத்தை உண்டு பண்ணி விட்டேன்!" என்று வருத்தப்படுவார்.

ஒரு நாட்டில் எங்கள் இனம் அதிகமாக இருக்கிறார்கள் என்றால் வெளிநாடுகளுடன் தொடர்புகொண்டு எங்களில் ஆயிரக்கணக்கானவரைச் சாகடித்து, எங்கள் மாமிசம் கெட்டுப் போகாமல் இருக்க 'ஐஸ்' பெட்டியில் வைத்து கப்பல் மூலம் வெளிநாட்டுக்கு அனுப்பி விடுகிறார்கள். உயிர் இழந்த எங்கள் இனத்தவர்கள் ஐஸ் பெட்டியில் வைக்கப்படும் காட்சியைக் கண்டுமா உங்கள் உள்ளம் உருகவில்லை?

எங்களையும் சுதந்திரமாக வாழ விடுங்கள் என்றுதான் நாங்கள் கேட்கிறோம். எங்கள் இனத்தவர்கள் சந்தோஷத்தோடும் துன்பம் தொல்லை எதுவும் இல்லாமல் பூரண சுதந்திரமாகவும்வாழ விடுங்கள்! அப்படி நீங்கள் சுதந்திரம் கொடுக்கா விட்டால் நாங்கள் ஆர்ப்பாட்டம் செய்து எங்கள் கோரிக்கைகளை ஐக்கிய நாடுகள் சபையிடம் சமர்ப்பித்து, பூரண சுதந்திரம் கேட்கத் தவற மாட்டோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூலதனம்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

"எங்கேயம்மா உந்தச் சீலை"

"அதுவும் அந்தப் புண்ணியவாள் வாங்கித் தந்தது. மாதம் முடியக் காசு குடுக்க வேணும்"

"அப்ப எங்களுக்கு வாங்கேல்லையோ"?

"இந்தக் காசைக் குடுத்திட்டு வாங்கித்தாறன்"

"ஓ...அவதா னெண்டால் வாங்கிப் போடுவா...எங்களுக்குத் தான்......"

"எட தின்னியளே உது என்ன கண் கெட்ட கதையடா, போன கிழமைக்கு முந்தின கிழமை எருவித்துப் போட்டு உங்களுக்கு வாங்கித் தரேல்லேயேடா, உங்களுக்குத்தானேயடா வாங்கி வாங்கித்தாறன், அப்ப நான் ஒன்டுமில்லாமல் என்னம் பொண்ணைடக் காட்டிக் கொண்டு திரியட்டே எனக்கு எரிச்சல் வருகுது. எப்பிடி வாங்கிக் குடுத்தாலும் நான் கேக்கிறது உந்தப் பேர்தானே"

* *

அன்னம்மாவின் மனம் குமைகிறது.

"அட செல்வம்...டேய்... ஒழும்படா ஒழும்பி உந்தப் போத்திலுகளைக் கழுவடா"

"ம்... இது பெரிய...கரைச்சல்... சும்மா படுக்கவும் விடமாட்டா விடியக் காத்தாலை......"

"ஓ...உங்களுக்குக் கரைச்சலாய்த் தானிருக்கும்... நான் இஞ்சை நாரி முறியச் சந்து முறிய இராவிராவாயிருந்து ஓலை இழைச்சு கோம்பை பீலி, நா னொருத்தி படுற பாடில்லை.-"

அன்னம்மாவின் இதயம் ஆடி அசைகிறது; அவளுக்கு விம்மலும் அழுகையும் வருகிறது.

"எட செல்வம் கோத்தைத எங்கையடா"

"உங்கான பாருங்கோ"

சீறிச் சினந்து கொண்டு போத்தல்களைக் கழுவிக் கொண்டிருக்கின்றுன் செல்வம். அவனிடம் செல்லாச்சி கேட்ட கேள்விக்கு வேண்டா வெறுப்பாகப் பதில் கொடுக்கின்றுன்.

"இஞ்சை நான் இருக்கேலாமை வாங்கிக் குடுத்துப் போட்டு காலமை பின்னேர மெண்டு திரியிறன்... நீங்கள் உப்பிடித்தான் சொல்ல வேணும்...இல்லை... உண்ணுணை, அது நான் வேண்டிக் குடுத்த லேச் சொல்லு...எங்கையடா சொல்லன்ரா"

"உங்கை மாட்டுக் கொட்டிலுக்கை பாருங்கோ"

"இஞ்சை அன்னம்மா நீ இதோடை எத்தனை தரம அலக்கலிச்சுப்போட்டாய்... ஆ...இதுகும் ஒரு...வே..." ஏசிக்கொண்டு மாட்டுக் கொட்டில் பக்கம் செல்கிறுள் செல்லாச்சி.

நான்கு கால்களையும் சோர்வு பெற எறிந்துவிட்டு கண்கள் நிலைகுத்தி நிற்க, மணி இலையான்கள் 'கிணு கிணு' வென்று மொய்க்க, உதரம் உணவு ஜீரணிக்க முடியாத காரணத்தால் வீங்கி உயர்ந்திருக்க, பிணமாகிக் கிடக்கிறது அன்னம்மாவின் பசுமாடு. அதன் முன் அவள் உருகியோடும் மெழுகுவர்த்தியாகி கண்களிலிருந்து கண்ணீர் பொலு பொலு வென்று ஓட அந்தப் பசுமாட்டின் கன்றுக் குட்டியைத் தடவிக் கொண்டு நிற்கிறுள். அவள் பால் கறக்கக் கொண்டு சென்ற செம்பு வெறுமையாக ஒரு மூலையில் கிடக்கிறது.

பசுக்கன்று 'அம்...மா' என்று அலறுகிறது. இந்தக் காட்சியைக் கண்டதும் செல்லாச்சியால் வாய் திறந்து ஏச முடியவில்லை. அவளும் கல்லாகச் சமைந்து நிற்கிறுள்.

அன்னம்மாவின் மூலதனமே அழிஞ்சு கிடக்கிறது.

## சங்கப் பலகை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கவியோகி சுத்தானந்தரின் 'சமயோக சித்தாந்தம்' மலருக்கு அணி செய்கிறது. "விரலுககு விரலுண்டு. வேற்றுமை—அவை, வேலை செய்யும்போது ஒற்றுமை" என்னும் கவிதை மூலம் ஒருமை வழியை விளக்கியுள்ளார், கவியோகி.

சமயோகத்தை எப்படிச் சாதிப்பது என்பதை விரிவாக விளக்க கவியோகி முன் வந்துள்ளார். நல்ல சந்தர்ப்பம்; சமய வாதிகள் பயன் படுத்துவார்களாக.

இளம் எழுத்தாளர் ஆண்டு விழாவில் அரங்கேறிய "பாடிப் பயனென்?" என்ற சத்திய சீலனின் கவிதை வெளி வந்துள்ளது. நல்ல இளம் கவிஞர்கள் நம் மத்தியில் உளர் என்பதைக காட்டுகிறது.

மற்றும் "வாழ்வளிக்கும் தண்ணீர்" என்னும் சர்மாவின் கட்டுரையும், பச்சையப்பன் கல்லூரி இராமலிங்கனின் "தேன் துளிகளும்" வையித்திலிங்கனின் 'விஞ்ஞான மாயை" ஆகிய விஞ்ஞானக் கட்டுரைகளும் மாணவர்களுக்குப் பயன் படும்.

"என்னைக் கவர்ந்த என் கவிதை" என்னும் புதிய அம்சத்தை 'நீலாவணன்' துவக்கிவைத்துள்ளார். வரவேற்கக் கூடியது.

அம்பியைப் பற்றி அன்று கூறியது தவறில்லை என்பதை, அம்பியின் சில கவிதைகளுக்கு விமர்சனம் செய்து தனது குறி தவறவில்லை என்பதை நிரூபிக்கிருர் கனக செந்திநாதன்

"லதிகா" என்னும் புதிய பட்டதாரிப் பெண் 'எழுத்தாளர் தம்பிக்கை' என்னும் சிறு கதையுடன் எழுத்துலகில் அடியெடுத்து வைக்கிருர் எதிர்காலம் நம்பிக்கை தருகிறத.

ஓவிய மன்னர் மாதவனின் அட்டைப் படம் மலருக்கு ஒளி கொடுக்கிறது

மற்றும் பண்டிதர் நடராஜன், முருகையன, திருநாவுக்கரசு, அருணகிரிதாசர் ஆகியோரின் கவிதைகளும், செம்பியன் செல்வன், சொக்கன், துருவன், இராஜநாயகன் முதலியோரின் சிறுகதைகளும மலருக்கு மணம் கொடுக்கின்றன.

தமிழ் செல்வன், சம்பந்தன், பவானி, பூலோக சிங்கம் ஆகியோரின் கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன.

இத்தனைக்கும் மலரின் விலை ஐம்பது சதம் தான்.

— சங்கர்.

### கலாபி விருத்திக் கழகக் கலை விழா

சம்மாந்துறை கலாபி விருத்திக் கழகத்தின் ஆறுவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்ற கலை விழா நான்கு அரங்கமாக நடைபெற்றது. இதற்கு ஜனுப் எம். வை. எம். உசைன் தலைமைவகித்தார்.

கழகத்தின் முதலாவது வெளியீடான எம். ஐ. எல். பக்கீர்த்தம்பி அவர்களின் "உரை மலர்" நூல், திரு கே. நல்லநாதன் பி. எஸ். ஸி. அவர்கள் தலைமையில் அரங்கேற்றம் செய்யப்பட்ட போது ஜனுப் யூ. எஸ். தாவூத் அவர்கள் அதனை அறிமுகம் செய்துவைத்தார். அதைத் தொடர்ந்து பொறியியல் வல்லுனர் எம். எம். இஸ்மாயில் (ஐ. ஸி. ஈ.) நூல் ஒன்றை வாங்கி விற்பனையை ஆரம்பித்து வைத்தார்.

ஜனுப் யூ. எம். சுலைமாலெவ்வை அவர்கள் தலைமையில் நடைபெற்ற கதம்ப விழாவில் கிராமியக் கோலாட்டம், நாட்டுப் பாடல், குலவைப் போர், புல்லாங்குழலிசை, நாடகம் ஆகியன நடைபெற்றன. துணைச் செயலாளர் எம். முஸ்தபா நன்றியுரை நிகழ்த்தியதும் விழா இனிது முடிந்தது.

# கழகச் செய்திகள்

### கைதடி கிழக்கு இந்து வாலிபா சங்கம்

சுந்தரமூர்த்தி சுவாமிகளது குரு பூசை 9-8-1962 புதன்கிழமை பி. ப. 6 மணிக்கு கைதடி கிழக்கு இந்து வாலிபர் சங்கத்தின் ஆதரவில் ஜனசமூக நிலைய மண்டபத்தில் உயர்திரு ஆ. பொன்னையா அவர்கள் தலைமையில் செல்வன் தி. இராஜகுலவீரசிங்கத்தின் திருமறை ஓதலுடன் ஆரம்பமாகியது.

சங்க விவேகானந்த சைவ சமய வகுப்பு மாணவ மாணவிகள் பக்திப் பாடல்கள் பாடினர். உயர் திரு. முத்துத்தம்பி ஆறுமுகம் அவர்களால் "சுந்தர மூர்த்தி நாயனர்" என்னும் பொருள் பற்றி அரியதோர் விரிவுரை நிகழ்த்தப்பட்டது.

மாணவ மாணவிகளுக்கான கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடாத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

### கலைமன்ற ஆரம்பம்

வெள்ளவத்தை —ரஞ்சன் வீதியிலுள்ள "யோகா இல்லத்தில்", "விமலா ஸ்ரீ உதயணன் குழு" என்ற பெயரில் ஒரு கலா மன்றம் அங்குராார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இவ் வைபவத்தில் பல பிரமுகர்களும் கலந்து கொண்டனர், ம் மன்றத்தின் நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

திரு. த. பாலச்சந்திரன், காப்டன். எம். ராஜநாதன், திரு. த. சொக்கநாதன், திரு. வை. முத்துகுமாரசுவாமி, பண்டிதை. அமிர்தாம்பிகை சதாசிவம், திருமதி. தங்கரத்தினம் முத்துக்குமாரசுவாமி ஆகியோர் போஷகர்களாகத் தெரிவு செய்யப் பட்டனர்.

தலைவர்: திரு. ந. தனபாலசிங்கம், உப தலைவர்கள்: திரு. மு. ஆலாலசுந்தரம், திரு. மு. அஜித் அரவிந்தன். இணைக் காரியதரிசிகள்: திரு. சொ. விமலநாதன், பழுகாமம் ஞானமணியம், பொருளாளர்: திரு. மு. நல்லந்துவன். நாடக டைரக்டர்: திரு. நா. பொ. தருமலிங்கம். நடன டைரக்டர். குமாரி. பாலசுந்தரி கனகசபை.

முதல் தயாரிப்பான "வாடா மலர்" என்ற நாடகத்தின் ஆரம்ப பூஜையும் மேற் கூறிய தினத்திலேயே நடைபெற்றது. இந் நாடகம் எதிர்வரும் தீபாவளித் தினத்தன்று அரங்கேற்றப் பட இருக்கிறது.

### வெலிசறை அருந்ததியர் சங்கம்

அகில இலங்கை அருந்ததியர் வெலிசறைக் கிளைச் சங்கத் திறப்பு விழா சென்ற 11-8-62-ல் வெலிசறை துணைத் தலைவர் திரு. அ. பி. சுந்தர ராஜ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

திரு. கு. க. பிச்சையா ஆரம்ப உரை நிகழ்த்தினுர்.

தலைவர் சங்கத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில், "இவ்விதமான சங்கங்கள் மூலம்தான் சமூக மக்களுக்கு சேவை செய்ய முடியு" மென்றும் "அகில இலங்கையிலுமுள்ள நம் சமூக மக்கள் இருக்கும் வட்டாரங்களிலெல்லாம் கிளைச் சங்கங்கள் மத்திய சங்கத் தொடர்பு [illegible] வேண்டும்" என்றும் கூறியதுடன், "மத்திய சங்கம் நம் மக்களுக்குத் தேவையானவைகளை யெல்லாம் செய்துத் தரத் தயாராக இருக்கிறது" என்றும் கூறினுர்.

பின்பு திருவாளர்கள் க. பி. பூபாலர், கு மூ. இராசு, செ. மு. இராமையா, நெ. கா சிவஞானம், அ. பொன்னையா ஆகியோர் பேசிய பின், கீழ்க் கண்டவர்கள் நடப்பு வருட நிர்வாகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

திரு. அ. சூசை, தலைவர், திரு. அ. பொன்னையா, செயலாளர், திரு. பி. பேச்சிமுத்து, பொருளாளர்.

மத்திய சங்கப் பிரதிநிதிகளாக திரு. எஸ். பால், திரு. எஸ். கந்தசாமி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

### ச. ச. தொழிலாளர் சங்கக் கூட்டம்

அப்புத்தளை மாவட்ட இலங்கை சலவை, சலூன் தொழிலாளர் சங்கக் கூட்டம் 11-8-62-ல் கதிரேசன் கோவிலடியில் நடைபெற்றது. கூட்டத்துக்கு திரு. கே. அங்கமுத்து தலைமை தாங்கினுர். பொதுக் காரியதரிசி திரு. ஆர். பெருமாள், சங்கத்தின் நடவடிக்கைகளையிட்டு விளக்கமாகப் பேசினுர். தோட்டத்து நிர்வாகிகளே, தோட்டத்துள் வேலை செய்யும் சலவை, சலூன் தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்கவேண்டுமென்று தொழில் அதிகாரியைக் கோரிய போது, அவர் கொடுத்த பதிலும் பொதுச் செயலாளரால் சமர்ப்பிக்கப் பட்டது.

அப்புத்தளை செல்வகந்தைத் தோட்டத்தில் சலவைத் தொழிலாளருக்கு சம்பளத்தில் அநீதி இழைக்கப் பட்டது. தொழிற் சங்கப் பிரதிநிதிகள் தலையிட்டு, நீதி பெற்றனா.

### கோப்பாயில் தமிழ் விழா

கோப்பாய் கலை வளர்ச்சிக் கழகத்தின் மூன்ருவது ஆண்டு நிறைவை யொட்டி ஓர் முத்தமிழ் விழாவை இம்மாதம் (ஆவணி) 24ம், 25-ம், 26-ம் திகதிகளில் கோப்பாய் வடக்கு சித்திர வேலாயுத சுவாமி கோவிலடியில் நடாத்துவதாக திரு. வ. ச. செல்வரத்தினம் அவர்கள் தலைமையில் கூடிய நிர்வாக சபை தீர்மானித்துள்ளது.

இவ்விழாவில் சொற்பொழிவுகள், சங்கீதக் கச்சேரிகள், நாடகங்கள், நடனங்கள், வசந்தன்: கரகம் ஆகிய நிகழ்ச்சிகள் இடம் பெற இருக்கின்றன.

### செந்தமிழ் நாடக மன்றம்

செந்தமிழ் வளர்ச்சி மன்றத்தின் நாடகப் பிரிவான செந்தமிழ் நாடக மன்றத்தின் செயற்குழு கடந்த 18-8-62 சனிக்கிழமை கிரிலப்பனைத் தமிழ்ப் பாடசாலை மண்டபத்தில் கூடியது. முதல் தயாரிப்பான 'சாக்ரடீஸ்' நாடகத்தை விரைவில் அரங்கேற்றுவதென்று தீர்மானிக்கப் பட்டது. செந்தமிழ் வளர்ச்சி மன்ற இணைச் செயலாளர் திரு. அன்ரனி பெர்னண்டோ கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.


## ஏஜண்டுகள் தேவை

கீழ்க்காணும் ஊர்களில் சுதந்திரன் விற்பனை செய்வதற்கு முன் பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.

| | | |
|---|---|---|
| கொத்மலி | நிவித்திகலே | நெடுங்கேணி |
| வேலணை | முள்ளியவளை | உயிலங்குளம் |
| வாரியப் பொல | புலத்சிங்கள | ரம்புக்கனை |
| மன்னம்பிட்டி | மொனராகல | நாரம்மல |
| நாத்தாண்டியா | நல்லூர் | கல்லேல்ல |
| மயிலிட்டி | அளுத்கம | நாவற்குழி |

நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி
நிர்வாகி,
"சுதந்திரன்"
த. பெ இல. 1183
194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு-12.

ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் அச்சு வேலைகள் எவையாக இருந்தாலும் சரி— அவை கவர்ச்சிகரமாகவும் உங்களுக்குத் திருப்தி அளிக்கும் முறையிலும் செய்து தரப்படும்.

பாடப் புத்தகங்கள், மலர் வெளியீடுகள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், அழைப்பிதழ்கள், வர்த்தக ஸ்தாபனங்களுக்குரிய சகல வேலைகள் யாவும் கச்சிதமாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்று விரும்புபவர்களுக்கு இதே அதற்கு உரிய இடம்:

**சுதந்திரன் அச்சகம்,**

தபால் பெட்டி 1183.
194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு-12.

தந்தி : சுதந்திரன் போன் : 3411


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org


# இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

எல்பின்ஸ்டன் (மருதானை) · றெக்ஸி (வெள்ளவத்தை) · வின்ஸர் (யாழ்ப்பாணம்) · வேல்ஸ் (கண்டி) · கிங்ஸ் (பதுளை) · இம்பீரியல் (மட்டக்களப்பு)

நெல்சன் (திருகோணமலை) · அசோகமாலா (நீர்கொழும்பு) · குயின்ஸ் (காலி)

றீகல் (அம்பாறை) · இம்பீரியல் (இரத்தினபுரி)

ஆகிய திரைகளில்



காதல் மன்னன் ஜெமினி கணேசன்—அஞ்சலிதேவி—பி. எஸ். வீரப்பா
எம். என். நம்பியார்—கே. ஏ. தங்கவேலு—கமலா லட்சுமணன்
எம். என். ராஜம்—எம். ஆர். சுவாமிநாதன்

ஆகியோர் திறம்பட நடித்த

# வீரக்கனல்

டைரக்‌ஷன்:
ஜி. கே. ராமு

வசனம்:
கண்ணதாசன்

பாடல்கள் இயற்றியவர்கள்
காலஞ் சென்ற பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்,
கண்ணதாசன், மருதகாசி

சங்கீதம்:
கே. வி. மகாதேவன்

---

5-வது வாரம்!

## சென்ட்ரல்

(மருதானை)

அந்தஸ்து — அதிகாரம் — ஆடம்பரம் அத்தனைக்கும் அப்பாற்பட்ட சக்தியே அன்பு! ஆனல்......போலீஸ் கமிஷனர் ரங்கநாதம் அன்பைவிட, அந்தஸ்தையே உயர்வாக மதிப்பவர். அந்தஸ்துக்காக எல்லாவற்றையும் இழக்கிறர். அந்த அன்பின் சக்தியை ரங்கநாதம் உணர்வதற்குள் ஒரு உணர்ச்சிக் காவியமே நடந்து முடிந்து விடுகிறது!

மற்றும்

## 6 திரைகளில்!

சிவாஜி



நம்பியார்



# நிச்சய தாம்பூலம்

ஜமுனா

ரங்கராவ்





வசனம்:
விருதை இராமசாமி

பாடல்கள்:
கவிஞர் கண்ணதாசன்

இசை:
விஸ்வநாதன்-ராமமூர்த்தி





---

## 2-வது வாரமாக ஓடிக்கொண்டிருக்கிறது!



கிங்ஸ்லி (கொழும்பு) · பிளாஸா (வெள்ளவத்தை) · வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

மனோகரா (யாழ்ப்பாணம்) · விஜயா (மட்டக்களப்பு) · ஸ்ரீ கிருஷ்ணா (திருகோணமலை)

நியூ சினிமா (குருநாகல்) · மொடேர்ன (பதுளை) · தீவொளி (நுவரெலியா)

விஜிதா (ஹட்டன்) · சாகர (சிலாபம்) · பிரின்ஸ் (காலி) · ஜெமினி (ருகலை)

எம். ஜி. ராமச்சந்திரன் * பி. சரோஜாதேவி
எம். ஆர். ராதா * அசோகன் * பி. கண்ணம்பா
சாண்டோ சின்னப்பா தேவர் * ஜெமினி சந்திரா

மற்றும் பலர் நடித்த

தேவர் பிலிம்ஸ்

# தாய் சொல்லைத் தட்டாதே

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமி[illegible] கொழும்பு, பண்டாரநாயக்க மாவத்த, 194ஏ, இலக்கத்தில்
1962-ம் வருடம் ஆகஸ்ட் [illegible] அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org